நவம்பர் 6 - 12, 2005 November 6 - 12, 2005 28 பக்கங்கள் 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI
வார மலர்



# இக்கட்டில் மஹிந்த!





# இந்தியா அதிர்கிறது



# இராணுவப் புலனாய்வுத்துறை முடக்கம்?

# இக்கட்டில் மஹிந்த

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் இரு வாரங்களே எஞ்சி உள்ளன. ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் பிரசாரங்களை முடுக்கி விட்டிருக்கும் அதே சமயம் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தான் தலைமை வகிக்கும் சுதந்திரக் கட்சியை ஜே.வி.பியின் பிடியில் இருந்து விடுவிப்பதற்கான ராஜதந்திர நகர்வுகளில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்.

ஐ.தே.கட்சியின் தலைவரும் அதனது ஜனாதிபதி வேட்பாளருமான ரனில் விக்கிரம சிங்கவுடன் எதிர்காலத்தில் இரு கட்சிகளும் இணைந்து செயற்படுவதற்கு அண்மையில் சந்திரிக்கா உடன்பட்டமையும் அவரது இந்த நகர்வுகளின் ஒரு பக்கமே என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

**மஹிந்தவின் தோல்வி சந்திரிக்காவின் வெற்றி**

சந்திரிக்காவின் தந்தையால் உருவாக்கப்பட்டு ஸ்ரீலங்காவின் அரசியல் பரப்பில் கோலோச்சிய ஸ்ரீ.ல.சு கட்சி 1977 நடைபெற்ற பொதுத் தேர்தலின் பின்னர் இருப்பிடம் தெரியாமல் உருக்குலைந்தது. இவ்வாறு அழிந்து கொண்டிருந்த கட்சிக்கு 1994 ஆம் ஆண்டு முதல் புத்துயிர் அளித்து அதை வளர்த்துக் காத்தவர் சந்திரிக்கா. தமது தந்தையால் ஆரம்பிக்கப்பட்டு தனது தாயாராலும் பின்னர் தன்னாலும் கட்டி வளர்க்கப்பட்ட கட்சியை தீவிர இடதுசாரிக் கட்சியான ஜே.வி.பி விழுங்கி ஏப்பம் விட்டு விடக் கூடாது என்பதில் இவர் மிகவும் கவனமாக இருக்கிறார்.

மஹிந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவாரேயானால் ஜே.வி.பி அவரைத் தனது கிடுக்குப் பிடியில் வைத்துக் கொண்டு சுதந்திரக் கட்சியை மட்டுமன்றி தனது குடும்பத்தையே- அதாவது பண்டாரநாயக்க குடும்பத்தையே- அழித்து விடும் என்று அஞ்சுகிறார் சந்திரிக்கா.

அதனால் மஹிந்தவின் தேர்தல் வெற்றியை விட அவரது தோல்வியையே விரும்பும் அவர் மஹிந்தவின் தோல்விக்காக தன்னால் எதையெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்து வருகிறார்.

அண்மையில் சந்திரிக்கா இரத்தின புரியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றியபோது,

''பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் பிரசாரங்களைச் சுதந்திரமாக நடத்த, தன்னை அனுமதிக்கும்படி கேட்டுக் கொண்டார். அதனால் அவரது பிரசார வேலைகளில் நான் தலையிடப் போவதில்லை''- என்று தெரிவித்துள்ளார். அத்துடன் ''உங்கள் வாக்குகளைச் சரியாகப் பாவித்து ஸ்ரீ.ல.சு கட்சியை பாதுகாத்துக் கொள்ளுங்கள்'' என்றும் கட்சியின் ஆதரவாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்த வேண்டுகோளில் மறைபொருளாக இருப்பது என்னவென்றால் மஹிந்தவை தோற்கடித்து கட்சியை ஜே.வி.பியிடம் இருந்து காப்பாற்றுங்கள் என்பதே.

அண்மையில் கட்டம்பேயில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதும் சந்திரிக்கா, ஸ்ரீ.ல.சு கட்சியை ஜே.வி.பி யிடம் இருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று ஆதரவாளர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

தனது கட்சியைச் சார்ந்த வேட்பாளரை ஆதரிக்கும் பிரசாரக் கூட்டங்களில் வைத்தே- மஹிந்த ராஜபக்ஷவின் முன்னிலையிலே- அந்தக் கட்சியை ஜே.வி.பியின் பிடியிலிருந்து காப்பாற்றுமாறு மக்களை சந்திரிக்கா கேட்டுக் கொள்வதிலிருந்து சுதந்திரக் கட்சிக்குள் ஜே.வி.பி எவ்வளவு தூரம் ஊடுருவி உள்ளது என்பதை புரிந்து கொள்ளலாம்.

அண்மையில் ஸ்ரீ.ல.சு.கட்சியின் மூத்த உறுப்பினரும் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வியில்,



வெளியுறவு அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா மஹிந்தவுக்கு ஆதரவு வழங்காவிட்டால் எதிர்காலத்தில் பிரதமர் பதவியை விமல் வீரவன்சவுக்கு அல்லது மங்கள சமரவீரவுக்கு வழங்க வேண்டிய நிலை ஏற்படும் என்று எச்சரித்து இருந்தமை ஸ்ரீ.ல.சு.கட்சி ஜே.வி.பியின் இரும்புப் பிடியில் வகையாக மாட்டிக் கொண்டுள்ளது என்பதற்கு நல்லதோர் உதாரணம். மங்கள சமரவீர ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள் ஜே.வி.பியின் நலன்களைப் பாதுகாக்கும் ஒரு மூத்த அமைச்சர் என்பதும் கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

இந்த நிலை தொடருமானால் சுதந்திரக் கட்சி மீது பண்டாரநாயக்க குடும்பத்துக்கு இருக்கும் உரிமை பறி போய் விடும் என்ற பயத்தில் சந்திரிக்கா மஹிந்தவின் காலை வாரி விடுவதற்கு மேற்கொண்டுள்ள முயற்சிகள் ரனிலின் வெற்றிக்குச் சாதகமாக அமைந்து விட்டன.

நாட்டின் ஜனாதிபதிப் பதவி ரனிலிடம் சென்றால் ஓர் இடைவெளிக்குப் பின் மீண்டும் அப்பதவி தனது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரின் கைகளுக்கு எட்டும் என்று சந்திரிக்கா எதிர்பார்க்கிறார்.



ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவை தோற்கடிக்க வைத்தால் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் தங்களைக் காப்பாற்றக்கோரி தன்னிடம் சரணடைவார்கள் என்பதும் சந்திரிக்காவுக்குத் தெரியும். அத்துடன் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் நடத்தப்படும் போது தன்னால் எதிர்க்கட்சித் தலைவியாக வரமுடியும் என்றும் சந்திரிக்கா நம்புகிறார்.

**வடக்கு-கிழக்கு தேர்தல்**

கடந்த 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ரனில்-சந்திரிக்கா சந்தித்துக் கொண்ட போது, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நீதியானதும் நேர்மையானதுமாக நடைபெறுவதற்கு தன்னாலான முழு ஒத்துழைப்பையும் தேர்தல் ஆணையாளருக்கு வழங்குவதாகவும், வடக்கு கிழக்கில் சுதந்திரமான தேர்தல் நடைபெறுவதற்குத் தேவையான ஒழுங்குகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி மேற்கொள்வதாகவும் ரனிலுக்கு சந்திரிக்கா வாக்குறுதி அளித்திருக்கிறார்.

வடக்கு கிழக்கில் ஆயுதக் குழுக்கள் இராணுவத்தின் உதவியுடன் தேர்தலைக் குழப்புவதற்குத் தயாராகி வருவதாகச் செய்திகள் கசிந்துள்ள பின்னணியில் தான் அந்த இரு மாவட்டங்களிலும் தேர்தலை ஒழுங்காக நடத்துவதற்கான உறுதிமொழி ரனிலுக்குச் சந்திரிக்காவால் வழங்கப்பட்டிருக்கிறது.

வடக்கு கிழக்கு மக்களின் வாக்குகள் தான் இந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி தோல்வியை நிர்ணிக்கப் போகின்றன. விடுதலைப் புலிகள் தேர்தலில் இருந்து ஒதுங்கி இருந்தாலும் கூட வடக்கு-கிழக்கு மக்களின் வாக்குகள் ரனிலுக்குத் தான் என்பதும் சந்திரிக்காவுக்குத் தெரியாத இரகசியம் அல்ல. அதனால் தான் வடக்கு கிழக்கு வாக்களிப்பு பற்றி ரனிலுக்கு உற்சாகமூட்டும் வகையிலான செய்தியை அவருக்குக் கொடுத்திருக்கிறார் சந்திரிக்கா.

**அநுரா என்ன சொல்கிறார்**

சந்திரிக்காவை விட அவரது சகோதரரும் வெளியுறவு அமைச்சருமான அநுரா பண்டாரநாயக்க இன்னும் ஒருபடி மேலே சென்று,

*சுதந்திரக் கட்சியைக் காப்பாற்றுவதற்கும்

*பண்டாரநாயக்க குடும்ப ஆதிக்கத்தைப் பாதுகாப்பதற்கும்

ஐ.தே.கட்சி வேட்பாளர் ரனில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு வார்த்தை நடத்தப் போவதாக பகிரங்கமாகவே அறிவித்து இருக்கிறார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் பண்டார நாயக்க குடும்பத்தையும் காப்பாற்றுவதற்கு ரனிலின் காலை சந்திரிக்காவும்- அநுராவும் பிடிக்கும் அளவுக்கு அவர்கள் இருவரினது நிலையும் கட்சிக்குள் மோசமாகி இருக்கிறது.

**சந்திரிக்காவின் ராஜதந்திரம்**

இருப்பினும் இவர்கள் இருவரும் வெளிப்படையாகவே ரனிலுக்கு ஆதரவு வழங்குவதும், மஹிந்தவின் பிரசார மேடைகளிலேயே அவரது நிலைப்பாட்டுக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவிப்பதும் மஹிந்த அணியைப் பலவீனப்படுத்தி உள்ளது. மஹிந்த அணியினரின் இனவாதப் பிரசாரங்கள் தென்னிலங்கை வாக்காளர் மத்தியில் ஆதரவைப் பெற்றிருந்தாலும் சந்திரிக்கா-அநுராவின் எதிர்ப்பிரசாரமும் பண்டார நாயக்கக்குடும்பத்தின் மீது தென்னிலங்கைக்கு உள்ள அனுதாபமும் மஹிந்தவின் வாக்கு வங்கிக்கு குறுக்கே நிற்கின்றன. சந்திரிக்காவைப் பொறுத்தவரை மஹிந்தவைத் தோற்கடித்தே ஆக வேண்டும். தனது பரம வைரியான ஐ.தே.கட்சியுடன் இவர் கைகோத்துக் கொண்டு செயற்பட முனைவது இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற ஆதங்கத்தினால் அல்ல. கட்சியையும் தனது குடும்ப ஆதிக்கத்தையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற துடிப்பினாலேயே.

**ஜே.வி.பியின் இலக்கு**

மஹிந்த இந்தத் தேர்தலில் வெற்றி பெறக் கூடாது என்ற தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள சந்திரிக்கா முனைப்புடன் செயற்படுவதைப் போல ஜே.வி.பியினரும் ரனில் வென்றுவிடக் கூடாது என்பதில் தீவிர ஆர்வம் கொண்டுள்ளனர். அக்கறை காட்டுகின்றனர். ஜே.வி.பியினருக்கு மஹிந்தவின் வெற்றியை விட ரனிலின் தோல்வியே முக்கியம்.

மஹிந்த, தனக்கென வேலைத் திட்டங்களைக் கொண்டிராத, கொள்கைகள் இல்லாத, தொலை நோக்கற்றவர் என்பது ஜே.வி.பியினருக்கு நன்கு தெரியும். அவரை தமது கைப் பொம்மையாக்கி சுதந்திரக் கட்சியை உடைப்பது வெகு சுலபமான காரியம் என்பதையும் அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அத்துடன் சுதந்திரக்கட்சி அரசாங்கத்தில் ஜே.வி.பியினர் ஒட்டிக் கொண்டிருந்த காலத்தில் மஹிந்த- ஜே.வி.பி உறவு முறுகல் நிலையிலேயே இருந்தது. இப்போது ரனிலை தோற்கடிக்க வேண்டும் என்ற ஒரு நோக்கத்துக்காகவே மஹிந்தவைக் கட்டி அணைத்து ஆரவாரம் செய்கின்றனர்.

ரனில் வெற்றி பெற்றால் தமது செயற்பாடுகள் முடக்கப்பட்டு விடும் என்பதை ஜே.வி.பியினர் நன்கு தெரிந்து வைத்துள்ளனர். அவரின் வெற்றி தமது எதிர்காலத்தை சூனியமாக்கி விடும் என்றும் அஞ்சுகின்றனர். அவரது தூர நோக்கு, தெளிவான சிந்தனை, மேற்குலகின் ஆதரவு- இவை அனைத்தும் நாட்டை கட்டியெழுப்பும் என்பதையும் அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். சீனா, ரஷ்யா, இந்தியா போன்ற நாடுகள் நீண்ட காலத் திட்டங்களின் ஊடாக வளம் மிக்க நாடுகளாக உருவாகி உள்ளதைப் போன்று தனது திட்டங்கள் மேற்குலகின் நிதிவளம் ஆகியவற்றின் ஊடாக நாட்டை ரனில் கட்டி எழுப்புவார் என்றும் இவர்கள் எதிர்பார்க்கிறார்கள். நாட்டின் இனப் பிரச்சினைக்கு முடிவு காணாத வரை ஸ்ரீலங்கா பொருளாதார ரீதியாக வளம் பெறப் போவதில்லை என்பது வேறு விடயம். ஆனால் நாம் மேலே கூறியுள்ளவைதான் ரனிலைப் பற்றிய ஜே.வி.பியின் மதிப்பீடு. நாடு பொருளாதார ரீதியாக முன்னேறும் போது மக்களால் தாம் தூக்கி வீசப்படுவார்கள் என்பதையும் இடதுசாரி சிந்தனைகள் மக்கள் மத்தியில் எடுபட போவதில்லை என்பதையும் ஜே.வி. யினர் கணித்து வைத்திருக்கிறார்கள்.

மஹிந்தவை ஆட்சியில் அமர்த்தின நாட்டில் அடக்குமுறை ஆட்சின உருவாக்கி அதன் மூலம் அதிகாரத் சுலபமாகப் பெறலாம் என ஜே. நினைக்கிறது. தமிழ் தலைப் புலிகளுட யுத்தத்தை ஆரம் வாதத்துக்கு உ தமக்குச் சாதகமா உருவாக்க மு அவர்கள் கள்.

மஹி ஆட்சி அ கிடைக்கு நாட்டில் ஜனநாயகத் அடிக்கப்படும். இவர்க மூலம் தம்மால் பெற அதிகாரத்தை இப்பே போர்வையில் பெற றனர். அவ்வளவுதான்.

**அவசரப்பட்டுவிட்**

மஹிந்தவைப் பொறு அவசரப்பட்டு விட்டார். நோக்குடன், தான் தயாரித்து நிரலின் அடிப்படையில் இணைந்து செயற்பட்டுக் கொ ஆனால் மஹிந்தவோ நாட்டி பின் தள்ளி சுயநலத்தை ஜே.வி.பியுடன் கூட்டுச் சே இனப் பிரச்சினைக்கான அ அவரால் முன் வைக்க போயிற்று.

ஜனாதிபதி வேட்பாளராக தெடுக்குப்படுவார் எனத் இனப்பிரச்சினைக்கு சமஷ் அவரது நிலைப்பாடாக இ

2001 ஆம் ஆ தேர்தலையடுத்து எதிர்க்கட் வரான பின்னர் தான் மேற் இந்திய விஜயத்தை முடித்துக் நாடு திரும்பிய மஹிந்த இன சினைக்கு சமஷ்டி முறையிலா வொன்றை நாங்கள் முன் வைப்பத இந்தியா அதற்கு நல்லதோர் உதா மாகும் என்று தெரிவித்தார்.

இவ்வாறு கூறிவிட்டு அவர் இருக்கவில்லை. சுதந்திரக் கட்சி கூட்டணி அமைப்பதாயின் இந்திய போல் ஐக்கிய இலங்கைக்குள் சம முறையை ஏற்பதாக ஜே.வி.பி அறி வேண்டும் என்றும் கருத்து வெளி இருந்தார். இன்று ஒற்றை ஆட்சியி தீர்வு காணப்படும் என்று இவர் வதைக் கேட்டு இந்திய கு மடைந்துள்ளது எனவும் அர அவதானிகள் தெரிவிக்கின்றனர். இ படியான 'பல்டி'கள் அரசியலில் சக என்பதால்தான் அரசியலில் நண்பனு இல்லை பகைவனும் இல்லை என கூறப்படுகிறது.

இப்போது பதவி மோகத்தில், கட்டான நிலையில் இருக்கிறார் மஹி வெற்றியோ, தோல்வியோ அவரு தான் அகப்பட்டுள்ள பொறியில் இரு வெளிவருவதற்கான வாய்ப்புக் மிகவும் குறைவு. ஆனால் அதிலிருந்து வெளியேறினால் அவர் கெட்டிக்காரர்தான்.

-சுபாஷ்-

> நாட்டின் ஜனாதிபதிப் பதவி ரணிலிடம் சென்றால் ஓர் இடைவெளிக்குப் பின் மீண்டும் அப்பதவி தனது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரின் கைகளுக்கு எட்டும் என்று சந்திரிக்கா எதிர்பார்க்கிறார்.

நிமிடக் கதை

## பெண் பார்க்க ...

பவி வந்து மகாபலி புரம் போக காத்திருந்ததுதான் மிச்சம். மனோ வரவில்லை. பெண்பார்க்கப் போய்விட்டானாம்...

செய்தி அறிந்ததும் அழுகையாய் வந்தது. அவளுக்கு, வீட்டுக்குப் போக முடியாது. அங்கே அவளுடைய அக்காவைப் பெண்பார்க்கும் படலம் நடந்துகொண்டிருக்கும்.

யோசித்தாள், பவி. மனம் போனபடி நடந்தாள் பவியின் அக்கா புவி. அவளுக்கு நிறைய வரன்கள் வந்தனர். வயது அதிகம். அழகு குறைவு. அவளைப் பார்க்க வருபவர்கள் பவியை விரும்பினர். எனவே, புவியை பெண் பார்க்க வரும் போது, பவியை வெளியே இருக்கும் படி வற்புறுத்தினர்.

அவளுடன் பணிபுரியும் மனோ அவளை விரும்பினான். அவனுடன் ஊர் சுற்றி, பொழுதைப் போக்கினாள். 'நேரம் வரும், டும் டும் கொட்டுவோம்' என்றான்.

இதோ... அவன் பெண் பார்க்கப் போய் விட்டானாம். துரோகி... எத்தனை இனிமையாக நடித்தான். சின்னச் சின்னச் சீண்டல்களும் சிரிப்பும் சுவைத்தனவே! எல்லாம் பொய்யா?

கண்ணீரைத் துடைத்தபடி நடந்தாள்.

உரசினால் போல் 'பைக்' வந்து நின்றது.

மனோ!

வெறுப்பை உமிழ்ந்தபடி நடந்தாள்.

"பவி நில்லு!" அவன் குறுக்கிட்டான்.

அவள் மௌனித்தாள்.

"நான் உன் அக்கா புவியைப் பெண் பார்க்கப் போனேன். பிடித்து விட்டது. நாளைக்கே நிச்சயதார்த்தம்."

சரேல் என நிமிர்ந்த பவி, கேவலுடன், "சீ! நீயும் ஒரு மனிதனா?" என்றாள்.

"மனிதன் தான்" என்றான், அவன். "அதனால் தான் என் அண்ணனுக்கு உன் அக்காவை பேசி முடித்தேன். தடை நீங்கியது. அடுத்த டும் டும் நமக்குத்தான்."

அவன் சொல்ல... வியப்புடன் முகம் மலர்ந்தாள், பவி!





ஆர்.பிரேமதாச ஜனாதிபதிப் பதவியைப் பொறுப்பேற்ற ஆண்டு

# 1988

# மனித வளத்தை மதித்தல்

மனித வளத்தை மதித்த ஆர்.பிரேமதாச அதனை தனது 'கம் உதாவ' திட்டத்திற்காக பெரிதும் பயன்படுத்தினார்.
இதன்மூலம் மக்கள் வசதியாக வாழ இருப்பிடமும் மனதுக்கு மகிழ்ச்சியும் கிடைத்தன.
இல்லாத இயலாதோரை, இருக்கின்ற இயலுகின்றவர்களாக மாற்றுவதே அவரின் பிரதான கொள்கையாக இருந்தது.
அதற்காக 'ஜனசவிய' திட்டத்தை அவர் செயற்படுத்தினார்.
ஆடைக் கைத் தொழிற்றுறையை பிரேமதாச கிராமங்களுக்கு எடுத்துச் சென்றதன்மூலம்
கிராமங்களின் உழைப்பின்மூலம் உலக வர்த்தக சந்தையை வெற்றிகொள்ளும் வழியை விளக்கினார்.
எமது வளங்களை அறிந்து தேசிய பொருளாதாரத்தை வளப்படுத்தக்கூடிய
**அத்தகைய தலைமைத்துவமே இன்று எமது நாட்டுக்குத் தேவை.**

அத்தகைய செயற்றிறன் மிக்க தலைவர்களை உருவாக்கிய கட்சி ஐக்கிய தேசியக் கட்சியே.



ஐக்கிய தேசிய கட்சி



**யுக புருஷர்களை உருவாக்கிய கட்சி ஐக்கிய தேசிய கட்சி!**

சுடர்ஒளி

நவம்பர் 06 - 12, 2005

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

## பயன்தராத யோசனைகள்

இரு பிரதான அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு பலமான சக்தியாக விளங்கினாலேயே தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நிலையான சமாதானத்தை செய்து கொள்ள முடியும் என்று ராய்ட்டர் செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.க ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான சமாதானப் பேச்சுக்களை புலிகளுடன் ஆரம்பிப்பதற்கு முன் சுதந்திரக் கட்சியுடன் பேரம் பேசி ஓர் இணக்கத்தை எற்படுத்த வேண்டும் என்றும் ரணில் கூறி இருக்கிறார்.

இது சாத்தியமாகுமா? தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு நியாயமான தீர்வை வழங்குவதற்கு தென் இலங்கைச் சக்திகள் எப்போதாவது இணங்கிய வரலாறு உண்டா? ஒரு போதும் அது சாத்தியப்படவில்லை. இனியும் சாத்தியப் படப் போவதில்லை. அப்படி இணக்கம் ஒன்று ஏற்பட்டால் அது தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றாக இருக்கமாட்டாது.

கடந்த காலங்களில் தென்னிலங்கை அரசியல் தலைவர்களை நம்பி ஏமாந்து போனதையும், தமிழ் மக்களை ஒழித்துக் கட்டும் தென்னிலங்கை அரசியல் தலைவர்களின் கபடத்தனத்தையும் தமிழ் மக்கள் இலகுவில் மறந்து விட முடியாது. தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிப்பது என்றால் அவர்கள் ஒற்றுமைப்படுவதற்கும் தயார். வழங்குவதற்கு அல்ல என்பது வரலாறு கண்டறிந்த உண்மை.

தற்போது சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களுக்கு என்று ஒரு தாயகம் இல்லை என்கிறார். பொதுக்கட்டமைப்பு வேண்டாம் என்கிறார். ஒற்றையாட்சியின் கீழ்தான் எந்தத் தீர்வும் என்கிறார்.

இப்படியானவர்களுடன் பேச்சு நடத்தி ரணிலால் இணக்கம் காண முடியுமா? சுதந்திரக் கட்சிக்குள் ஓங்கி இருக்கும் இனவாதத்தை மீறி சந்திரிக்காவினால் செயற்பட முடியுமா?

தமிழ் மக்களுக்கு ஆகக் குறைந்த உரிமைகளை வழங்குவதன் மூலம் சமாதானத்தை எட்டுவதிலேயே தென்னிலங்கையின் பிரதான கட்சிகள் திட்டமிட்டு செயலாற்றி வருகின்றன. ஏனெனில் சிங்கள மக்களின் வாக்குகளிலேயே, அவை தங்கி இருக்கின்றன. இப்படியான நிலையில் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை நடத்துவது என்பது உலகை ஏமாற்றும் ஒரு கபட நாடகமே.

நாட்டில் சமாதானம் நிலவ வேண்டும். தமிழ் மக்களுக்கு எந்த உரிமையும் வழங்கக் கூடாது என்பதே தென்னிலங்கை மக்கள் மத்தியிலும் அரசியல்வாதிகள் மத்தியிலும் இருந்து வரும் சிந்தனை.

கடந்த இருபது வருட கால போரின் கொடுமைகளையும் அழிவுகளையும் மூன்றரை வருட காலத்துக்குள் மறந்து விட்டதுதான் வேதனை தருகிறது. இதன் பிரதிபலிப்புத்தான் இரு பிரதான கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர்களும் இனப் பிரச்சினை தொடர்பாகத் தெரிவித்து வரும் கருத்துக்கள்.


மீண்டும் போர் மூண்டாலும் பரவாயில்லை. அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற பதவி மோகமே மேலோங்கி நிற்கிறது.

இனப் பிரச்சினைகுத் தீர்வாக முதலில் மாவட்ட சபை யோசனை தெரிவிக்கப் பட்டது. அது பயனற்றுப் போகவே மாகாண சபையும் பயனற்றுப் போய் சமஷ்டி மூலம் தீர்க்கலாம் என்ற கருத்து தற்போது மேலோங்கி நிற்கிறது. இதுவும் பயனற்றுப் போகுமானால் தமிழ் மக்களுக்கு எஞ்சி இருக்கும் அடுத்த தெரிவு தனிநாடுதான்.

இப்படியான ஒரு நிலைமையை உருவாக்கும் திசையிலேயே தென்னிலங்கைத் தலைமைகள் சென்று கொண்டிருக்கின்றன.

# காலம் கடந்த ஞானோதயம்

எதிர்வரும் நவம்பர் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான நாட்கள் நெருங்கிக் கொண்டிருக்க, ஸ்ரீலங்காவின் அரசியல் காலநிலை சூடுபிடித்துள்ளது. தென்னிலங்கை மக்களின், தேர்தலைப்பற்றிய ஆர்வம் அதிகரித்திருக்கும் அதேவேளை இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன என்ற மனோ நிலையில் வடக்கு-கிழக்கு தமிழ் தலைமையும் மக்களும்



இருக்கிறார்கள். இந்தப்பின்னணியில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவும், எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் கடந்த 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடி இருக்கிறார்கள்.

### தமிழ் மக்கள் - பகடைக்காய்கள்

வடக்கு கிழக்கு இணைந்த தாயகத்தையும் தமிழ் மொழியைத் தாய் மொழியாகவும் கொண்ட தமிழ் இனம் தான் இந்த நாட்டின் அரசியல் சூதாட்டத்துக்கு பகடைக்காயாக இருக்கின்றமை வரலாற்றுப்பதிவு. நீறு பூத்த நெருப்பாக ஸ்ரீலங்காவில் இருந்த இனப்பிரச்சினை 1956 ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர். டி.பண்டார நாயக்காவினால் நிறை வேற்றப்பட்ட தனிச் சிங்களச் சட்டத்துடன் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது.

அன்று முதல் இன்றுவரை ஆட்சி பீடத்தை கைப்பற்றத் துடிப்பவர்களுக்கான ஆயுதமாக இனப்பிரச்சினையே பயன் படுத்தப்பட்டுவருகிறது. இப்போது இந்தப் பிரச்சனைக்குத் தீர்வாக மஹிந்த யுத்தப்பிரகடனம் செய்கின்றார். ரணில் விக்கிரமசிங்க ஸ்ரீ. ல. சுதந்திரக் கட்சியையும் தனது கைக்குள் போட்டுக் கொண்டு சிங்கள- பெளத்த மேலாண்மையின் தனித்துவத்தைப் பாதுகாக்கும் அதேவேளை இரு கட்சிகளும் இணைந்து தயாரிக்கும் ஒரு அரைகுறைத் தீர்வை அவர் பின்னியுள்ள சர்வதேச வலைப் பின்னலுக்குள் திணித்து அதனூடாக அந்தத் தீர்வை தமிழ்த் தலைமையின் தலையில் கட்டிவிட நினைக்கிறார். இது மிகவும் ஆபத்தானது.

### திட்டமிட்ட அழிப்பு

ரணிலாக இருந்தாலென்ன, மஹிந்தவாக இருந்தாலென்ன தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை என்ன விலை கொடுத்தாவது அடக்கிவிட வேண்டும் என்பதில் ஆர்வமாக இருக்கின்றனர். தமிழ் இனத்தை அடக்க, பெளத்த சிங்கள மேலாண்மை முயற்சிக்கும் இந்த நீண்ட தொடர் கதைக்கு முற்றுப்புள்ளி வைக்க இன்னும் இவர்கள் இருவரும் தயாராக இல்லை.

மாறிமாறி பதவியில் அமர்ந்த அரசாங்கங்கள் தமிழ் மொழியை ஆட்சியிலிருந்து அகற்றியது மட்டுமின்றி மலையக மக்களின் வாக்குரிமையையும் பறித்து அவர்களை அரசியல் அனாதைகளாக்கின. எல்லாவற்றுக்கும் மேலாக இவை திட்டமிட்டு அம்பாறையை தமிழ் தேசத்திலிருந்து அபகரித்தது மட்டுமன்றி திருகோணமலை மாவட்டத்தில் சேருநுவர தொகுதியை சிங்கள மக்களுக்காக உருவாக்கின.இப்போது முல்லைத்தீவில் மணலாற்றை விழுங்கிவிடும் கனவில் மிதந்துகொண்டிருக்கின்றன.

கதை இத்தோடு முற்றுப்பெறவில்லை. 1956 ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டதை அடுத்து 1957 இல் தமிழ் மக்களை [illegible] உருவான பண்டா-செல்வா ஒப்பந்தம் சிங்கள-பெளத்த மேலாண்மை வாதிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் கிழித்து எறியப் பட்டது.

1966 இல் டட்லி-செல்வா ஒப்பந்தத்திற்கும் இதே கதிதான் ஏற்பட்டது.1972 இல் கல்வித்துறையில் அறிமுகப் படுத்தப்பட்ட தரப்படுத்தல் முறையினால் தமிழ் மாணவர்களது கல்வி தரைப்படுத்தப்பட்டது. 1983 இல் ஐ.தே.கட்சி அரசாங்கத்தினால் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் தமிழ் மக்களுக்கு எதிராக திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்ட இனவன்முறை காரணமாக பெரும் உயிர், உடமை இழப்புகளுக்கு மத்தியில் தமிழர்கள் தமது தாயகத்தைவிட்டு, உறவுகளை பிரிந்து வெளிநாடுகளுக்கு புலம்பெயர வேண்டியதாயிற்று.

மேலும் 1987 இல் முன்வைக்கப்பட்ட மாகாணசபை முறையோ அல்லது 2000ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட அதிகாரப் பகிர்வு யோசனைகளோ இனப்பிரச்சினைக்கான தீர்வில் எந்தவித முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. இவை எல்லாம் இந்த நாட்டின் தமிழ் பேசும் இனம் சிங்கள-பெளத்த மேலாண்மை வாதிகளினால் குதறி எறியப்பட்ட வரலாற்றுப் பதிவுகள்.

### காலம் கடந்த ஞானோதயம்

இத்தகைய கபட நாடகங்களை எல்லாம் கண்டு ஏமாந்த தமிழ் இனத்தின் பார்வைக்கு,மீண்டும் ஒரு நாடகம் ரணில்-சந்திரிக்கா இனப்பிரச்சினைத் தீர்விற்காக இணைந்து செயற்பட இணக்கம் கண்டுள்ளனர் என்ற செய்தி ஊடாக அரங்கேற்றப்பட்டு இருக்கிறது.

இவர்களின் இந்தச் சந்திப்பை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் காலம் கடந்த ஞானோதயம் என்று வர்ணித்து இருக்கிறார். இந்த நாட்டின் இரு பெரும் கட்சிகளும் இணைந்து இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற எண்ணம் உண்மையாகவே இவ்விரு தலைவர்களுக்கும் இருக்குமானால் எப்பொழுதோ இதற்குத் தீர்வு கண்டிருக்க முடியும். சந்திரிக்காவைப் பொறுத்த வரை கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம் செய்கிறார் அவர்.

அவர் பதவி விலகுவதற்கான காலம் நெருங்கிக் கொண்டு இருக்கிறது. அவர் தலைமைத் தாங்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயே அவாது செல்வாக்கு சரிந்துவிட்டது.

கட்சியின் மூத்த அமைச்சர்களில் அநேகமானோர் மஹிந்தவின் பின்னால் அணி திரண்டு நிற்கின்றனர். பசி வந்திட பத்தும் பறந்து போம் என்று சொல்வதைப் போல அதிகாரப் பசி அவர்களை ஆட்டி வைக்கின்றது. அதனால், கட்சிக் கொள்கைகளை காற்றில் பறக்க விட்டு, தலைமையை புறக்கணித்து தமது பதவிகளைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற துடிப்பில் மஹிந்தவிற்குத் தமது முழு ஆதரவையும் அவர்கள் வழங்குகிறார்கள். இந்த நிலையில் தான், மஹிந்தவுடன் தேர்தல் உடன்பாடு செய்துள்ள ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச சந்திரிக்காவின் பேச்சு இனிமேல் சுதந்திரக் கட்சியினரிடம் கூட எடுபடாது என்று நையாண்டி செய்துள்ளார்.

### வரலாற்றுத் திருப்புமுனை

ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த என்ன செய்கிறார்? வெற்றியே எனது இலக்கு என்று சொல்லிக் கொண்டு தான் சார்ந்த கட்சிக்கோ அல்லது அதன் தலைமைக்கோ சிறிதும் வளைந்து கொடுக்காமல் தன்னிச்சையாகவும், எதேச்சாதிகாரத்துடனும் தனது தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றார் அவர்.

ரணில் - சந்திரிக்கா சந்திப்பு தமிழ் மக்களைப் பொறுத்தவரை சாதிக்கப் போவது எதுவும் இல்லை. ஆனால், துருவங்களாக இருந்த இரு கட்சித் தலைவர்களும் இணைந்து இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற முடிவு எடுத்ததே ஒரு வரலாற்றுத் திருப்பம் தான். இதைக் கண்டு கொள்ளாமல் இவர்கள் இருவரின் சந்திப்புப் பற்றி பத்திரிகைகள் எழுதிய மை காய்வதற்கு முன்னரே இனப்பிரச்சினைக்கு புதிய அணுகுமுறை வேண்டும் என்று அறிவித்து விட்டார் மஹிந்த. அது மட்டுமல்ல, சுதந்திரக் கட்சிக்கு நாட்டை வழிநடத்திச் செல்லும் ஆற்றல் இருக்கிறது என்றும், ஐ.தே.கட்சியின் ஆதரவு [illegible] தேவை இல்லை என்றும் முழக்கமிட்டிருக்கிறார் அவர்.

தவிர, மஹிந்தவின் நம்பிக்கைகுரியவரும், அமைச்சருமான மங்கள சமரவீர, ரணில் விக்கிரமசிங்கவின் சூழ்ச்சியில் ஸ்ரீ.ல.சு.கட்சியினர் விழுந்து விடக் கூடாது என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வருமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி சந்திரிக்கா முன்னர் பல தடவைகள் அழைப்பு விடுத்திருந்தார். அந்த அழைப்புகளை அவர் ஏற்றாரா? 2000 ஆம் ஆண்டில் ஸ்ரீ.ல.சு கட்சி இனப் பிரச்சினைத் தீர்வுக்காக முன்வைத்த அரசியலமைப்பு சீர்திருத்தங்களை மூர்க்கமாக எதிர்த்தது ஐ.தே.கட்சி. இவ்வாறு தேசியப் பிரச்சினையைத் தீர்க்கவிடாது அப்போது தடுத்த ரணில், இப்போது இதற்குத் தீர்வு காண எமக்கு அழைப்பு விடுப்பது வேடிக்கையாக இருக்கிறது என்று மங்கள மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ஸ்ரீ.ல.சு கட்சி பிளவு பட்டுப் போயிருக்கும் நிலையில்- சந்திரிக்காவின் தலைமையிலிருந்து தூர விலகி நிற்கும் நேரத்தில்- இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர் ரணிலுடன் எப்படிக் கூட்டாகச் செயற்படப் போகிறார் என்பது அவருக்கு மட்டுமே விளங்கும்.

வெறும் ஜனாதிபதி வேட்பாளராக இருக்கும் நிலையிலேயே, தன் சார்ந்த கட்சியின் தலைவி சொல்வது எதனையும் காதில் போட்டுக் கொள்ளாத மஹிந்த,



ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் எப்படி நடந்து கொள்வார் என்று விளங்கிக் கொள்வது கடினமான விடயம் அல்ல. சுருக்கமாகச் சொன்னால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரை சந்திரிக்காவின் இந்த முயற்சியை விழலுக்கு இறைத்த நீர் என்றே விளக்கலாம்.

அடுத்து நாம் ரணில் விக்கிரமசிங்கவின் பக்கம் எமது கவனத்தைத் திருப்புவோம். அவர் நம்பிக்கைக்கு உரியவரா? காலத்துக்குக் காலம் அவர் இனப்பிரச்சினை பற்றிக் கூறும் கருத்துக்கள் தமிழ் மக்களின் நம்பிக்கையைச் சிதறடிப்பனவாகவே அமைந்துள்ளன.

ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில்சமஷ்டி முறையின் கீழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருந்த அவர் நாட்டின் இறைமை பாதுகாக்கப்பட்டு, அதற்கு அமைவாக வடக்கு - கிழக்கு பிராந்திய சபை ஒன்றுக்கு போதிய அதிகாரங்களைக் கொடுக்கும் அரசியல் தீர்வு ஒன்றை இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து முன்வைக்கத் திட்டமிட்டுள்ளதாக இப்போது கூறுகிறார்.

இவ்வாறு அவர் காலத்துக்குக் காலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக எதை எதையோ கூறுவது இது பற்றி அவர் இன்னும் தீர்க்கமான, இறுக்கமான முடிவுக்கு வரவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

**நேதாஜி**

சமஷ்டி ஆட்சி பற்றி வாயளவில் உச்சரிக்கும் அவர் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதை, தமிழருக்குத் தாயகம் உண்டு என்பதை, தமிழ் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை ஏற்றுக் கொண்டு பகிரங்கமாக அதை அறிவிப்பாரா என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் [illegible] கேட்டிருப்பது முற்றிலும் சரியானதே. இவற்றை ஏற்காத நிலையில் சமஷ்டியை எப்படி உருவாக்க முடியும் எனவும் அவர் [illegible] கேட்கிறார்.

(7-ஆம் பக்கம் பார்க்க)

# கட்சி தாவும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவேட்பாளரை ஆதரிப்பது என்பது குறித்து முஸ்லிம் அரசியல் தலைவர்கள் இன்னும் ஓர் உறுதியான கொள்கையில் இருப்பதாக தெரியவில்லை.

இவர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து ரணில் விக்கிரமசிங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய வெவ்வேறு வேட்பாளர்களை ஆதரித்தாலும் கூட தாங்கள் ஆதரிக்கும் வேட்பாளரை தொடர்ந்தும் ஆதரிப்பார்களா என்பது கேள்விக் குறியே.

ஒரு குறிப்பிட்ட வேட்பாளரை ஆதரிப்பதாகக் கூறுவதும் பின்பு அவரது கொள்கைகள் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராகவுள்ளதாகக் கூறிக்கொண்டு மற்ற வேட்பாளர் பக்கம் சாய்வதும் சாய்வதற்கு முயற்சிகள் எடுப்பதும் சமீபகாலமாக இடம்பெற்று வரும் நிகழ்வாகிவிட்டது.

## ஹாபீஸ் நஸீர் அஹம்மட் மஹிந்தவின் பக்கம் பல்டி

ஐ.தே.க வின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்த முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஹாபீஸ் நஸீர் அஹம்மட் மஹிந்தவின் பக்கம் பாய்ந்துள்ளார்.

ஏழு அரசியல் கட்சிகளினதும் பல அமைப்புக்களினதும் கூட்டமைப்பான முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பினர் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்ற முடிவுக்கு வருமுன் பிரதான வேட்பாளர்களான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைத் தனித் தனியாக சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இவர்கள் முன்வைத்த 24 அம்சக் கோரிக்கைகளை தேர்தலின் பின் நிறைவேற்றுவதாக எழுத்து மூலம் உறுதியளிக்கும் வேட்பாளருக்கு தமது ஆதரவைத் தருவதாக நிபந்தனை விதித்தனர்.

கோரிக்கைகளை வாசித்தறிந்த இரு வேட்பாளர்களும் எழுத்து மூலம் உறுதியளிக்க மறுத்து விட்டனர். ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் அனைத்துக் கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதாகவும் தங்களின் ஆதரவைத் தமக்கு வழங்குமாறும் இரு வேட்பாளர்களும் இக்கட்சியினரைக் கேட்டுள்ளனர்.

இதற்கு உடன்பட மறுத்த இக்கட்சியினர் ஜனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டியிட முடிவெடுத்தனர். இக்கூட்டமைப்பின் சார்பில் இதன் தலைவர் ஹாபீஸ் நஸீர் அஹம்மட் வேட்பாளராகவும் நிறுத்தப்பட்டார்.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு முதல் நாள் மீண்டும் இக்கட்சியினரை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினார் ரணில் விக்கிரமசிங்க. இவர்கள் முன்பு வைத்த அதே கோரிக்கைகளை மீண்டும் பரிசீலித்துப் பார்த்த- ரணில் விக்கிரமசிங்க அக்கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக எழுத்து மூலம் உறுதியளித்தார்.

இதனையடுத்து இவர்கள் தனித்துப் போட்டியிடும் முடிவைக் கைவிட்டுவிட்டு ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க முன் வந்தனர்.

இது இவ்வாறு இருக்கையில், ஒக்டோபர் மாத இறுதியில் முஸ்லீம் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஹாபீஸ் நஸீர் அஹம்மட் திடீரென மஹிந்தவின் பக்கம் பல்டி அடித்தார்.

இவரின் திடீர் பல்டி எதிர்பார்க்காத ஒன்றாக இருந்தாலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஹாபீஸ் நஸீர் அஹமட்டையும் அவரது கூட்டமைப்பையும் தம் பக்கம் வளைத்துப் போட எடுத்து வந்த நடவடிக்கை நாம் அறிந்ததே.

ரணிலுக்கு ஆதரவு வழங்குவதாக முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்ததன் பின்பும் பிரதமர் இந்தக் கட்சியை தன் பக்கம் இழுத்துப்போட முயற்சி செய்து வருகிறார் என்ற உண்மையைக் கடந்த வாரம் நாம் அரசியல் கட்டுரைப் பகுதியில் விரிவாகக் குறிப்பிட்டிருந்தோம். இப்போது அது உண்மையாகிவிட்டது.

## நஸீர் அஹம்மட்டைத் தலைமைப் பதவியிலிருந்து விலக்க முயற்சி

பிரதமர் அவரது முயற்சியில் வெற்றி பெற்றார் என்றாலும், அது பூரண வெற்றியென எற்க முடியாது. காரணம் பிரதமருடன் இணைந்தது ஹாபீஸ் நஸீர் அஹம்மட் என்ற தனிமனிதனே தவிர அவர் தலைமை வகிக்கும் முஸ்லீம் தேசியக் கூட்டமைப்பு அல்ல.

ஐ.தே.கட்சிக்கு ஆதரவு வழங்கும் முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் இல்லை. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்க ஹாபீஸ் நஸீர் அஹம்மட் எடுத்த முடிவானது அவரது தனிப்பட்ட முடிவு. எமது கூட்டமைப்பின் முடிவல்ல என முஸ்லீம் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நஸீர் அஹம்மட்டின் இத் திடீர் தீர்மானத்தால் அதிதிருப்தி அடைந்திருக்கும் முஸ்லீம் தேசியக் கூட்டமைப்பினர், இவரது தலைமையின் கீழ் செயற்படத் தயாரில்லையெனத் தெரிய வருகின்றது.



மஹிந்தவுக்கு ஆதரவு வழங்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வில் நஸீர் அஹம்மட்

இவரைத் தலைமைப் பதவியில் இருந்து நீக்க முஸ்லீம் தேசியக் கூட்டமைப்பினர் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இக் கூட்டமைப்புக்குப் புதிய தலைவர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் நியமிக்கப்படுவார் எனவும் தெரிவிக்கப் படுகின்றது. இது தொடர்பாக முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு கூடி ஆராய்ந்து வருவதை அறிய முடிகின்றது.

## தனது முடிவை நியாயப்படுத்த முயலும் நஸீர் அஹம்மட்

பிரதமரை ஆதரிக்கும் இவர் எடுத்த முடிவை முஸ்லீம் தேசியக் கூட்டமைப்பும் ஐ.தே.கவும் எதிர்த்தாலும் கூட தான் இந்த முடிவு எடுப்பதற்கு ஐ.தே.கவே காரணம் என்கிறார் நஸீர் அஹம்மட்.

முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக ரணில் விக்கிரமசிங்க எழுத்து மூலம் உறுதியளித்தாலும் கூட ரணில் அவற்றை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை எமக்கில்லை. ரணிலின் தற்காலிக நடவடிக்கைகள் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன.

ரணிலுடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸின் செயற்பாட்டால் எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் நிராகரிக்கப்படும் நிலை தென்படுகிறது. ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் அதன் சார்பில் ரணிலிடம் கோரிக்கைகளை முன் வைத்தாலும் அவை நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் மு.காவுக்கு அக்கறை இல்லை.

மு.கா மீண்டும் ஐ.தே.கவுக்கு அடிமையாக செயற்படப் போவதாக நாம் அறிகின்றோம். அதனால், எமது கோரிக்கைகளுக்கு வலு இல்லாமல் போகும் அச்ச நிலை தோன்றியுள்ளது. இவ்வாறான காரணங்களால்தான் நாம் பிரதமருக்கு ஆதரவு வழங்க முன் வந்தோம் என்கிறார் நஸீர் அஹம்மட்.

சமாதானத்தை உருவாக்கக்கூடிய ஒரு தலைவர் ரணில் மட்டும்தான். மஹிந்த இனவாதி. மஹிந்தவால் முஸ்லிம்களின் அடிப்படைப் பிரச்சினைகளை என்றைக்குமே தீர்க்க முடியாது. அவர் ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய இனவாதிக் கட்சிகளுடன் கூட்டச் சேர்ந்திருக்கிறார் என்றும் கூறிய நஸீர் அஹம்மட் பிரதமரை ஆதரிக்க முன் வந்தது வேடிக்கையாகவே உள்ளது.

''அரசியலில் இதெல்லாம் சகஜம் அப்பா'' என்பதற்கு இவர்கள் போன்ற அரசியல்வாதிகள் நல்ல உதாரணம்.

## இன்னும் சில தலைவர்கள் பல்டி அடிக்கத் தயார்

நஸீர் அஹம்மட் அடித்த பல்டியைத் தொடர்ந்து இன்னும் பல முஸ்லீம் அரசியல் தலைவர்களும் தாம் இப்போது ஆதரவு வழங்கும் வேட்பாளரை வெட்டிவிட்டுத் தாம் விரும்பும் வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்கத் தயாராகி வருவதாகத் தெரிய வருகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸில் இருந்து பல்டி அடித்து அரசின் பக்கம் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்ட பிரதி அமைச்சர் அன்வர் இஸ்மாயில் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக் குழுவைச் சேர்ந்த வன்னி மாவட்ட புனர்வாழ்வு அமைச்சர் ரிசாத் பதியுதீன் ஆகியோரே பல்டியடிக்கத் தயார் நிலையில் உள்ளதாகத் தெரிய வருகின்றது.

இவர்கள் தற்போது தாம் அங்கம் வகிக்கும் ஆளும் கட்சியின் வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கி வருவது நாம் அறிந்ததே. ஆனால் இவர்கள் இருவரினதும் அண்மைக் கால நடவடிக்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக எம்மால் அறிய முடிகிறது.

இவர்கள் ரணில் விக்கிரசிங்கவுக்கு ஆதரவு வழங்க முயற்சி செய்து வருவதாக சமீப காலமாக கதை அடிபட்டு வருகிறது. இவர்கள் ஐ.தே.கவில் வந்து இணைவது பற்றி எந்த விதமான ஆட்சேபனையும் இல்லையென மு.காவின் தலைவர் ரவூவ் ஹக்கீம் தெரிவித்தும் இருந்தார்.

அப்படி ஐ.தே.கவில் இணைவதாக இருந்தால் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இணைய வேண்டும் எனவும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இணையத் தவறினால் அவர்கள் இணைய அனுமதிக்கப் படமாட்டார்கள் எனவும் ரவூவ் ஹக்கீம் தெரிவித்திருந்தார்.

இது எவ்வாறு அமையப் போகின்றது என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். முஸ்லிம் தலைவர்கள் அடிக்கடி இவ்வாறு கட்சி தாவுவது வழமையான ஓர் அரசியல் செயற்பாடுதான் என்றாலும், தங்களின் தனிப்பட்ட நலனைப் பாதுகாத்துக் கொள்வதற்காக சுயநல நோக்குடன் ஒரு கட்சியில் இல்லாது கட்சிக்குக் கட்சி தாவுவது முஸ்லிம் சமூகத்தைத்தான் அதிகம் பாதிக்கும்.

உண்மையில், முஸ்லிம்களின் உரிமைகளைப் பெற்றுத் தரும் சரியான வேட்பாளர் யாரென மக்கள் ஆழ்ந்து சிந்திக்கும் நிலைக்குத் தள்ளப்படுவது தடுக்கப் படுகிறது.

இவ்வாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் ஒரு தலைவர் நாளை மஹிந்தவுக்கு ஆதரவு வழங்க முன் வரும்போது மக்கள் குழம்பிப் போகின்றனர். இன்று ரணிலைப் புகழ்ந்தவர் நாளை ரணிலை வெறுத்து மஹிந்தவைப் புகழ்கிறார். மக்களும் இவரின் கொள்கைக்குப் பின்னால் போக வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

பாமர மக்கள் தங்கள் தலைவன் சாய்கின்ற பக்கம் தாமும் சாய படித்தவர்களே குழப்பத்தில் ஆழ்த்தப்படுகின்றனர்.

இப்போது பாமர மக்களும் முஸ்லிம் அரசியல்வாதிகளின் அரசியல் செயற்பாட்டை நன்கு உணர்ந்துள்ளார். ஆகவே, முஸ்லிம்கள் இனிமேலாவது சுயநலத்திற்காகக் கட்சி தாவும் தங்கள் தலைவனின் கொள்கையுடன் ஒத்துப் போகாமல் தங்களின் உரிமைகளைத் தரக் கூடிய சரியான தலைவர் யாரெனச் சுயமாகச் சிந்தித்து இத் தேர்தலில் முஸ்லிம்கள் வாக்களிக்க வேண்டும். அப்போதுதான் முஸ்லிம்களின் எதிர்காலம் ஒளிரும்.

-எம்.ஐ.முபாறக்-


### விற்பனைக்கு

CANON 1215, 2020, 3025, 3225 போட்டோ கொப்பி இயந்திரங்களுக்குரிய புதிய சகல உதிரிப்பாகங்கள் (PARTS) மலிவான விலையில். பாவித்த TOSHIBA AIR CONDITIONER, STABI GUARDS களும் விற்பனைக்கு உண்டு.

071-4142976

### தற்பொழுது வவுனியா மாநகரில்...

வலது குறைந்தோர்
ஊனமுற்றோர்களுக்கான

- ஊன்று கோல்கள் (Walking sticks)
- கிரட்சஸ் (Crutches)
- முழங்கை கிரட்சஸ் (Elbow Crutches)
- Bed Pan
- URINAL
- Walking Frame
- Wheel Chair (சக்கர நாற்காலி)
- Tricycle

ஆகியவை மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்

**ASHRAFF & CO**

இல.30, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
தொ.பே 0242222383

### பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்

(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப் பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலமும் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரைச் செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...

நவம்பர் 25 – 30 வரை
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427
Hot Line: 0777 569205

வவுனியாவில்...

நவம்பர் 5 – 6
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...

நவம்பர் 7 -10
A.S.N. [illegible]
392/A. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.




# கலக்கல்

வதனி



ஆஹா... BODY BUILDER என்றால் சதைகள் கட்டுகளை அல்லவா.... புடைக்க வைத்து காட்ட வேண்டும். இவர் என்ன வயிற்றிலே ஒரு முகத்தை உருவாக்கியிருக்கிறாரே ... எப்படி?



அருகே உள்ள படம் நேரே பார்க்க எலும்புக் கூடுபோல் தெரிந்தாலும் உற்றுப் பாருங்கள். இடையில் ஒரு பெண் தெரிவாள்.

## காதிலே கேட்டவை

கொழும்பு பிரதான வீதியில் தீபாவளி Shopping வந்த இரு பெண்கள்.
முதலாமவள் : என்னடி போன சித்திரை வருஷத்துக்குத்தான் இந்த சாறி எடுத்தாய்... அதுக்குள்ள இப்படி சாயம் போயிற்றுதே...
மற்றவள்: ஓமடி என்ரை அவர் காட்டின சாறியை எடுக்காமல் இதை ஆசைப்பட்டு வாங்கினேன் . இப்படி ஆகிட்டுது.
முதலாமவள் : அப்படியெண்டால்.. உன்ரை அவர் போட்டு கடிச்சிருப்பாரே உன்னை...
மற்றவள்: ஓம், ஆனா... என்னட்டை வாய்க்குமே... நீங்கள் வாங்கித்தத்த Washing Powder சரியில்லை அதுதான் இப்படி ஆயிட்டுது எண்டேன். அடங்கிட்டார்...



ஓரணா ரெண்டணா உண்டியல உடைச்சி...
நாலணா எட்டணா கடன உடன வாங்கி...
அண்டா குண்டா அடகு வைச்சு....
என்ரை Cell Phone Re-charge பண்ணி
S.M.S....S.M.S ஆ... அனுப்பி தள்ளுறனே...
பதில் அனுப்பி தொலையேன்ரா.... பாவி....

என்ரை கண்ணுடா.. செல்லம்டா...
Very Very SORRY டா...
உன்னை தொல்லை பண்ணுறத்துக்கு மன்னியடா...
ஆனா மிக மிக அவசரம்டா...
உன்ரை படம் ஒன்று அவசரம் தேவையடா..
மறுக்காமல் அனுப்படா...
மாட்டன் எண்டு சொல்லாதையடா...
Matter is very serious டா...
இல்லை எண்டு சொல்லியிடாதடா...
Please Please Please டா....
உண்மையை உனக்குச் சொன்னா என்னடா...
நான் காட்ஸ் விளையாடிக் கொண்டிருக்கிறேனடா..
ஆனா... ஜோக்கரை தொலைச்சுட்டேனடா



நமக்கே நமக்கு வந்த தொலைபேசி.
எதிர்முனையில்: ஹலோ...
நாம்: சொல்லுங்கோ..
எதிர்முனை: இளங்கோ இருக்கிறாரோ..
நாம்: இளங்கோ பாத்ருமில் குளிச்சுக் கொண்டு இருக்கிறார். கொஞ்சம் பொறுத்து எடுக்கிறீங்களோ...
எதிர் முனை: Sorry... என்ரை நண்பன் வாழ்கையில குளிக்கவே மாட்டானே... இது Wrong Number போல...

Graduation Surpries
யோவ்.. டக்கெண்டு கிளிக் பண்ணுய்யா... கொஞ்சம் தாமதித்தாலும் எல்லாம் காலி.



கணவன்: கண்ணே நான் திடீரென்று இறந்து விட்டால் நீ இன்னொரு கல்யாணம் செய்து கொள்வாயா...
மனைவி : அய்யய்யோ.. அப்படி எல்லாம் சொல்லாதைங்கோ... அப்படி உங்களுக்கு ஏதும் நடந்தால் நான் வேறு கல்யாணம் பண்ணமாட்டேன். எனது தங்கையுடனேயே வாழுவேன். அது சரி நான் இறந்துவிட்டால்.. நீங்கள் வேறு கல்யாணம் செய்து கொள்வீர்களா?
கணவன் : சே...சே... நானும் உன்னையே போலத்தான் கடைசி வரையும் வேறு கல்யாணமே செய்து கொள்ள மாட்டன். உனது தங்கையுடனேயே வாழ்வேன்.

S.M.S
எமக்கு வந்த S.M.S களில் சில
நிலவு இல்லையென்றால் வானம் வீண்....
மலர் இல்லையென்றால் பூந்தோட்டம் வீண்...
காதல் இல்லையென்றால் வாழ்க்கை வீண்....
கேள் பிரண்ட் இல்லாவிட்டால் வாழ்க்கை வீண்....
நீ இல்லையென்றால் Zoo வீண்...

# பாரதீய ஜனதாவைக் கலக்கும் சந்நியாசினி உமாபாரதி

இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான பி.ஜே.பிக்கு ஒன்றன் மேல் ஒன்றாக உள் வீட்டுச் சச்சரவுகள் உண்டாகிய வண்ணமே இருக்கின்றன. குறிப்பாக கட்சித் தலைமைப் பதவி மீது ஒரு கண் வைத்திருக்கும் சந்நியாசினி அரசியல்வாதியான உமாபாரதியை கட்சிக்குள் வைத்திருக்கவும் முடியாமல், வெளியேற்றவும் முடியாமல் கட்சித்தலைவர் அத்வானி தவியாய்த்தவிக்கிறார். சில மாதங்களுக்கு முன்புதான் டெலிவிஷன் கமராக்களுக்கு முன்னால் நடந்த கட்சிக் கூட்டத்தில் எவரும் எதிர்பாராத விதமாக அத்வானியைக் கை நீட்டிப் பேசினார் உமாபாரதி. அடுத்த நாளே ஆளும் கட்சியை விட்டு வெளியேற்றப் பட்டதாக அறிவிக்கப் பட்டது. எனினும், அவர் மன்னிப்புக் கேட்டதையடுத்து மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.



> சோனியா காந்தி பிரதமராகத் தெரிவு செய்யப்பட்ட போது அவர் பதவி ஏற்றால் அது நாட்டுக் வெட்கக் கேடு என்றும், தான் தனது மத்திய பிரதேச முதல்வர் பதவியை ராஜினாமாச் செய்வேன் என்றும் கூறியவர் தான் இந்த உமாபாரதி.

மோசமாக நடந்து கொண்ட உமா பாரதியை மன்னிக்க முக்கியமான காரணம் ஒன்று இருந்தது. அதுதான் பீஹார் தேர்தல். அதிரடியாகப் பேசி வாக்காளர்களைக் கவரக் கூடியவர் உமாபாரதி. சோனியா காந்தி பிரதமராகத் தெரிவு செய்யப்பட்ட போது அவர் பதவி ஏற்றால் அது நாட்டுக் வெட்கக் கேடு என்றும், தான் தனது மத்திய பிரதேச முதல்வர் பதவியை ராஜினாமாச் செய்வேன் என்றும் கூறியவர் தான் இந்த உமாபாரதி.

இவ்வாறான தடாலடிப் பேச்சு பீஹார் தேர்தலுக்கு பி.ஜே.பிக்கு முக்கியம். தவிரவும் வாஜ்பாய் வயதாகி நொந்து போயுள்ள நிலையில் நட்சத்திரப் பேச்சாளர்களின் அவசியத்தை கட்சி உணர்ந்தது. இதனால் தான் உமாபாரதிக்கு மன்னிப்பு வழங்கப் பட்டது. அவரும் தற்போது நடந்துவரும் பீஹார் சட்டசபைத் தேர்தலின் முதற் கட்டத்துக்கான 57தொகுதிகளிலும் சூறாவளிப் பிரசாரம் மேற்கொண்டார். எனினும், திடீரென மத்திய பிரதேச முதல்வரை நீக்கி மீண்டும் உமாபாரதியை நியமிக்க வேண்டுமென அவரது ஆதர வாளர்களான மத்திய பிரதேச அமைச்சர்களும், எம்.எல்.ஏக்களும் கோரிக்கை விடத் தொடங்கினர். உமாபாரதியும் பீஹார் பிரசாரத்தைக் கைவிட்டு போபாலுக்குச் சென்று அவர்களுடன் மந்திராலோசனை நடத்துகிறார். இந்த நேரத்தில் உமாபாரதி இப் பிரச்சினையைக் கிளப்பக் காரணம் பீஹார் தேர்தலே. அங்கு லல்லு பிரசாத்யாதவ் -காங் கிரஸ் கூட்டணியுடன் கடுமையாகப் போட்டியிட வேண்டியுள்ள பி.ஜே.பிக்கு உமாபாரதியும் இல்லாமல் பிரசாரப் பணி களை முன்னெடுப்பது கடினம்.

ஊழல் குற்றஞ் சாட்டப்பட்ட அமைச்சர்களை மன்மோகன் அமைச்சிலிருந்து நீக்க வேண்டுமென கடந்த ஆண்டு பி.ஜே.பி போராட்டம் நடத்திய போது கர்நாடகாவிலுள்ள காங்கிரஸ் அரசு உமாபாரதி மீதான பழைய வழக்கொன்றை தூசு தட்டி எடுத்தது. அவர் ஊரடங்குச் சட்டத்தை மீறி பேரணி நடத்தி முஸ்லிம்களுக்குச் சொந்தமான மைதானத்தில் தேசிய கொடி ஏற்றியதை அடுத்து இந்து - முஸ்லிம் கலவரம் ஏற்பட்டது. இந்தச் சம்பவம் தொடர் பாகவே இந்த வழக்கில் உமாபாரதி மீது குற்றஞ்சாட்டப்பட்டு இருந்தது. அவர் சிறையிடப்பட்டதும் தான் வகித்து வந்த மத்திய பிரதேச முதல்வர் பதவியை ராஜி னாமாச் செய்ய நேரிட்டது. இதன் பலனைத் தான் இப்போது பி.ஜே.பி அனுபவிக்கிறது.

சமீப காலமாக பி.ஜே.பி தலைவர் அத்வானிக்கு தொல்லை மேல் தொல்லை வந்து கொண்டிருக்கிறது. குஜராத் முதல்வர் மோடியை விலக்கக் கோரி அவரது அதிருப்தியாளர்கள் கட்சியைக் கடுமையாக நிர்ப்பந்தித்து வருகின்றனர். இந்தக் கோரிக்கையை ஆதரித்த மூத்த தலைவர் குரானாவை விலக்கப் போய் வாஜ்பாய்க்கும், அத்வானிக்கும் மோதல் ஏற்பட்டது. ஜின்னாவைப் புகழப் போய் அத்வானி சங்க பரிவாரத்தின் கோபத்தில் மாட்டினார். இதனால் டிசம்பருடன் தான் கட்சித் தலைமையை விட்டு விலகுவதாக அத்வானி அறிவித்து விட்டார். இந்த நிலையில் முரளி மனோஹர், மோடி, சுஷ்மா ஷிவ்ராஜ், பிரமோத் மாஹாஜன், ஜஸ்வந்த்சிங்என ஒரு பட்டாளம்- இளம் தலைவர்கள், தலைமைப் பதவியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். உமாபாரதியும் இந்தப் பதவிக்குக் குறி வைத்திருக்கிறார்.

டிசம்பர் மாதம் வரும் போது, தான் மத்திய பிரதேச முதல்வர் பதவியில் இருந்தால் அது கட்சித்தலைமையைக் கைப்பற்ற உதவுமென உமாபாரதி கருதுகிறார். மேற்கூறிய தலைவர்களில் நட்சத்திர அந்தஸ்து உடையவர்கள் சுஷ்மா ஷிவ் ராஜும், உமாபாரதியுமே. எனினும், உமா பாரதிக்கு கட்சியின் மூத்த தலைவர் களிடையே செல்வாக்கு மிகவும் குறைவு. அவர் இளவயதினராக இருப்பதும், அதிரடியாகப் பேசி மற்றவர்களின் எதிர்ப்பைச் சம்பாதிப்பதும் இதற்குக் காரணம். ஆனால், அவர் விஷயத்தைக் கைவிடுவதாக இல்லை. ஒருமுறை மன்னிப்புக் கேட்டு மீண்டும் கட்சியில் இணைந்த போதும் வாயை அடக்கிப் பேசும் பழக்கம் அவரிடம் இன்னும் வரவேயில்லை. இதனால் கட்சித் தலைவராகும் வாய்ப்பு மிகவும் குறைவே. அவர் கட்சியை விட்டு வெளியேற்றப்பட்ட சமயம் அவருக்காக குரல் கொடுக்க எந்த மூத்த தலைவரும் முன் வரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தமிழகத்திலும் பி.ஜே.பியின் நிலை வலுவாக இல்லை. அடுத்த ஆண்டு சட்டசபைத் தேர்தலில் கட்சி தனித்து நின்று போட்டியிடும் என கட்சி கூறி வருகிறது. பி.ஜே.பியின் தமிழகத் தலைவர்களுக்கு உஷார் அதிகம். முன்னர் தி.மு.கவுடன் கூட்டணியில் இருந்தபோது தி.மு.கவின் பலத்தை உணராமல் தூக்கி எறிந்து பேசினார்கள். அதனால் தி.மு.க காங்கிரஸுடன் கூட்டணி வைத்தது. இதன் காரணமாக பி.ஜே.பியின் மத்திய ஆட்சியே பறிபோனது.

இப்போது மீண்டும் தனித்துப் போட்டி என முழக்கமிடுகிறார்கள் தமிழக பி.ஜே. பியினர். தனித்து நின்றால் 5 தொகுதிக்கு மேல் தேறாது என்பது வெட்ட வெளிச் சமான உண்மை. அப்படியிருக்க இந்தக் கூச்சல் ஏனென்றால் ஜெயலலிதாவுக்கு கூட்டணி அமைக்கும் அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது என்பதை பி.ஜே.பி அறியும். வலுவான தி.மு.க கூட்டணியைச் சந்திக்கும் சவால் ஜெயலலிதா முன்னுள்ளது. கடந்த முறை போலன்றி ஆட்சி மமதையில் தோல்வி வாய்ப்பை மறந்து விடும் நிலையில் அவர் இப்போது இல்லை. கவனமாக மக்கள் நலத் திட்டங்களை அதிகரித்து வருகிறார். அவரது போக்கில் மாறுதல் வருவதை பி.ஜே.பியும், ராமதாஸும் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர். இந்த இரு தரப்பும் தேர்தலில் தி.மு.கவை வீழ்த்த வேண்டி கூட்டணி கோரி ஜெயலலிதா தங்கள் காலில் விழுவாரென எதிர் பார்க்கின்றன. அவர்களது கணிப்பு ஓரளவு சரியே. அச்சமயம் கூடுதல் தொகுதிகளை 'ஜெ'யிடம் கோரலாமென பி.ஜே.பி கருதுகிறது. எனவே தான் தனித்துப் போட்டியிடுவோமென ஜெயலலிதாவுக்கு பூச்சாண்டி காட்டுகின்றனர் தமிழக பி.ஜே.பி தலைவர்கள்.

- எஸ். சுரேந்திரஜித் -

---

# காலம் கடந்த ...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

எந்தத் தீர்வுத் திட்டமாயினும் அதற்குத் தென்னிலங்கை மக்களின் ஆதரவு தேவை. சட்டத்திருத்தம் நாடாளு மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்றில் இரண்டு பங்கு உறுப்பி னர்களின் ஆதரவும் வேண்டும். இவை என்றாவது சாத்தியப்படக் கூடியவையா?

இங்கே எமக்கு நிதர்சனமாகத் தெரிவது என்ன? நாடாளுமன்றத்தினூடாக - இரு பெரும் கட்சிகள் இணைவதனூடாக- தமிழ் மக்களின் பிரச்சினைக்கு என்றுமே தீர்வு காண முடியாது என்பதே.

**குடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு**

தமிழர் தமது தாயகத்தில் தனியாக வாழ வேண்டும் என்பதே காலத்தின் தேவையாக உள்ளது. ரணில் - சந்திரிக்காவின் பேச்சு, குடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு என்பது போல் தான் இருக்கப் போகிறது. ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின் வெறும் இழுத்தடிப்புகளே தொடரப் போகின்றன.

இதைப் புரிந்து கொண்டதால் தான் தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த சந்தர்ப்பவாதத் தேர்தலில் தமக்கு எவ்வித அக்கறையும் கிடையாது என்று அறிவித்துள்ளனர்.

**இன்றைய யதார்த்தம்**

இன்றைய யதார்த்தம் என்னவெனில், தமிழீழக் கோரிக்கையிலிருந்து கீழிறங்கி சமஷ்டி முறையின் கீழ் சிங்கள மக்களுடன் சமாதான - சகவாழ்வு வாழ முன் வந்துள்ள தமிழ் தலைமைக்கும், மக்களுக்கும் அந்த ஆட்சி முறையை வழங்க புதிய ஜனாதிபதி முன்வராவிட்டால் தமிழ் மக்கள் பிரிந்து வாழ இடமளிக்க வேண்டும் என்பதே. இதை விடுத்து அரை குறைத் தீர்வொன்றை தமிழ் மக்கள் மீது திணிக்கவோ அல்லது பயமுறுத்தல் மூலம் அடிபணிய வைக்கவோ முடியாது. தமிழ் மக்கள் எதற்கும் தயாராகவே இருக்கிறார்கள்.

இன்று அவர்கள் தமது தேவைகளை, உணர்வுகளை தெளிவாக வெளிப்படுத்தி உள்ளனர். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாது விட்டால் தமக்கென தனியரசு அமைக்கப்படவேண்டும் என்பதே அவர்களது தணியாத தாகமாக உள்ளது. அவர்களின் தணியாத தாகத்தை - தேவையை புதிய ஜனாதிபதியும், சர்வதேசமும் புரிந்து கொள்ள வேண்டும்.

---

# நான் நடிப்புக்கு அடிமை தேவயானி

திருமணத்துக்குப்பின் சின்னத்திரையில் கவனம் செலுத்தி வந்த தேவயானி, இப்போது வீட்டில் ஓய்வெடுக்கிறார். காரணம் "மாத" மாக இருக்கிறார்!

வீட்டிலிருந்த தேவயானி [illegible] போது - "நடிகை வாழ்க் [illegible] இருக்கின்றது?" என்று கேட் [illegible]

"பத்தாண்டுகளுக்கு முன் [illegible] யாவேன் என நினைத்தது [illegible] 'காமிரா'வை பார்த்தாலே [illegible] கும். ஆனால் பாருங்க, [illegible] இப்போது எனக்கு சோறு போடுது என்பதை நினைத்தாலே மகிழ்ச்சியா இருக்கு!" என்றார், தேவயானி.

"குழந்தை பிறந்த பின்பு நடிப்பீர்களா?"

"அதில் என்ன சந்தேகம்? நடிக்காமல் என்னால் சும்மா இருக்க முடியாது! நான் நடிப்புக்கு அடிமை!

"சினிமாவைவிட சின்னத்திரையை நீங்கள் அதிகம் விரும்பக் காரணம்?"

"இப்போதெல்லாம் திரைப்படம் பார்க்கும் ரசிகர்கள் குறைந்துவிட்டார்கள். ஒரு குடும்பப் பெண் படும் துன்பத்தை இரண்டரை மணி நேரப் படத்தில் முழுமையாகச் சொல்ல முடியாது. அதை சின்னத்திரை வழியாகத் தான் சொல்ல முடியும். பெண்களின் ஆதரவும் அதிகம் என்பதால் சின்னத்திரையை விரும்புகிறேன்!"

"[illegible] படம் தயாரித்து கையை [illegible] ண்டும் படம் [illegible] மயா?"

[illegible] ரித்த அனுப [illegible] சுழிவுகளைக் [illegible] ரையும் நம்பி [illegible] ன். ஆனால், [illegible] தும் எண்ணம் இல்லை!"

"பெண் என்றால் பேயும் இரங்குமே. நீங்கள் சிரமப்படும்போது யாரும் உதவவில்லையா?"

"பேய் இரங்காதுங்க! இடஒதுக்கீடு, வரதட்சணைப் பேய்கள் எல்லாம் இன்னும் இரங்கவே மாட்டேங்குதே!"

"நடிகை எதை சிக்கனமாகவும் எதை தாராளமாகவும் செலவழிக்கவேண்டும்?"

"வார்த்தையை சிக்கனமாகவும், நடிப்பை தாராளமாகவும் செலவழிக்க வேண்டும்!"

"நீங்கள் யாரைச் சொல்லுகிறீர்கள்?"

"ஆளை விடுங்கள் சாமி வம்பில் மாட்டி விடாதீர்கள்."

அன்புக்குரிய பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய பிரஜைகளே! கட்சி அரசியல், அனைத்து மதங்களையும் ஆக்கிரமித்து, மதங்களுக்கிடையே பேதங்களை உருவாக்கி அதனால் நாட்டை சின்னாபின்னமடையச் செய்துள்ளன. நான் ஜனாதிபதியானால் மதரீதியான கலாச்சார ரீதியான சுதந்திரத்திற்கு உத்தரவாதமளிக்கின்றேன்.

நாம் சமாதானத்தை பரப்புவோம் விக்டர் ஹெட்டிகொட சின்னம் கோப்பை

# இராணுவப் புலனாய்வுத்துறை முடக்கம்?



இராணுவப் புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரியும் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் இரண்டாவது பட்டாலியனின் கட்டளைத் தளபதியுமான கேணல் துவான் ரிஸ்வி மீடின் (வயது-39) கடந்த வாரம் கிரிபத்கொடையில் உள்ள அவரது வீட்டுக்கு அருகில், அவரது காருக்குள் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

போர்நிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர் சுட்டுக் கொல்லப்பட்ட அதி உயர் புலனாய்வுத்துறை அதிகாரி இவர் ஆவார். கடந்த ஓகஸ்ட் மாதம் கொழும்பு கிருலப்பனைப் பகுதியில் வைத்து இராணுவப் புலனாய்வுத் துறையின் கட்டளை அதிகாரியான லெப்.கேணல் துவான் நிஸாம் முத்தலிப் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார் என்பது நினைவு கூரத்தக்கது.

புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையில் நிழல் யுத்தம் உக்கிர மடைந்ததைத் தொடர்ந்து இரு தரப்புக்களும் மறைமுகப் போரில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. இவற்றில் இரு தரப்பினரும் பல முக்கிய நபர்களை இழந்துள்ளனர்.

கருணா குழுவைப் பயன்படுத்தி புலிகளுக்கெதிரான தாக்குதலை படைத் தரப்பு தீவிரப் படுத்த தொடங்கிய பின்னர் புலிகளும் பதில் நடவடிக்கையில் குதித்தனர்.

ஆரம்பத்தில் ஈராணுவப் புலனாய்வுப் பிரிவின் தமிழ் உறுப்பினர்களையும், கருணா குழு உறுப்பினர்களையும் குறி வைத்துப் புலிகளின் தாக்கதல் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டிருந்தன. பின்னர் படிப்படியாக இராணுவப் புலனாய்வுப் பிரிவின் ஆணி வேர்ப் பகுதிக்குள்ளும் புலிகளின் நகர்வுகளும், தாக்குதல்களும் இடம் பெற்றன.

இவற்றின் தொடர்ச்சியாக அண்மைக் காலமாக வடக்கு-கிழக்குப் பகுதி எங்கும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் மீது பரவலான கைக்குண்டுத் தாக்குதல்களும், மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் இராணுவப் புலனாய்வுமையம் செயற்படும் கொழும்புக்குள் புகுந்துள்ள தாக்குதல்தாரிகள் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முக்கிய நபர்களை இலாவகமாகச் சுட்டு விட்டு தப்பிச் செல்கின்றமைக்கு இராணுவப் புலனாய்வுத் துறை மிகவும் பலவீனமான நிலையில் காணப்படுவதே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில்தான் கேணல் மீடின் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அவருடன் பயணம் செய்த நபர்களாலேயே அவரது காருக்குள் வைத்து அவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இராணுவப் புலனாய்வுத்துறையை இது திகைப்புக்குள் உள்ளாக்கியுள்ளது.

புலனாய்வுத்துறை மீண்டும் தனது அடுத்த நகர்வை மேற்கொள்ள சில நாட்கள் ஆகின என்பதிலிருந்து இதன் தாக்கம் புலனாய்வுத்துறையை பெரும் நெருக்கடிக்குள் உள்ளாக்கியுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

கேணல் ரிஸ்வி மீடின் தனது உத்தியோக பூர்வ காரில் பயணம் செய்தள்ளார். அவரது வீட்டில் இருந்து 500 மீட்டர் தொலைவில் அவரது காருக்குள்வைத்தே அவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கிரிபத்கொடை விகாரமாதேவிப் பாடசாலை வீதியில் வைத்தே இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப் பட்டுள்ளது.

கிரிபத்கொடை வீடமைப்புத் திட்டத்தில் உள்ள இவரது வீட்டிற்குச் சென்ற இவரின் நண்பர்கள் இருவர் இரவு 9.45 மணியளவில் இவரை அழைத்துச் சென்றுள்ளனர்.

நள்ளிரவு 12.30 மணியளவில் மீடினின் மனைவிக்கு மீடின் காருக்குள் சுடப்பட்டு இருப்பதாக தொலைபேசி மூலம், தகவல் வந்துள்ளது.

இவரது காருக்குள் இருந்த நபர்களால் மைக்ரோ ரகப் பிஸ்ரலால் நான்கு தடவைகள் அவர் சுடப்பட்டுள்ளார். அவரின் கார் கைபிரேக் மூலம் நிறுத்தப்பட்டுள்ளது. இடையில் வேறுயாரும் காரில் ஏறிக் கொண்டார்களா என்பது குறித்தும், கார் நிறுத்தப்பட்ட இடத்தில் வேறு எவராவது காத்திருந்தார்களா என்பது குறித்தும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

களனிப் பகுதியைச் சேர்ந்த மீன் வியாபாரி ஒருவரை இது குறித்துப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

*1966 ஆம் ஆண்டு பிறந்த மீடின் 1986இல் இராணுவத்தில் அதிகாரியாக இணைந்து கொண்டார். 1998இல் இராணுவப் புலனாய்வுப் பிரிவில் சேர்த்துக் கொள்ளப் பட்டார்.*

கடந்த ஆண்டு இராணுவப் புலனாய்வுப் பிரிவில் இருந்து தலைமை இராணுவப் புலனாய்வுப் பணியகத்தின் சிரேஷ்ட அதிகாரியாக பதவியுயர்வு பெற்றிருந்தார். அடுத்த மே மாதம் கேணலாகப் பதவி உயர்வு பெற விருந்தார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த நிசாம் முத்தலிப் கொலைசெய்யப்பட்ட பின்னர் அவரது இடத்துக்கு மீடின் நியமிக்கப்பட்டிருந்தார்.

கொழும்பில் பல நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருந்த இவர் வடக்கு, கிழக்குப் பகுதியில் பல்வேறு நடவடிக்கைகளுடன் நெருங்கிய தொடர்புடையவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கருணா குழுவை அண்மைக் காலமாக வழிநடத்தி வந்தவர் இவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அண்மைக் காலமாக இவர் பொலன்னறுவை, மின்னேரியா இராணுவ முகாம்களுக்கு அடிக்கடி சென்று வந்துள்ளார் எனவும் சொல்லப்படுகிறது.

இராணுவப் புலனாய்வு அதிகாரிகளின் புள்ளி விபரங்களின்படி 6719.17 புள்ளிகளைப் பெற்று மீடின் முதலாவது இடத்தில் இருந்துள்ளார். இவருக்கு அடுத்த இடங்களில் இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரிகளான லெப்.கேணல் ரத்னசிறி, லெப்.கேணல் தர்மசிறி ஆகியோர் உள்ளனர். யாழ் மாவட்டத்தில் தற்போது 525 ஆவதுபடைப்பிரிவின் கட்டளை அதிகாரியாகக் கடமையாற்றும் பிரிகேடியர் ரி.எவ்.மீடினின் சகோதரரே கொல்லப்பட்ட கேணல் மீடின்.

கேணல் மீடினின் கொலையை இலங்கை அரசும், கண்காணிப்புக் குழுவும் கண்டித்துள்ளன. போர்நிறுத்தத்தை மறுபரிசீலனை செய்யப்போவதாக அமைச்சரவைப் பேச்சாளர் நிமல் ஸ்ரீபாலடி சில்வா தெரிவித்தார்.

தேர்தல் நெருங்கிவரும் நிலையில் தெற்கிலும், வடக்கு-கிழக்குப் பகுதிகளிலும் நிலைமைகள் மோசமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

-ஷோபா-

## சொற்சிலம்பம் போட்டி இல. 184

சொற்சிலம்பம் 184 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் நவம்பர் 06ஆம் திகதி ஆகும். விடைகள் நவம்பர் 13ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் நவம்பர் 20ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.182 க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 184

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | 10 | | | | ■ |
| | ■ | 11 | | | | ■ | 12 |
| ■ | 13 | | | | ■ | 14 | |
| 15 | | ■ | | ■ | 16 | | |
| | ■ | 17 | | 18 | | ■ | |
| 19 | | | ■ | 20 | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 182

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | 2 ச | ம் | 3 பா | 4 வி | 5 த | ம் | ■ |
| 6 க | னி | ■ | 7 ம | த | லை | ■ | 8 ந |
| ம் | ■ | 9 அ | ர | ம் | ■ | 10 ஆ | ல் |
| 11 பா | 12 வ | ல | ன் | ■ | 13 ப | ட | கு |
| 14 வ | ட | ம் | ■ | 15 கோ | ல | ம் | ■ |
| ம் | ■ | 16 பு | 17 த | ன் | ■ | 18 ப | 19 கு |
| ■ | 20 ம | த | னி | ■ | 21 கா | ர | ம் |
| 22 கு | டி | ல் | ■ | 23 கு | டு | ம் | பி |

## சொற்சிலம்பம் போட்டி இல.184

**இடமிருந்து வலம்**

1. மூச்சு விடும் செயற்பாடு.
4. வீதி,பாதைக்கு குறுக்கே நீர் பாய்வது இதன் வழியே
7. பாட்டு
8. தமிழ் மாதம் ஒன்று.
09. அமெரிக்கா, பிரிட்டன், சீனா போன்றவை உலகின் மீது செலுத்துவது.
11. அருந்துதல், குடித்தல்
13. தோடு
14. பெருக்கல் குறி
15. பூமி
16. இனிமேல் வருவது
17. மாமாவையும் இப்படி அழைப்பர். தந்தையையும் இவ்வாறு அழைப்பர். புலிகள் இயக்கத்தில் இந்தச் சொல் அடிக்கடி பாவிக்கப்படுவது உண்டு.
19. மாத்திரை / குளிசை
20. அரசு வழங்கும் உதவி

**மேலிருந்து கீழ்**

1. பண்பு
2. நீர் இல்லாமல் தாவரங்களுக்கு நேருவது.
3. கூடிக் குலாவும் செயற்பாடு
4. ஒளி, வெளிச்சம் குறைந்த நிலைமை.
5. தகுதியானது.
6. நிலத்தை நோக்கி உடலை வளை.
8. பக்கம்
10. கலியாணம்
12. தொடக்கம்
13. பாடலையும் குறிக்கும். இயற்றியவனையும் குறிக்கும்.
14. விருட்சம்
15. பரி
16. மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி. மாவட்டங்கள்.
17. இது ஓய்வதில்லை.
18. தாயின் சகோதரர்

## சொற்சிலம்பம் போட்டி இல. 179

1. வி.செல்வநாயகம், 'சாருஜா' சிவன் கோவில் வீதி, புத்தூர்.
2. திருமதி.ரஞ்சனி சிவஞானம், இல.43/1, புகையிரத நிலைய வீதி, மட்டக்களப்பு
3. டி.வீனஸ் பெஞ்சமின், இல.155, D 10, உருத்திரபுரம், பரந்தன்.

**பாராட்டுப் பெறுவோர்**

1. க.நிரஞ்சன், இல.22 பிரதிபிம்பாராம வீதி, கஹுபோவில.
2. திருமதி.கிருஷ்ணராணி, இல, 156/24, டொக்கியாட் றோட், திருகோணமலை.
3. ஆர்.வேணு, இல,22/4, பிரான்சிஸ் வீதி, வெள்ளவத்தை, கொழும்பு.
4. திருமதி.எஸ்.ஞானம், இல,54 –6/3 விக்டோரியா கோட், வெள்ளவத்தை.
5. சி.மனோகரன், தண்ணீரூற்று, முள்ளியவளை.
6. யூ.செல்வத்தம்பி இல,20, கோவில்வீதி, கல்முனை – 03.
7. கு.விஷ்ணி, இல,55/10, நிமலமரியமாவத்தை, ஹெந்தலை,வத்தளை.
8. கீதாஞ்சலி உமாபதிசிவம், பரமநயினார் கோவிலடி, ஆரையம்பதி –01.
9. விக்னேஸ்வரராசா, கரவெட்டி மேற்கு, கரவெட்டி.
10. சி.கோகுலபாலன், தாராபுரம், மன்னார்.

கடந்த வாரம் பிரசுரமாகி இருந்த சொற்சிலம்பம் போட்டி இல. 184 இல், கணினிப் பிரதியாக்கத்தில் ஏற்பட்ட தவறு காரணமாக இலங்கங்களுக்குப்பதிலாக பல இடங்களில் எழுத்துக்கள் பதிவாகி விட்டன. வாசகர்களின் நலன் கருதி சொற்சிலம்பம் போட்டி இல 184 ஐ இவ்வாரம் மீண்டும் பிரசுரித்துள்ளோம்.

# இரு தேசிய இனங்கள் இருப்பதை உணர்த்திய 1956 பொதுத் தேர்தல்

1956 தேர்தலில் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் சகல தொகுதிகளிலும் போட்டியிடுவதற்கு, தமிழரசுக்கட்சி வேட்பாளர்களை நிறுத்தியது. தமிழ்க்காங்கிரஸ் வடக்கில் சகலதொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தி இருந்தது. அதேவேளை முன்னாள் ஐ.தே.க. தமிழ்ப் பிரமுகர்கள் சுயேச்சையாக போட்டியிட்டனர். தமிழரசுக்கட்சிக்கும்


எஸ். ஜே. வி. செல்வநாயகம்

தமிழ்க்காங்கிரஸுக்கும் இடையில் போட்டி தவிர்ப்பு முயற்சி வெற்றி அளிக்கவில்லை.

காங்கேசன்துறையில் தமிழரசுக்கட்சியின் எஸ். ஜே. வி .செல்வநாயகத்தை எஸ்.நடேசபிள்ளை சுயேச்சையாக நின்று எதிர்த்தார். டாக்டர் எம்.வி.நாகநாதன் யாழ்ப்பாணத் தொகுதியில் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்துக்கு எதிராக போட்டியிட்டார்.

ஊர்காவற்றுறையில் ஏற்கனவே எம்.பியாகவிருந்த அல்பிரட் தம்பிஜயா சுயேச்சையாக போட்டியிட்டார். தனிப்பட்ட காரணங்களுக்காக நான் இத்தொகுதியில் மீண்டும்போட்டியிடாமல் ஒதுங்கியிருந்தேன். செல்வந்தரான ஒரு தனவந்தரான வேட்பாளருக்கெதிராக இத்தொகுதியில் போட்டியிட நிறையப் பணம் தேவைப்பட்டது. கொழும்பு சட்டத்துறையில் பிரபல்யமாகவிருந்த வி.ஏ. கந்தையாவை இங்குபோட்டியிடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தேன். அவரை கட்சிக்கு அறிமுகப்படுத்தியிருந்தேன். முதலில் அதிக அக்கறைகாட்டாவிட்டாலும் பின்னர் கட்சியின் தலைமைப்பீடம் அவரை வேட்பாளராக நிறுத்த எனது பரிந்துரையின் பேரில் ஏற்றுக்கொண்டது.

பிற்காலத்தில் கட்சியின் மிக நீண்ட




பேச்சாளராகவும் அசைக்கமுடியாத ஆதரவாளராகவும் வீ. ஏ. கந்தையா விளங்கினார். மக்கள் சார்பாக கட்சிக்கொள்கையை முன்னெடுப்பதில் அவர்மேற்கொண்ட பணிகள் அதிகம்.

நாடாளுமன்றத்திலும் அவர் அரசுக்கெதிராக போராட்டங்களை முன்னெடுத்தார். கட்சியின் நேரடி போராட்டங்களில் தனது உடல் நிலையையும் கவனிக்காது அவர்பங்கு பற்றினார்.

சபையின் எல்லாத்தரப்பினராலும் அவர்மதிக்கப்பட்டார். 1963ஆம் ஆண்டு அவர் எதிர்பாராதவிதமாக காலமாக நேர்ந்தபோது சபையின்பொது கணக்குக் குழுவின் தலைவராக இருந்தார்.

அவ்வாறே சாவகச்சேரியில் 1952இல் கட்சியின் சார்பில்போட்டியிட்டவரான அருணாசலம் போட்டியிலிருந்து ஒதுங்கிக்கொண்டு வி.என் நவரத்தினத்தை சிபாரிசுசெய்தார். வி. என். நவரத்தினம் அக்காலத்தில்முன்னுக்கு வந்து கொண்டிருந்த இளம் வழக்கறிஞர். இவர் அக்காலத்தில் தமிழ் காங்கிரஸ் எம்.பியாகவும் நாடாளுமன்ற செயலாளராகவும் இருந்த வி.குமாரசாமியை எதிர்த்து போட்டியிடவேண்டியிருந்தது. கட்சிக்குள் மிகவும் இளையவராக இருந்த வி. என். நவரத்தினம் பிற்காலத்தில் கட்சிக்கு இன்றியமையாத உறுப்பினர்களில் ஒருவராகவும் வளர்ந்தார். 27வருடங்களைத்தொடர்ந்து சாவகச்சேரியை பிரதிநிதித்துவம் செய்த உறுப்பினர் என்ற புகழுக்குரியவருமானார். உலக நாடாளுமன்றங்களுக்கிடையிலான யூனியன் நிர்வாகசபைக்கு தெரிவுசெய்யப்பட்ட முதலாவது இலங்கையர் என்றபுகழும் இவருக்குண்டு.

கட்சியின் மட்டக்களப்புக்கான வேட்பாளர் சி.இராஜதுரை. சுதந்திரன் வார இதழில் ஒரு பத்திரிகையாளராக இருந்தவர். எஸ்.ஜே.வி. செல்வநாயகம் கட்சித் தலைவராக இருக்கும் வரை கட்சியின் உயர்வுக்காக இராஜதுரை செய்தபணிகள் மகத்தானவை. அவரது மேடைப் பேச்சுத்திறமையும் கட்சிவிசுவாசமும் கட்சியின் வளர்ச்சிக்கு பெரிதும்உதவின. தமிழரசுக் கட்சியின் ஊடாக வடக்கு-கிழக்கு மாகாணத் தமிழ்மக்களை ஒன்றிணைக்க அவர் செய்தசேவைகளைக்குறைத்து மதிப்பிட முடியாது. அவரும் 27 ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்து மதிப்பினைபெற்றவர்.

இன்னொரு இளம்விசுவாசமிக்க உறுப்பினர் மன்னார்தொகுதியில் போட்டிக்கு நிறுத்தப்பட்ட அழகக்கோன், மன்னார் சட்டத்துறையில் மிகவும் மதிக்கப்பட்ட சிரேஷ்ட வழக்கறிஞர் அவர். அவர்மிகவும் வெளிப்படையானவர். உண்மையும் அப்பாவித்தனமும் கொண்டவர். சமஷ்டிபற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது என்றுகூறி அதைப்பற்றி மற்றப்பேச்சாளர்களை பேசும்படிவிட்டுவிடுவார். அவர் செல்வநாயகம் மீது அளவுகடந்த விசுவாசமும் பற்றுதலும் கொண்டிருந்தார். மன்னாரில் றோமன்கத்தோலிக்கர்களையும் முஸ்லிம்களையும் சமஷ்டிக்கொடியின் கீழ் இணையச்செய்த பெருமை அவருக்குண்டு.

இந்தமாற்றங்களைத் தவிர ஏனைய தொகுதிகளுக்கான வேட்பாளர்களில் மாற்றம் எதுவும் இருக்கவில்லை.

## வடக்கு, கிழக்கில் தமிழரசுக்கட்சி வெற்றி தெற்கில் பண்டாரவின் சுதந்திரக்கட்சி வெற்றி

### கிழக்கில் முஸ்லிம் மக்கள் தந்தஆதரவு

இந்தக்காலகட்டத்தில் ஏற்பட்டிருந்த மிகமுக்கியமானதோர்முன்னேற்றம் என்னவென்றால் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் தமிழரசுக்கட்சிக்கு வழங்கியிருந்த ஆதரவாகும்.அவர்களும் தமிழ்பேசுகின்ற ஒரு சிறுபான்மையினர் என்றமுறையில் தமிழ் மொழிக்கு ஏற்பட்டுள்ள இன்னல் காரணமாகவும் அவர்கள் மத்தியிலேயே ஏராளமான சிங்களக் குடும்பங்கள் கொண்டு வந்து குடியேற்றப்படுவதை அவதானித்ததாலும் அவர்கள் தமிழர்களுடனான ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தினார்கள்.

எனவே கல்முனை முஸ்லிம்களின் தலைவரும் மதிப்பார்ந்த முஸ்லிம் தலைவருமான முதலியார் எம்.எம்.ஐ.காரியப்பர் கல்முனைத்தொகுதி வேட்பாளராகவும் அவரது மருமகனும் மட்டக்களப்பு பிரபல வழக்கறிஞருமான எம்.எஸ்.முஸ்தபா பொத்துவில்தொகுதி வேட்பாளராகவும் தமிழரசுக்கட்சியால் நியமிக்கப்பட்டனர்.

### மொழி ரீதியிலான தேசியம்

தேர்தல் முடிவுகள் இலங்கையில் இருதரப்பு மொழிஅடிப்படையிலான தேசியம்வெற்றி பெற்றிருப்பதைக்காட்டியது.

வடக்கு -கிழக்கின் தமிழ்தேசியத்தை எஸ். ஜே. வி. செல்வநாயகமும் அவரது தமிழரசுக் கட்சியும் வெளிப்படுத்தியிருக்க சிங்கள மக்கள்சார்பில் பண்டாரநாயக்காவும் அவரது சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் சிங்கள தேசியத்தை வெளிப்படுத்தியிருந்தன.

இருதரப்பினரும் தங்களால் பிரகடனப்படுத்தப்பட்ட கொள்கைகளை முன்னெடுத்துச்செல்வதற்கான தெளிவான தீர்ப்பைப் பெற்றிருந்தனர்.


பண்டாரநாயக்க

இலங்கையின் எதிர்காலத்தில் மிக முக்கியமானதோர் திருப்புமுனையை அது வெளிப்படுத்தியதோடு சிங்களவருக்கும் தமிழ்ப்பேசும் மக்களுக்குமிடையில் இனரீதியிலான உறவுகளில் சீர்குலைவுகள் ஏற்பட்டிருப்பதையும் அது இனங்காட்டியது.

தமிழ்ச் 'பேனா'

### இரண்டு தேசியங்களின் நாடு

இலங்கை இரண்டு தேசியங்களின் நாடு. தமிழ்பேசும்- சிங்களம்பேசும்- இருதேசிய மக்களின் நாடு என்பதை முதல்தடவையாக தமிழ் பேசும் மக்கள், தேர்தல் வாக்களிப்பின்மூலம் மிகத்தெளிவாகவும் தவறில்லாமலும் சிங்களவர்களுக்கும் சிங்களத் தலைவர்களுக்கும் எடுத்துக் காட்டி இருந்தார்கள். சிங்கள ஆக்கிரமிப்பை - மேலாதிக்கத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள எத்தயாராய் இல்லை என்பதையும் புலப்படுத்தியிருந்தார்கள்.

1956 தேர்தலின் போது வடக்கு-கிழக்கில் 18 தேர்தல் தொகுதிகள் இருந்தன. அவற்றில் 11தொகுதிகளில் தமிழரசுக்கட்சி வெற்றி பெற்றிருந்தது. காங்கேசன்துறையில் முன்னாள் ஐ.தே.க. அமைச்சர் எஸ். நடேசப்பிள்ளையை எஸ்.ஜே.வி. செல்வ நாயகம் தோற்கடித்திருந்தார். வி.ஏ. கந்தையா (ஊர்காவற்றுறை) ஏ.அமிர்தலிங்கம் (வட்டுக்கோட்டை) வி.என்.நவரத்தினம் (சாவகச்சேரி) சி. இராஜதுரை (மட்டக்களப்பு) வி.ந. அழகக்கோன் (மன்னார்) போன்று மற்றவர்களும் தெரிவுசெய்யப்பட்டு உறுப்பினர்கள் ஆனார்கள். கிழக்கு மாகாணத்தில் கல்முனை, பொத்துவில் தொகுதிகளில் எம்.எம்.ஐ.காரியப்பரும் எம்.எம்.முஸ்தபாவும் தெரிவாகியிருந்தார்கள். யாழ்ப்பாணத்தில் தமிழ்காங்கிரஸ் தலைவர் ஜீஜீ. பொன்னம்பலம் தனது யாழ்ப்பாணத் தொகுதியை தக்கவைத்துக் கொண்டிருந்தார். வவுனியாவில் சி.சுந்தலிங்கம் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். அவர் தமிழரசுக்கட்சிக்கு எந்த விதத்திலும் இடையூறாக இருக்கவில்லை. ஏனென்றால் மொழி மற்றும் குடியேற்றத்திட்டங்களை அவர் எதிர்த்து நின்றார்.

### எஸ்.டபிள்யு.ஆர்.டி பிரதமமந்திரி

சிங்களத் தொகுதிகளில் எஸ்.டபிள்யு. ஆர்.டி பண்டாரநாயக்கா பெரும்பான்மை வாக்குகளால் பிரதம மந்திரியாக தெரிவு செய்யப்பட்டிருந்தார். ஐ.தே.க. எட்டு ஆசனங்களில் மட்டும் வெற்றி பெற்றது. அப்பட்டமான சந்தர்ப்பவாத அரசியலினால் மக்களை ஏமாற்ற முடியாதென்பதை தேர்தல் எடுத்தக்காட்டியிருந்தது. பிலிப் குணவர்த்தனவும் வில்லியம் டி. சில்வாவும் சோஷலிஸ சமசமாஜக் கட்சியிலிருந்து விலகி பண்டாரநாயக்காவின் அரசில் சேர்ந்து கொண்டனர். அதனால் அந்த அரசு மகாஜன எக்சத்பெரமுன அரசு எனப்பெயர் பெறலாயிற்று.

சிங்களமொழி தொடர்பாக தாம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் பண்டாரநாயக்க காலம் கடத்த விரும்பவில்லை. 1956 ஜுன் 5ஆம்திகதிக்குரிய நாடாளுமன்ற அமர்வின் நிகழ்ச்சி நிரலில் அரச கரும மொழிக்கான சட்டவாக்கம் சமர்ப்பிக்கப்படவிருப்பதற்கான அறிவித்தல் காணப்பட்டது. உறுப்பினர்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டிருந்த சட்டவாக்க நகலின்படி அது ஒரு தனிவாக்கிய சட்டமாக அமைந்திருப்பது தெரியவந்தது.

சிங்களம் மட்டுமே இலங்கையின்



நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் வரை இடம்பெற்ற முக்கிய அரசியல் நிகழ்வுகளை உள்ளடக்கியது 'தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்' (The Fall and Rise of the Tamil Nation)

தற்போது கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஊர்காவற்றுறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.நவரத்தினம் ஆங்கிலத்தில் எழுதிய இந்த நூலின் தொகுப்பு தொடர் அரசியல் கட்டுரையாக சுடர்ஒளி வாரமலரில் வெளிவருகிறது. படியுங்கள்.

நிர்வாக மொழியாக இருக்கும் என்பதை அது சுட்டுவதாய் இருந்தது.இந்தச் சட்டத்தை செயற்படுத்துவதற்கான சட்டங்களை உருவாக்க அமைச்சருக்கு அச்சட்டத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டிருந்தது. இடைக்கால ஏற்பாட்டுக்கும் வழிதெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், தமிழ் மொழி பற்றி ஒன்றுமே குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. பிரதம மந்திரி சிங்கள மக்களுக்கு அளித்த தனது சொல்லைக் காப்பாற்றுவதில் உண்மையாகவே இருந்துள்ளார்.

### தமிழரசார் நிலைப்பாடு

இந்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் எதிர்ப்பதோடு, நின்றுவிட தமிழரசுக் கட்சி விரும்பவில்லை.

இந்த அப்பட்டமான பாகுபாடான சட்டத்துக்கு தமிழ்மக்களின் எதிர்ப்பு எந்த அளவில் இருக்கிறது என்பதை வெளிக்காட்டவும் உலகக் கவனத்துக்குக் கொண்டுவரவும் ஏதாகிலும் செய்தாக வேண்டும் என்று தமிழரசுக் கட்சி யோசித்தது.

தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்ட சில கட்சித் தொண்டர்களும் மக்கள் பிரதிநிதிகள்சபையின் வாசற்படிகளில் அமர்ந்து சட்டம் சபையில் சமர்ப்பிக்கப்படும் பொழுது சத்தியாக்கிரகம் செய்வதென்று ஒரு யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

மல்லாகம் நீதிமன்றத்தில் பிரபல வழக்கறிஞரும் (பின்னர் செனெட்டர்) காங்கேசன்துறையில் எஸ்.ஜே. வியின் வெற்றிக்கு முன்னின்று பாடுபட்டவருமான எஸ். நடராஜா இந்த யோசனையைத் தெரிவித்தார். அது ஒரு நல்ல யோசனை. உடனடியாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டது. கொழும்பில் இதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கும்படி நான் கேட்கப்பட்டிருந்தேன்.

சத்தியாக்கிரகத்தில் தாமும் கலந்து கொள்வதாக வவுனியா எம்.பி.சி.சுந்தரலிங்கமும் அறிவித்திருந்தார்.

(தொடரும்)

# எமது நாட்டினை பாதுகாப்பான கரங்களில் ஒப்படையுங்கள்



ரணில் சட்டத்தை தனது கையில் எடுத்து கொள்பவர் அல்ல. தனது தேவைகளுக்கு ஏற்ற வகையில் சட்டத்தை கையாளுபவரும் அல்ல. அதிகாரத்தை அடைவதற்காக தனது கௌரவத்தையும் மகத்துவத்தினையும் விட்டுக் கொடுப்பவரும் அல்ல. பல சவால்களை சந்திக்க நேரிட்ட போதெல்லாம் அவற்றுக்கு முகம்கொடுத்து அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்ளக் கூடியவர்; என்பதை நடைமுறையில் சாதித்தும் காட்டியவர். சமத்துவத்தைப்பேண வேண்டும் என்ற நோக்கில் மக்களின் உரிமைகளை என்றென்றும் மதிப்பவர்.
ரணிலின் சிந்தனை இன்று துன்புற்று பிளவுபட்டுள்ள எமது தேசத்தை மீண்டும் ஒன்றிணைக்கும் வல்லமை கொண்டது. எம் அனைவருக்கும் நம்பிக்கைக்குரிய. தூர நோக்குமிக்க தலைமத்துவம் தேவை.


**நமது நாடு இன்று அதனையே எதிர்பார்க்கின்றது.**

**உங்கள் நிகழ்ச்சி நிரல் எனது நிகழ்ச்சி நிரலாகும்**
**உங்கள் பிரச்சினை எனது பிரச்சினையாகும்**
**உங்கள் வெற்றி எனது வெற்றியாகும்**

ரணில் விக்கிரமசிங்க

# அறிவியல்

## செவ்வாயில் விண்கலம்



செவ்வாய்க்கு அனுப்பப்பட்ட விண்கலம் அங்கிருந்து அனுப்பிய படங்களைக் கொண்டு, செவ்வாயில் இப்போதும் இயற்கை மாற்றங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன என்பதை விஞ்ஞானிகள் உறுதிப் படுத்துகின்றார்கள்!

**செவ்வாயைச் சுற்றும் விண்கலம்**

செவ்வாயைப் படம் எடுத்து அனுப்ப "மார்ஸ் சர்வேயர்" (Mars Surveyor) என்ற விண்கலத்தை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலைய (நாசா) விஞ்ஞானிகள் அனுப்பினார்கள்.

199ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் திகதி இந்த விண்கலம் அனுப்பப்பட்டது. அது 1997 செப்டம்பர் 12 ஆம் திகதி செவ்வாயை அடைந்தது. அடுத்த மூன்று நாட்களில் (1997 செப்டம்பர் 15 முதல்) செவ்வாயைப் படம் எடுத்து அனுப்பத் தொடங்கியது. கடந்த எட்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து படம் எடுத்து அனுப்பிக்கொண்டிருக்கிறது!

**மாறுதல்**

மூன்று ஆண்டுகளுக்கு முன் எடுத்து அனுப்பப்பட்ட படங்களையும், இப்போது அனுப்பியிருக்கும் படங்களையும் ஒன்றாக வைத்து நிபுணர்கள் பார்த்தார்கள். படங்களில் மாறுதல்கள் இருப்பது கண்டு ஆச்சரியப்பட்டார்கள்.

குறிப்பாக இரு மாறுதல்களை நிபுணர்கள் கவனித்தார்கள்.

1. மணல் மேடுகளில் புதிதாக தண்ணீர் ஓடிய வாய்க்கால்கள் காணப்பட்டன. செவ்வாயில் கடந்த மூன்று ஆண்டுகளாக வெய்யில் அதிகம். செவ்வாயின் தென் முனையில் உறைந்து கிடந்த கரிக்காற்று (கரியமிலவாயு) இந்த வெயிலில் உருகி, ஆறாக ஓடியிருக்க வேண்டும் என்று நிபுணர்கள் கருதுகின்றார்கள்.

**உருண்ட பாறைகள்**

2. மலைகளில் பாறைகள் உருண்ட தடம் தெரிகிறது. பாறைகள் உருண்டு கிடந்தன. பாறைகளையே உருட்டக்கூடிய பயங்கர புயல் வீசியிருக்க வேண்டும். அல்லது நிலநடுக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள். இந்த இரு மாறுதல்களையும் கொண்டு, செவ்வாய் இப்போதும் இயங்கிக்கொண்டிருக்கும் கோள்தான் என்ற முடிவுக்கு விஞ்ஞானிகள் வந்திருக்கிறார்கள்!

"மார்ஸ் சர்வேயர்" (Mars Surveyor) விண்கலம் இன்னும் பத்து ஆண்டுகளுக்கு செவ்வாயைச் சுற்றி வரும்; படங்கள் எடுத்து அனுப்பும் என்று விஞ்ஞானிகள் எதிர்பார்க்கிறார்கள். அப்போது செவ்வாயைப் பற்றி இன்னும் பல தகவல்கள் கிடைக்கும் என்று விஞ்ஞானிகள் சொல்லுகின்றார்கள்!

## கங்காரு



கங்காரு அவுஸ்திரேலியாவின் தேசிய மிருகம் ஆகும். கங்காரு எப்போதும் முன்நோக்கிச் செல்லும். பின்நோக்கிச் செல்லாது. அவுஸ்திரேலியா எப்போதும் முன்னோக்கியே செல்லும் என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறது அதன் தேசியச் மிருகம்.

கங்காரு மக்ரோ பொடிடேட் (Macropodidate) என்ற இனத்தைச் சேர்ந்தது. ஆடு மாடுகளைப் போல் இது தாவரத்தையே உணவாகக் கொள்ளுவதுடன், அவற்றைப் போல் 'இரையையும்' மீட்டுக் கொள்கிறது. நீரின்றி மாதக் கணக்கில் வாழக்கூடியது. சிறிய ஒலியைக்கூட தனது காதுகளால் வாங்கிக் கொள்ளக்கூடிய சக்தி படைத்தது.


பெண் கங்காருக்கள் ஒரு தடவைக்கு ஒரு குட்டியையே ஈன்று எடுப்பதுடன், தனது குட்டியை வயிற்றின் அடியில் உள்ள பையில் 9 மாதம் வரை வைத்திருக்கும். இந்தப் பைக்குள் குட்டிக்குப் பால் கொடுக்கும் நான்கு முலைக்காம்புகள் உள்ளன.

இவை எப்போதும் கூட்டமாகவே வாழ்கின்றன. அண்மைக்கால ஆய்வுகள் அவுஸ்திரேலியாவில் கங்காரு இனம் பெருகி வருவதையே காட்டுகின்றன. இவற்றின் எதிரி மிருகங்கள் அழிந்து வருவதே இதற்குக் காரணம்.

## அறிவியல் துணுக்குகள்

- ஜனவரி மாதம் முதல் திகதியை வருட ஆரம்பமாகக் கொள்வது 1752 ஆம் ஆண்டில் இருந்துதான் வழக்கத்திற்கு வந்தது.
- சோதனைக் குழாயின் மூலம் குழந்தையைப் பெற்ற முதல் தாய் லண்டனைச் சேர்ந்த லெஸ்லி பிரவுண்
- இன்று தொடர்கதைகளின் முடிவில் முற்றும், முற்றிற்று என்ற சொற்களை முதன் முதலில் எழுதி வழிகாட்டியவர் இளங்கோவடிகள். சிலப்பதிகாரத்தின் ஒவ்வொரு காண்டத்தின் முடிவிலும், நூலின் முடிவிலும் அவர் இந்தச் சொற்களை பயன்படுத்தினார்.
- குடியிருக்கும் வீடு ஒன்றில் முதன் முதலாக 1865ஆம் ஆண்டு தான் லிப்ட் அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. அதன் பின் 1867 பின் நடைபெற்ற உலக பொருட்காட்சியில் தான் லிப்ட் மக்கள் மத்தியில் பிரபலமானது.
- மெக்காவிலிருந்து ஹொங்கொங்கிற்குப் பறந்து கொண்டிருந்த ஒரு விமானத்தை சில சீனர்கள் கடத்திக் கொண்டு போனார்கள். அதுதான் முதல் முதலில் இடம்பெற்ற விமானக் கடத்தல் ஆகும். கடத்தப்பட்ட ஆண்டு 1948.
- தற்போது பிரபலமாயிருக்கும் கடலில் கண்ணி வெடி வைத்து எதிரியைத் தாக்கும் போர் முறை 1904 - 05 இல் ரஷ்ய - ஜப்பான் போரில் முதன்முதலாய் பின்பற்றப்பட்டது. இந்த வகை கண்ணிவெடியில் அகப்பட்டு சிதறியது ஏஜெம்பானியக் கப்பலாகும்.

## ராடார்



எமது கண்களுக்குப் புலப்படாத பொருட்களின் அசைவு பற்றிய செய்திகளையும், அவை இருக்கும் தூரத்தையும் வானொலி அலைகளின் உதவியுடன் எமக்கு வழங்குவதே ராடாரின் தொழிற்பாடாகும்.

Radio Detection and Ranging என்ற ஆங்கிலச் சொற்களின் முதல் எழுத்துக்களைச் சேர்த்தே ராடார் என்று சொல்லப்படுகிறது.

* விண்ணில் உள்ள கோள்கள், ஏனைய பொருட்கள் பற்றிய தகவல்கள்.
* அவற்றுக்கு இடையிலான தூர அளவு.
* அவற்றின் வடிவம்
* அசையும் பொருளாயின் அதன் வேகம் செல்லும் திசை.

ஆகியனவற்றைக் கண்டுபிடித்து அவை பற்றிய தகவல்களையே ராடர் வழங்கும்.

ராடர் திரையில் விண்ணில் உள்ள கோள்கள் பதிவாகின்றன. அதே போன்று கதிர்கள் பற்றிய செய்திகளையும் இந்தத் திரை பதிவாக்கிக் கொள்கிறது.



## வால் நட்சத்திரம்

கடந்த ஜூலை 14ஆம் திகதி டெம்பல்-1 என்ற வால் நட்சத்திரத்தில் மனிதனால் உருவாக்கப்பட்ட விண்கலனை மோதி நாசா விஞ்ஞானிகள் சாதனை படைத்தார்கள் அல்லவா?

ஒப் இம்பக்ட் என்ற இந்த முயற்சிக்கான விதை 1998ஆம் ஆண்டிலேயே விதைக்கப்பட்டது. அப்போது ஹெலி வால் நட்சத்திரத்தில் உள்ள கருமையான மேற்பகுதியை ஆராய்வதற்கு, ஒரு விண்கலனை அதில் மோத முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால், அதை சரியான பாதையில் செலுத்தக் கூடிய உயர் தொழில்நுட்பம் இல்லாதால் அந்த முயற்சி கைவிடப்பட்டது. இப்போது விண்ணியல் தொழில்நுட்பங்கள் பெருமளவு முன்னேற்றம் அடைந்துள்ளதால் நாசா விஞ்ஞானிகள் தைரியத்துடன் இந்த முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டனர்.

வால் நட்சத்திரங்கள் சுமார் 450 கோடி ஆண்டுகளுக்கு முன்பே உருவானவை. இவற்றை பூமிக்குக் கொண்டுவந்து ஆராய முடியாதல்லவா?

இவை வெறும் விண்கற்கள் அல்ல. பல மைல்கள் அளவுக்கு நீண்ட இராட்சத விண் பாறைகள். ஆதலால் இங்கிருந்து ஒரு விண்கலத்தை ஏவி அதனை வால் நட்சத்திரத்துடன் மோத விட்டால் அதன் மேற்பரப்புக்கு அடியில் உள்ள பகுதிகள் மேலே தெரியும். அவற்றை ஆராய்ந்து சூரியன் மற்றும் புவி உருவான வரலாற்றைப் பற்றி புதிய தகவல்களை அறிய முடியும்.

பூமியில் இருந்து ராக்கெட் மூலம் அனுப்பப்பட்ட இம்பக்ட் விண்கலம் டெம்பல்-1 வால் நட்சத்திரத்தை நெருங்குகையில் இரண்டாகப் பிரிந்து ஒரு பகுதி டெம்பல்-1 ஐ மோதப் புறப்பட்டது. மற்றப்பகுதி இந்த மோதலைப் படம் எடுத்து பூமிக்கு அனுப்பிவைக்கிறது.

தாய் கலத்தில் இருந்து பிரிந்து 24 மணி நேரத்தில் 371 கிலோ எடை உள்ள மோதும் கலம், மணிக்கு 70,000 கிலோ.மீ வேகத்தில் சென்று டெம்பல்-1 வால் நட்சத்திரத்தைத் தாக்கி பெரும் தீப்பிளம்புகளுடன் வெடித்துச் சிதறியது. இந்த மோதலினால் 325 அடி அகலமும் 80 அடி ஆழமும் உடைய பள்ளம் இந்த நட்சத்திரத்தில் உருவாகி உள்ளது. இந்த மோதல் முயற்சிக்கான மொத்தச் செலவு எவ்வளவு என்று தெரியுமா? 1500 கோடி ரூபாய்கள்.

## முன்னேறும் விமானத் தொழில் நுட்பம்

தினந்தோறும் விமான விபத்துகள் பற்றியும், அவற்றில் அநியாயமாக உயிர்ப் பலியானவர்கள் பற்றியும் பத்திரிகைகள் பந்தி பந்தியாக எழுதுகின்றன.

நிலைமை இப்படி இருக்க, கம்பியூட்டர் தொழில் நுட்பத்தின் வாயிலாக விமானத் தொழில் நுட்பம், எதிர்காலத்தில் பல அதிசயிக் கத்தக்க மாற்றங்களை சந்திக்க இருக்கின்றது என விமானப் பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுவரை விமானங்களில் இரண்டு இயந்திரங்களே பொருத்தப்பட்டு இருந்தன.



இப்போது நான்கு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட விமானங்கள் தயாரிக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட இருக்கின்றன.

கம்பியூட்டரின் கட்டுப்பாட்டில் இயங்கும் நவீன இலத்திரனியல் கமெராக்களும், அதி நவீன இயந்திரங்களும் விமானத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கக்கூடிய வசதிகளை விமானிக்கு வழங்க இருக்கின்றன. விமானத்தின் வேகம், இடம், காலம், பறக்கும் திசை, உயரம் காலநிலை, அருகே பறந்துகொண்டிருக்கும் ஏனைய விமானங்கள் பற்றிய தகவல்களை இக் கமராக்கள் மிகவும் தெளிவாகவும், சிறிது தவறு இல்லாமலும் விமானிக்கு வழங்கும் திறனை கொண்டுள்ளன. இவ்வகையான நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய விமானங்கள் வெகு அரிதாகவே இடம்பெறும் என்று நம்பப்படுகின்றது.

# மலையகத் தலைமைகள் கறிவேப்பிலையாகலாமா?

பெரும்பான்மை அரசியல் வாதிகளின் வெற்றிக்காக போட்டி போட்டுக்கொண்டு மலையகத்தில் தீவிர பிரசாரங்களில் ஈடுபட்டிருக்கும் மலையக அரசியல்வாதிகளும், தொழிற்சங்கத் தலைவர்களும் கறிவேப்பிலைகளாகி விடக்கூடாது என்பதுதான் மலையகப் புத்திஜீவிகளின் ஆதங்கம்.

> சீ.பி. ரத்னாயக்காவும் முத்து சிவலிங்கமும் ஏற்படுத்திய கயிறிழுப்பில் மலையக இளைஞர் யுவதிகளுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு விட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளர்களாகக் களம் இறங்கியுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்த மலையகத் தலைவர்களுடன் பல்வேறு ஒப்பந்தங்களைச் செய்துள்ளனர். உறுதி மொழிகளையும் வாரி வாரி வழங்கியுள்ளனர்.

இவற்றை எல்லாம் விட அதைத் தருகின்றோம், இதைத் தருகின்றோம், அந்தப் பதவியைத் தருகின்றோம், இந்தப் பதவியைத் தருகிறோம் என்றெல்லாம் ஆசை வார்த்தைகளை கூறி மலையகமக்களின் வாக்குகளை வேட்டையாட ஆரம்பித்து விட்டனர். தொழிற்சங்கவாதிகளும் அரசியல்வாதிகளும் முடுக்கி விடப்பட்ட பொம்மைகள் போல் மிகவும் சுறு சுறுப்பாக செயற்படுகின்றனர்.

இவர் ஆட்சிக்கு வந்தால் எம் மூலம் மக்களுக்கு அதைச் செய்து கொடுக்கலாம். அவர் ஆட்சிக்கு வந்தால் இத்தனை பேருக்கு. வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கலாம் என்ற எதிர்பார்ப்புகளுடனும் நப்பாசையுடனுமே தாம் ஆதரிக்கும் தலைவர்களுக்கு வாக்குச் சேகரிக்கின்றனர். இவர்களைக் குறை கூறவில்லை.

இந்த இடத்தில்தான் கடந்த கால சம்பவங்களையும், அரசியல் தலைவர்களால் காற்றில் பறக்க விடப்பட்ட வாக்குறுதிகளையும் சுட்டிக் காட்ட வேண்டிய கட்டாயம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவும், ரணில் விக்கிரமசிங்கவும் முன்பு கொடுத்த வாக்குறுதிகளில் எதை எதை நிறைவேற்றி உள்ளனர், எத்தனை ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தி உள்ளனர் என்பதை ஆராய்ந்தால், அதற்கான விடை கேள்விக் குறியாக இருக்கின்றது.

குறிப்பாக மலையக இளைஞர்கள் யுவதிகளுக்கான ஆசிரியர் நியமனம். சீ.பி.ரத்னாயக்காவும்- முத்து சிவ லிங்கமும் ஏற்படுத்திய கயிறிழுப்பில் மலையக இளைஞர் யுவதிகளுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு விட்டது.

இப்போது பைசர் முஸ்தபாவும்- ஆறுமுகமும் போட்ட குஸ்தியில் கோர்ட்டுக்கும் போய் சீரழிகின்றனர்.

அதன் பின்னர் இ.தொ.கா.வும், ஜனாதிபதியும் செய்து கொண்ட 19 அம்ச உடன்படிக்கை என்ன ஆனது? மலையக இளைஞர்களுக்கு பொலிஸ்துறையில்

(13ஆம் பக்கம் பார்க்க)

## இப்படியும் நடக்கிறதே!

அண்மைக் காலங்களில் பாலியல் வல்லுறவு என்பது ஒரு சர்வ சாதாரண சம்பவம் போன்று மாறிவிட்டது.

ஆசிரியர் மாணவிகளையும், பொலிஸார் பொதுமக்களையும், முதலாளிமார் தம்மிடம் வேலை செய்பவர்களையும், உயர் அதிகாரிகள் தம்முடைய உதவியாளர்களையும், பாலியல் இம்சைக்கு உள்ளாக்குவது சர்வ சாதாரணமாகி விட்டது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் வெட்கத்தினாலும், தமது எதிர்காலம் பாதிக்கப்பட்டு விடுமோ என்ற அச்சத்தினாலும் இந்தக் கொடுமைகள் மூடி மறைக்கப்பட்டு விடுகின்றன.

ஆனால் சில சம்பவங்கள், மறைக்கமுடியாமல் வெளிப்படத்தான் செய்கின்றன.

கடந்த வாரம் ஹட்டனில் நடந்த சம்பவம் அநாகரிகமானது மட்டுமல்ல அருவருக்கத் தக்கதும் கூட.

பதுளையைச் சேர்ந்த ஒரு அபலைப் பெண் கொழும்பில் ஒரு விட்டில் பணிப்பெண்ணாக வேலை செய்பவர்.

கணவரைப் பிரிந்து வாழும் இவருக்கு இரண்டு குழந்தைகள். வயோதிபத் தாயாரின் ஆதரவில் பிள்ளைகளை விட்டு வயிற்றுப் பிழைப்புக்காக கொழும்பில் வேலை செய்கிறார்.

தனது தாயையும், பிள்ளைகளையும் பார்க்க வேண்டும் என்ற ஆவலுடன் இரவு ரயிலில் பயணமானார்.

கொழும்பில் இருந்து பதுளையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த இவரை சில கயவர்கள் ஹட்டனில் இறக்கி உள்ளார்கள்.

இறக்கியவர்கள் ஆட்டோக்காரர் ஒருவரின் உதவியுடன் ஆட்டோவுக்குள் வைத்தே மாறிமாறி இவருடன் வல்லுறவு கொண்டுள்ளனர்.

விடிகாலை நேரமாகிவிட்டதால் காமுகர்கள் அப்பெண்ணை புதிதாக திறந்த விருந்தினர் விடுதி ஒன்றுக்கு கொண்டு சென்று மீண்டும் மீண்டும் இம்சைப்படுத்தி உள்ளனர்.

அது போதாது என்று விடுதி உரிமையாளரும் இந்த வெறி பிடித்த மிருகங்களுடன் கூடி அப்பெண்ணின் கற்பைச் சூறையாடியுள்ளார். இந்த விடயம் அம்பலமானதும் ஹட்டன் பொலிஸார் விடுதி உரிமையாளர் உட்பட ஆறு கயவர்களைக் கைது செய்துள்ளனர். கைது செய்து விட்டால் மட்டும் போதுமா? இதை தடுப்பது எப்படி?

## டேஸ்ட்கடை தணிகாசலம்

### மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

## போடும்வாக்குகள் செல்லுபடியாக வேண்டும்

தணிகாசலம் அண்ணன் கூறியபடி, கோகிலாவையும் மற்றும் நற்பணிமன்ற உறுப்பினர்களையும் அழைத்துக் கொண்டு தணிகாசலம் அண்ணனின் வீட்டுக்கு சிவலிங்கம் வந்துவிட்டான்.

தணி அண்ணன் அவர்களை வரவேற்று அமரச் சொன்னார். அவர்களைக் கண்டதுமே சிவகாமி அம்மா தேநீர் தயாரிக்கச் சென்றுவிட்டார்.

அண்ணன் ஏதே முக்கிய விடயமாக வரும்படி கூறினீர்கள் அது என்ன என்று தெரிந்து கொள்ளலாமா?'' என்று சிவா பேச்சை ஆரம்பித்தான்.

''ஆமாம் சிவா உங்களிடம் ஒரு முக்கியமான வேலையை ஒப்படைக்கத்தான் அழைத்தேன். முதலில் தேநீரைக் குடியுங்கள், குடிச்சுக் கொண்டே பேசுவோம்'' என்றார் தணி அண்ணன்.

தேநீரை குடித்தபின் தணிகாசலம் அண்ணரே ஆரம்பித்தார்.

''உங்களுக்கு நன்றாகத் தெரியும். இப்பொழுது ஜனாதிபதி தேர்தல் சூடு பிடித்துள்ளது. இங்கேதான் உங்களுடைய உதவி தேவை.''

''என்னங்க அண்ணே இப்படி கூறுறீங்க. எந்தக் கட்சிக்கும் வேலை செய்யக்கூடாது என்கிறீங்கள். இப்போ உதவி தேவை என்கிறீங்கள்'' என்றாள் இதுவரை அமைதியாக இருந்த கோகிலா.

''ஆமாங்க அண்ணே நீங்களும் யாருக்காவது ஆதரவளிக்க தீர்மானித்து விட்டீங்களா? என சிவாவும் ஆச்சரியத்துடன் கேட்டான்.

''அடப்பாவிங்களா, இவ்வளவு காலமும் என்னோடு இருந்தும் என்னைப் பற்றி தெரிஞ்சு கொண்டது அவ்வளவுதானா?''

''ஐயய்யோ! அப்படி இல்லைங்க அண்ணன்- சும்மா பகிடிக்கு கூறினோம்''

''அது சரி இப்ப விஷயத்துக்கு வருவோம்.''

''என்னங்க அண்ணே!''

''உங்களுக்குத் தெரியும்; வழமையாகவே ஆகக்கூடுதலான செல்லுபடியற்ற வாக்குகள் மலையகத்தில்தான் விழுகின்றன.''

''ஆமாங்க அண்ணே சென்ற பொதுத் தேர்தலின் போது 25ஆயிரம் ஓட்டுகளுக்கு மேல் செல்லுபடி அற்றனவாக அறிவிக்கப்பட்டதே?''


''இப்ப புரியுது இல்ல, இந்த வாக்குச் சீட்டுகள் தான் நம்ம தலை விதியை நிர்ணயிக்கப் போறது, ஆனால், அதனை எப்படி பயன்படுத்துவது என்பது தெரியவில்லையே என்று தான் கவலை''

''உண்மை தாங்க அண்ணே! அதற்கு நாங்க எந்த வகையில் உதவி செய்ய வேண்டும்''

''அப்படிக் கேளுங்க. இதோ, இதுதான் மாதிரி வாக்குச் சீட்டு. இதில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்களும், அவர்களுடைய சின்னங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.''

''ஆமாங்க அண்ணே பெரிய ஆச்சரியமா இருக்கி, ஒறிஜினல் வாக்குச்சீட்டு மாதிரியே இருக்கி!''

''அது ஒன்றும் பெரிய சிரமம் இல்லை. நம்ம சனங்களுக்கு எந்த வகையிலாவது உதவ வேண்டும் என்பதால் கொஞ்சம் மினக்கெட்டுச் செய்தேன். ஆனால் ஒன்றைப் பாருங்கள் இதில் உண்மையாகவே போட்டியிடுபவர்களின் பெயர்களோ அல்லது சின்னங்ளோ இல்லை.''



''உண்மை தாங்க அண்ணே! இப்ப நாங்க என்ன செய்ய வேண்டும்?''

''ஒரு சிலேட் அல்லது காகித அட்டைகளில் இப்படி மாதிரி வாக்குச் சீட்டுகளை வரைந்து, வீடுவீடாகப் போய் எப்படி வாக்குப் போடுவது என்பதை ஒருமுறைக்குப் பலமுறை சொல்லிக் கொடுக்க வேண்டும்.''

''அண்ணே சொல்லிபுட்டீங்கதானே! இன்று முதல் வேலை ஆரம்பிச்சு விடுறோம்.''

''தம்பி அவசரப்படாதீங்க. இப்ப இந்த கட்சிக்காரங்களும் வீடுவீடாகப் போய் படங்களையும், துண்டுப் பிரசுரங்களையும் கொடுத்துக் கொண்டு போறாங்க. இந்த நேரத்தில நீங்களும் போனால் அது தவறான அர்த்தத்தை ஏற்படுத்தி விடும்.''

''அண்ணன் சொல்லுவது உண்மைதான். இந்தக் கட்சிக்காரர்கள் வராத நேரம், அமைதியாக வீடு வீடாகச் சென்று எப்படி வாக்களிப்பது என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.''

''இப்படிச் செய்தால் நம்ம போடும் வாக்குகள் பழுதடையாமல் ஒவ்வொன்றும் பயனுள்ளதாக அமையும். நாம மினக்கெட்டு வாக்குகளைப் போட்டும் அது செல்லுபடியாகாமல் விட்டால் என்ன பிரயோசனம்.?''

''நீங்க கவலைப்படாதீங்க அண்ணே! இந்த முறை ஒரு வாக்குகள் கூட பழுதடையாமல் போடுவது என்பதை நாங்கள் உறுதிப்படுத்துறோம்.''

''ரொம்ப நன்றி தம்பி. நம்ம தலைவர்கள் எல்லோரும் வாக்குப் போடுங்கோ வாக்குப் போடுங்கோ என்று கேஷம் போடுவதோட சரி. அதை எப்படி போடுவது என்பதை சொல்லிக்கொடுக்கத் தவறுகின்றனர். அந்தப் பொறுப்பை நாம் எடுத்துக் கொள்வோம்.'' என்றுகூறி தணி அண்ணன் எல்லோரையும் உற்சாகப்படுத்தி அனுப்பினார்.

# மலையகத் தொடர்ச்சி...

13ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆயிரம் பேருக்கும், அரச அலுவலகங்களில் முன்னரங்கு உத்தியோகத்தர்களாக 2500 பேருக்கும், மேலும் ஆசிரியர்களாக 3500 பேருக்கும் நியமனங்கள் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து விட்டதாகவும் கூறப்பட்டது. ஆனால் எதுவுமே நடக்கவில்லை.

இப்போது ரணில் விக்கிரமசிங்கவும், மஹிந்த ராஜபக்ஷவும் லொறி லொறியாக வாக்குறுதிகளையும், புரிந்துணர்வு உடன்படிக்கைகளையும் அவிழ்த்துக் கொட்டி உள்ளனர்.

இவர்களுடைய பசப்பு வார்த்தைகளையும், பொய்யான வாக்குறுதிகளையும் நம்பி எமது தலைவர்களும் இந்த பெரும்பான்மை தலைவர்களுக்காக களம் இறங்கி விட்டனர். இவர்களுடைய நம்பிக்கை வீண் போகக் கூடாது. எனினும் ஒன்றைக் கோடிட்டுக் காட்டவேண்டியது அவசியமாகின்றது.

இந்தப் பெரும்பான்மைத் தலைவர்கள் தமது ஆட்சி கவிழப் போகும் நிலையில் அதற்கு முண்டு கொடுப்பதற்காக சிறுபான்மைக் கட்சிகளின் கால்களைப் பிடிக்கின்றார்கள். தங்களுடைய காரியம் முடிந்தவுடன் கைகழுவி விடுகின்றனர்.

அடுத்ததாக தேர்தல்கள் நடைபெறும் போது தாம் பதவிக்கு வரவேண்டும். ஆட்சியைப் பிடிக்க வேண்டும். அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பதற்காக சிறுபான்மைக் கட்சிகள் மீது பாசம் கொள்ள ஆரம்பித்து விடுகின்றனர். உடன்படிக்கைகளையும், ஒப்பந்தங்களையும் செய்து கொள்கின்றனர்.

ஆனால் தேர்தல்கள் முடிந்து அதிகாரத்துக்கு வந்தவுடன் தமக்கு உதவியவர்களையும் ஆதரவு வழங்கியவர்களையும் மறந்து விட்டு காலை வாரி விடுகின்றனர். இது நாம் ஏற்கனவே பட்ட சூடு. அந்த வடுக்கள் இன்னும் மாறவில்லை.

ரணில் விக்கிரமசிங்க வென்றால் என்ன? மஹிந்த ராஜபக்ஷ வென்றால் என்ன? எல்லாமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். கடைசியில் ஏமாற்றப்படுவதுதான்.

இங்கே ஒன்றை ஞாபகப்படுத்திக் கொள்வோம். அதாவது சுவையான சாப்பாடு ஒன்று சமைக்க வேண்டும். ருசியான கறி வைக்க வேண்டும் என்றால் எங்கே தேடியாவது வாசமுள்ள கறிவேப்பிலையைக் கொண்டு வந்து போட்டு விடுவார்கள். சாப்பாடும் மணக்கும்.

ஆனால் உறவினர்களுடன் கூடி உணவை ருசித்து சாப்பிடும் போது கறிக்கே சுவையூட்டும் கறிவேப்பிலையைத் தூக்கி எறிந்து விடுவார்கள். அது வழமை.

அப்படித்தான் இந்தப் பெரும்பான்மை அரசியல்வாதிகளும், தாம் ஆட்சிக்கும் அதிகாரத்துக்கும் வந்தவுடன் தமக்கு உதவிய சிறுபான்மைக் கட்சிகளை மறந்து விடுவது மட்டுமல்ல உதாசீனமும் செய்து விடுகின்றனர்.

காரணம் எம்மிடம் ஒற்றுமை இல்லை. ஒன்றுபட்ட கோரிக்கையும் இல்லை. இதை எம்மலையகத் தலைவர்கள் இப்போதாவது உணரவேண்டும். கடைசிவரை கறிவேப்பிலைகளாக இருக்கக் கூடாது. இது உங்களுக்கு ஆலோசனை மட்டுமல்ல, எச்சரிக்கையும் கூட.

-சரா கோகுலன்-

# ராசி பலன்

**மேடம்: அச்சுவினி, பரணி,கார்த்திகை 1.**
(1, 8) உரிய செவ்வாய் ராசியில் இருப்பது மத்திமமான பலனைச் செய்யும். மேலும், சுக்கிரன் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைச் செய்யும். குரு ராசியைப் பார்ப்பது நல்லது. சனி ராசியைப் பார்ப்பது கூடாது. தொடங்கும் காரியங்கள் தாமதமானாலும் நிறைவேறும் (2,7) உரிய சுக்கிரன் 9 இல் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. (3,6) உரிய புதன் 7 இல் நல்ல பலனைச் செய்யமாட்டார். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எதிரிகளால் தொல்லையுண்டு. 4இல் உள்ள சனியை சுக்கிரன் பார்ப்பதால் வாகன சுகம் உண்டு. தாய் நலம். (9,12) உரிய குரு 7ல் இருப்பது விஷேசம். பிதாநலம். சயனசுகம் உண்டு. (10,11) உரிய சனி நாலில் இருப்பது கூடாது. தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது

**இடபம்:கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2**
(1,6) உரிய சுக்கிரன் 8ல் இருப்பது விசேஷம். மேலும் , கேதுவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைத் தரும். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. பகை விலகும். (2,5) உரிய புதன் நல்ல பலனைத் தருவார். கையில் பணம் இருக்கும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். நாலுக்குரிய சூரியன் 6ல் நல்ல பலனைத் தருவார். தாய் நலம். வாகன சுகம் உண்டு. (7,12) உரிய செவ்வாய் 12ல் ஆட்சியாக இருப்பது நல்லதல்ல. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். சயன சுகம் இருக்காது. (8,12) உரிய குரு நல்ல பலனைத் தரமாட்டார். முதலீடுகளால் இலாபம் குறையலாம். நண்பர்களுக்குள் ஐக்கியம் குறையலாம். (9,10) உரிய சனி மூன்றில் இருப்பது நல்லது. பிதாநலம், தொழில் முன்னேறும்.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**
(1,4) உரிய புதன் 5ல் இருப்பது விஷேசம். மேலும், குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். வாகன சுகம் உண்டு. தாய் நலம், பூர்வீக சொத்து சேரும். இரண்டாம் இடத்தில் உள்ள சனியை சுக்கிரன் பார்ப்பதால் கையில் பணம் இருக்கும். (6, 11) உரிய செவ்வாய் 11ல் ஆட்சியாக இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவர் நண்பராவர். நண்பர்கள் விசுவாசமாக இருப்பார்கள்.(7,10) உரிய குரு 5ல் இருப்பது சிறப்பானது. திருமண வாய்ப்பு உண்டு. தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. (8,9) உரிய சனி இரண்டில் இருப்பது நல்லதல்ல. பிதாவுக்குக் கூடாது. முதலீடுகளால் லாபம் குறையலாம்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**
ராசி நாதன் சந்திரன் தனு முதல் மீனம் வரை சஞ்சரிப்பார். வார முற்பகுதியிலும் மத்திய பகுதியிலும் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். ராசியில் உள்ள சனியை சுக்கிரன் பார்ப்பது நல்லது. செவ்வாய் பார்ப்பது கூடாது. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். பிரயாண வாய்ப்பு உண்டு. இரண்டுக்குரிய சூரியன் 4ல் நல்ல பலனைத் தரமாட்டார். இருப்பினும், புதனோடு இணைவதால் நல்ல பலன் உண்டு. கையில் பணம் இருக்கும்.(3,12) உரிய புதன் 4ல் சூரியனோடு இருப்பது நல்லது. சயன சுகம் உண்டு. மாமன், மாமிக்கு நல்ல பலன் உண்டு (4,11) உரிய சுக்கிரன் 6ல் இருப்பது நல்லதல்ல. தாய்க்குக் கூடாது. வாகன சுகம் இருக்காது. நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை (5,10) உரிய செவ்வாய் 10ல் ஆட்சியாக இருப்பது மத்திம பலன் செய்யும். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**
ராசிநாதன் சூரியன் மூன்றில் இருப்பது சிறப்பானது. மேலும், குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைத் தரும். தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. இருப்பினும், ராசிக்கு இருபுறமும் கெட்ட கிரகங்கள் இருப்பது மன அமைதியைப் பாதிக்கலாம்.(2,11) உரிய புதன் மூன்றில் நல்ல பலனைத் தரமாட்டார்.கையில் பணம் இருக்காது. நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. (3,10) உரிய சுக்கிரன் 5ல் இருப்பது நல்லது. தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும். தங்க ஆபரணங்கள் சேரும். (2,9) உரிய செவ்வாய் 4ல் நல்ல பலனைத் தரமாட்டார். பெற்றோருக்கு நல்ல பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. (5,8) உரிய குரு 3ல் இருப்பது கூடாது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். முதலீடுகளால் லாபம் இருக்காது. (6,7) உரிய சனி 12ல் இருப்பது நல்லதல்ல திருமண வாய்ப்பு இருக்காது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**
(1,10) உரிய புதன் இரண்டில் இருப்பது நல்லது. மேலும், குருவின் நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பானது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத்தரும். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும். (2,9) உரிய சுக்கிரன் 4ல் இருப்பது சிறப்பானது. கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்லது. பிரயாண வாய்ப்பு உண்டு. அதிஷ்டம் இருக்கும். (3,8) உரிய செவ்வாய் எட்டில் இருப்பது கூடாது. முதலீடுகளால் லாபம் குறையலாம். தங்க நகைகள் தொலைய இடம் உண்டு. (4,7) உரிய குரு இரண்டில் இருப்பது நல்லது. தாய் நலம். வாகன சுகம் உண்டு. திருமண வாய்ப்பு உண்டு. (5,6) உரிய சனி 11ல் இருப்பது நல்லது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவர் நண்பராவர். 12க்குரிய சூரியன் இரண்டில் இருப்பது கூடாது. சயன சுகம் இருக்காது.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**
(1,8) உரிய சுக்கிரன் மூன்றில் இருப்பது நல்லது. மேலும், கேதுவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். பிரயாண வாய்ப்பு உண்டு. (2,7) உரிய செவ்வாய் 7ல் இருப்பது தோசமானது. கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். (3,6) உரிய குரு பார்வையில் இருப்பது தீங்கானது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம்.மாமன், மாமிக்கு நல்ல பலன் இல்லை. (4,5) உரிய சனி 10ல் இருப்பது மத்திமமான பலன். தாய்க்கு வாகன சுகம் இருக்காது. பிள்ளைகளின் செயற்பாடுகள் திருப்தி தரும். (9,12) உரிய புதன் ராசியில் நல்ல பலனைத் தராது. இருப்பினும், சூரியனோடு இணைவதால் நல்ல பலன் உண்டு. பிதா நலம் . சயன சுகம் உண்டு 10ல் சனி தொழில்துறை முன்னேறும்.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**
(1,6) உரிய செவ்வாய் 6ல் ஆட்சி இருப்பது விஷேசம். மேலும், சுக்கிரன் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவர் சமரசத்துக்கு வருவர். (2,5) உரிய குரு 12ல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (3,4) உரிய சனி 9ல் இருப்பது தீங்கு இல்லை. வாகன சுகம் இருக்காது. தாய்க்கு மத்திம பலன். தங்க ஆபரணங்கள் சேர பலன் உண்டு. (7,12) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது நல்லது. திருமண வாய்ப்பு உண்டு. சயன சுகம் உண்டு. (8,11) உரிய புதன் 12ல் இருப்பது கூடாது. நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. முதலீடுகளால் லாபம் இருக்காது. பத்துக்கு உரிய சூரியன் 12ல் இருப்பது தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**
(1,4) உரிய குரு 11ல் இருப்பது நல்லது. மேலும், ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். வாகன சுகம் உண்டு. தாய் நலம். பிரயாண வாய்ப்பு உண்டு. (2,3) உரிய சனி 8ல் இருப்பது தீங்கானது. கையில் பணம் இருக்காது. சொன்ன வண்ணம் செயல்பட முடியாது. மாமன் மாமிக்கு நல்ல பலன் இல்லை. (5,12) உரிய செவ்வாய் 5ல் ஆட்சியாக இருப்பது நல்லதுதான். பிள்ளைகளின் செயற்பாடு திருப்தி தராது. சயன சுகம் இருக்காது. (6,11) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். பகைவர்களை அடையாளம் காணலாம். (7,10) உரிய புதன் 11ல் இருப்பது சிறப்பானது. திருமண வாய்ப்பு உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும். 9க் குரிய சூரியன் 11ல் இருப்பது பிதாவுக்கு நலம்.

**மகரம்:உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2**
(1,2) உரிய சனி 7ல் இருப்பது தீங்கானது. இருப்பினும், தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். கையில் பணம் இருக்காது. பிரயாண வாய்ப்பு உண்டு. (3,12) உரிய குரு 10ல் இருப்பது தீங்கானது. சயன நலம் இருக்காது. ஆற்றல் இருந்தும் வெளிப்படுத்த முடியாத நிலை தோன்றும். (4,11) உரிய செவ்வாய் 4ல் ஆட்சியாகி இருப்பது நல்லதல்ல. தாய்க்கு நல்லதல்ல. வாகன சுகம் இருக்காது. நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை (5,10) உரிய சுக்கிரன் 12ல் நல்ல பலனைத் தருவார். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். தொழில்துறை முன்னேறும். (6,9) உரிய புதன் 10ல் நல்ல பலனைத் தரமாட்டார். பிதாவுக்கு கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. 7ல் உள்ள சனியை சுக்கிரன் பார்ப்பதால் திருமண வாய்ப்பு உண்டு.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**
(1,12) உரிய சனி6ல் இருப்பது விசேஷம். மேலும், தனது நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பானது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். பிரயாண வாய்ப்பு உண்டு. சயன சுகம் உண்டு. மேலும் குரு ராசியைப் பார்ப்பது நல்ல பலனைத் தரும். (2,11) உரிய குரு 9ல் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். நண்பர்களுக்கு நல்ல பலன் உண்டு. (3,10) உரிய செவ்வாய் மூன்றில் ஆட்சியாக இருப்பது தொழில் துறை முன்னேறும். தங்க ஆபரணங்கள் சேர பலன் உண்டு. (4,9) உரிய சுக்கிரன் 11ல் இருப்பது சிறப்பானது. பெற்றோர் நலம் உண்டு. (5,8) உரிய புதன் 9ல் நல்ல பலனைத் தரார். பிள்ளைகளின் செயற்பாடு திருப்தி தராது. முதலீடுகளால் லாபம் குறையலாம். 7க்குரிய சூரியன் 9ல் நல்ல பலனைத் தரார். திருமண வாய்ப்பு தாமதமாகலாம்.

இவ்வார 'ராசிபலன்' 07-11-2005 முதல் 13-11-2005வரை

**பொ. சந்திரன்**

**இவ்வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ் | | |
| | | | சனி |
| | | | |
| சுக்கிரன் | | புதன் சூரியன் குரு | கேது |

| | | |
|---|---|---|
| செவ்வாய் | பரணி | சுக்கிரன் |
| சுக்கிரன் | மூலம் | கேது |
| புதன் | விசாகம் | குரு |
| சூரியன் | விசாகம் | குரு |
| குரு | சுவாதி | ராகு |
| சனி | பூசம் | சனி |

ஐப்பசி 21 முதல் ஐப்பசி 27 வரை

சந்திரன் தனு முதல் மீனம் வரை

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**
(1,10) உரிய குரு எட்டில் இருப்பது நல்லதல்ல. இருப்பினும், ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம் அல்லது தடைப்படலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. (2,9) உரிய செவ்வாய் நல்ல பலனைச் செய்யாது. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கு நல்லதல்ல. (3,8) உரிய சுக்கிரன் 10ல் நல்ல பலனைத் தரமாட்டார். முதலீடுகளால் லாபம் இருக்காது. திறமையைக் காட்ட வசதி வாய்ப்பும் இருக்காது. (4,7) உரிய புதன் 8ல் சூரியனோடு சேர்வதால் நல்ல பலனைத் தரும். தாய் நலம். வாகன சுகம் உண்டு. திருமண வாய்ப்பு உண்டு. 6க்குரிய சூரியன் 8ல் புதனோடு சேர்வதால் உடல் ஆரோக்கியம் உண்டு. பகை விலகும். வழக்குகளில் வெற்றி வரும்.(11,12) உரிய சனி 5ல் நல்ல பலனைத் தரமாட்டார். சயன சுகம் இருக்காது. நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை.



# சுவடுகள்

இளைய அப்துல்லாஹ்

புலம் பெயர் நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்தாலும் மனம் முழுக்க எமது கிராமங்களைச் சுற்றிச் சுற்றியே இருக்கும். ஒரு ஒடியலைக் கண்டு விட்டாலே மனதுக்குள் ஒரு பூரிப்பு வரும். பனாட்டு, பன்பாய், உரல், உலக்கை, அம்மி, குளவி என்று வீட்டில் எமது பழகிப்போன வாழ்வோடு இணைந்த பொருட்களைக் கண்டாலே சந்தோஷம்.

உரல், உலக்கை ,அம்மி, ஆட்டுக்கல்லைக் கண்டாலே வெள்ளைக்காரர்களுக்கு இமை மேல் நோக்கி என்ன இது என்று வியப்பார்கள்.

அவைகளின் பிரயோசனங்களை எப்படி சொல்லி விளங்கப்படுத்துவது. அல்பேட்டன் பகுதியில் ஒருமுறை ஒரு வெள்ளைக்காரருக்கு விளங்கப்படுத்தி எனக்கு வியர்த்துவிட்டது.



ஆட்டுக் கல்லையும், அம்மிக் குளவியையும்அவர் தன்னிடம் உள்ள டிஜிரல் கமெராவால் படம் பிடித்தார். ஒவ்வொரு சமூகத்தினருக்கும் உள்ள பழக்க வழக்கங்கள் பாவனைப் பொருட்கள் மற்றவருக்கு அதிசயமாகத்தான் தெரியும். கல்லில் இருந்து நெருப்பெடுத்தது எல்லாம் மறந்து போய்விட்டது. உரலில் செத்தல் மிளகாயை வறுத்துப் போட்டு இடித்த சம்பல், அம்மியில் அரைத்துக் காய்ச்சிய கறி, ஆட்டுக் கல்லில் அரைத்த உழுந்துத் தோசை நினைத்தாலும் வாய்க்குள் நீர் வரும். சுவைகள் தானே மரணம் வரை எம்மோடு தொடர்ந்து கொண்டிருப்பவை. இவையெல்லாம் இங்கு கிடைக்கும். தொலைக்காட்சிகளிலும், வானொலிகளிலும், பத்திரிகைகளிலும் இலங்கைச் செய்திகளைப் போட்டுத்தான் நேயர்களையும், வாசகர்களையும் கவர வேண்டியிருக்கிறது

❖ ❖ ❖

அண்மையில் பெல்ஜியத்தில் நடைபெற்ற 'எழுக தமிழ்' நிகழ்விற்கு சென்றுவிட்டு திரும்பிய தெரிந்த ஒருவரைச் சந்தித்தேன். பிரிட்டிஷ் பாஸ்போட் இருந்தால் வீசா இல்லாமல் பாஸ்போட்டை மட்டும் காட்டிவிட்டு பல நாடுகளுக்குப் பயணம் செய்யமுடியும்.

ஐரோப்பிய நாடுகளுக்கும் அதுதான் விதி. போகும் போது கார்கள், பஸ்களில் பல நூறு பேர் லண்டனிஷ் இருந்து போனார்கள். போகும் போது எதுவுமே யாரும் கேட்கவில்லை.

நிகழ்வு முடிந்து வரும் பொழுது போடரில் வைத்து பஸ்கள் எல்லாவற்றையும் முழுமையாக செக் பண்ணியிருக்கின்றனர் பொலிஸார். பஸ்கள், கார்கள் எல்லாம் அக்குவேறு ஆணிவேறாக செக்கிங். தனித்தனியாக ஒவ்வொருவரிடமும் கேள்விகள். ஏன் போனீர்கள்? யார் அழைத்துப் போனீர்கள்.? அந்த நண்பர் பொலிஸாரிடம் சொன்னாராம், நாங்கள் விடுமுறையைக் கழிக்கப் போனோம் என்று. ஏற இறங்கப் பார்த்து விட்டு அனுப்பியிருக்கிறார் பொலிஸ்காரர்.

பிரபாகரனின் படங்கள், துண்டுப் பிரசுரங்கள் எவற்றையும் நாம் எடுத்து வரவில்லை, நல்லதாய் போச்சு என்றார்.

அதில் பாஸ்போட் பிரச்சினையில் ஒருவரைத் தடுத்து வைத்திருந்தார்களாம். அவர் என்ன ஆனார் என்று இன்னும் தெரியவில்லை.

கொட்டும் மழையில் எழுப்பிய கோஷமும், நனைந்த தமிழர்களையும் ரொனி பிளேயர் பார்த்திருப்பார் தானே, ஏதாவது பிரயோசனம் கிடைக்கும் என்று நண்பர் நம்பிக்கையோடு சொன்னார்.

❖ ❖ ❖

லண்டன் குண்டு வெடிப்புகளுக்குப் பின்பு முஸ்லிம்கள் மீது பலத்த கண்ணோடு தான் பிரிட்டிஷ் பொலிஸார் அவதானித்து வருகின்றனர்.

இரகசிய புலனாய்வுத்துறை கண்ணுக்குள் எண்ணை ஊற்றியபடியே இருக்கிறது. சுரங்க ரயில் நிலையங்கள் அதி உச்ச கண்காணிப்புக்கு உட்படுத்தப் பட்டிருக்கின்றன.

மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பினாலும் இன்னும் பயம் போனபாடில்லை, வெள்ளைக் காரர்கள் தாடி, தலைப்பாகையைக் கண்டாலே அச்சப்படுகிறார்கள்.

முஸ்லிம் நண்பரொருவர் சொன்னார், இப்பொழுது தான் பெரிய பை எதுவும் கொண்டு போவதில்லை, பயமாக இருக்கிறது என்று. முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் கண்காணிப்புப் பொலிஸார் சிவில் உடையில் நடமாடுகிறார்கள்.

விமான நிலையத்தை அண்டிய பகுதிகளில் விமான நிலையத்துக்கு உள்ளே வருவோர் போவோர் எல்லோருமே கண்காணிக்கப்படுகின்றனர்.

முஸ்லிம் பெண்கள் அச்சத்துடனேயே பர்தா, ஸ்காப் போன்ற உடைகளுடன் நடமாடுகின்றனர்.

ஆனால் லண்டன் இப்பொழுது வழமைக்குத் திரும்பி விட்டது, அச்சம் போன பாடில்லை.

ஈராக்கில் பிரிட்டிஷ் இராணுவத்தினர் நிற்பது இங்குள்ள வெள்ளைக்காரருக்கு அவ்வளவு விருப்பமானதாக இல்லை. மீண்டும் இப்படி ஏதாவது குண்டுத் தாக்குதல் நடக்குமோ என்று அஞ்சுகின்றனர்.

பொதுவாகவே அச்சத்தோடு தான் மனிதர்கள் வாழ வேண்டிய நிலை உலகெங்கும் இருக்கிறது. அதுதான் கை சேதம்.

❖ ❖ ❖

புதிய சட்டங்கள் இரண்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன பிரித்தானியாவில்.

இங்கு பெண்கள் மிகவும் சுதந்திரமாகவே பழகுபவர்கள். அவர்களை 'பப்'க்குக் கூப்பிடலாம். மது அருந்த அழைக்கலாம். செக்ஸ்க்குக் கூட அழைக்கலாம். அவர்கள் விரும்பினால் வருவார்கள்.

இல்லை என்றால் 'சொறி' சொல்வார்கள், அவ்வளவுக்கு சுதந்திரமானவர்கள் பெண்கள்.

ஆண்கள் அவர்களின் சுதந்திரமான போக்கை வைத்து துஷ்பிரயோகங்களில் ஈடுபடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு பல காலமாக விடுக்கப்பட்டு வந்தது.

இப்பொழுது சட்டமே வந்து விட்டது. 'நீ அழகாக இருக்கிறாய் பெண்ணே' என்று ஒரு பெண்ணைப் பார்த்து நல்லதுக்கோ கெட்டதுக்கோ சொன்னால் அது தண்டனைக்குரிய குற்றம். அந்தப் பெண், பொலிஸில் முறையிட்டால் சொன்ன ஆணுக்குத் தண்டனை கிடைக்கும். தண்டனை கடுமையானது.

இரண்டாவது, பொது இடங்களில் சிகரட் பிடிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. சிகரட் பெட்டிகளில் முக்கால் வாசிக்கு 'சிகரட் குடிப்பதால் கான்ஸர் வரும்' என்று எழுதி வைத்திருக்கிறார்கள்.

பொது மக்கள் புழங்கும் இடங்கள், பார்கள், பஸ் தரிப்பிடங்கள், பாதைகளில் புகை பிடித்தல் இனி குற்றமாகும்.

இந்தக் குளிருக்கு புகை பிடிக்காமலும் இயலாது, என்ன செய்வது என்று புகைத்தல்காரர்கள் சலித்துப் போகிறார்கள்.

வேண்டாம், வேண்டாம் என்று சொல்ல, புகையை உலகம் முழுக்க பரப்போ பரப்பென்று பரப்பியவர்கள், புகைவியாபாரத்தில் கொள்ளை கொள்ளையாக சம்பாதித்தவர்கள், புகைக்க வேண்டாம் என்கிறார்கள்.

எல்லாம் தனக்குத் தனக்கு தீங்கு வந்தால் தான் ஞானம் பிறக்கும்.

❖ ❖ ❖

ஒக்ஸ்போட் பகுதியில் இருந்து பஞ்சாபி இளைஞன் ஒருவரின் கூட்டாளி ஒருவர் சவுத் ஹோல் பகுதிக்கு வந்தார். வந்தவர் வெள்ளைக்காரர். அவரும் இளைஞர்.

அவர் வாழும் பகுதி முழுக்க முழுக்க வெள்ளைக்காரர் வாழும் இடமாகும். கறுப்புத் தோலை மருந்துக்கும் காண முடியாது.

இங்கு வந்து பார்த்தால் முழுக்க முழுக்க பஞ்சாபிகளும், தமிழர்களும் மட்டுமே இருக்கிறார்கள். தோல் நிறம் வேறு, அவரை அச்சப்படுத்தி இருக்கிறது.

சவுத்ஹோல் பகுதிக்கு நூறு வருடத்துக்குள் வந்த பஞ்சாபியர்கள், குஜராத்திகள், வீடு கட்டி, நிலம் எடுத்து தங்களை ஸ்திரப்படுத்தி வைத்திருக்கின்றனர். அவர்களுக்கென்று 'சோட்வேவ்' அலைவரிசையில் வானொலி ஒன்றும் இயங்கிவருகிறது.

அவர்கள் தங்கள் அடையாளச்சின்னங்களை இன்னும் தலைமுறை தலைமுறையாக பாதுகாத்து வருகின்றனர். சீக்கியர்கள் கை வாள் ஒன்றை இடுப்பில் சொருகி இருப்பது நடைமுறையாகும்.

இங்கு அப்படித்தான் வாள் வைத்திருப்பார்கள். அதற்கு இங்கிலாந்தில் அனுமதி இருக்கிறது அவர்களுக்கு.

வாளோடு ஆட்களைக் கண்டுவிட்ட வெள்ளைக்காரப் பொடியன், காரை விட்டு இறங்கவேயில்லை.ஏன் என்று கேட்டார் பஞ்சாபி. கொலைப் பயமாக இருக்கிறது, வா எங்கள் ஊருக்கே போய் விடுவோம் என்றிருக்கிறார் அவர். உடனேயே எல்லாவற்றையும் விட்டுவிட்டு வெள்ளைக்கார நண்பனோடு ஒக்ஸ்போட்டுக்குப் போய்விட்டார் பஞ்சாபி.

உயிரச்சம் என்பது எவ்வளவு பெரியது.

❖ ❖ ❖

இரண்டு வாரங்களுக்கு முன்பு 'சுவடுகள்' பகுதியில் 'தமிழீழ தேசிய கீதம்' தொடர்பாக விரிவாக எழுதியிருந்தேன்.

போன வாரம் உதயன் பத்திரிகையில்



தேசிய கீதத்தை எழுத உலகெங்கிலும் உள்ள தமிழ் எழுத்தாளர்கள், கவிஞர்களுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றனர் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர்.

0094-21228 3941 என்ற தொலைநகல் இலக்கத்திற்கு எழுதிய தேசியகீதத்தைப் பக்ஸ் பண்ணலாம்.

❖ ❖ ❖

அ. ஜேசுராசாவின் கவிதைகள் எப்பொழுதும் இருப்பின் மீது பிணைந்திருக்கும். 'புதுசு' காலங்கள் மிகவும் அவதானத்துக்குரியது. 'அலை' யின் ஆசிரியர் 'கவிதை' என்ற கவிதைக்கான சஞ்சிகையை நடத்ியவர். மொழி பெயர்ப்புக் கவிதைகளை வீச்சோடு கொணர்ந்தவர். எனக்குப் பிடித்த ஜேசுராசாவின் கவிதை ஒன்று.

அவர்கள் சொல்லினர்  
இந்த வீடு  
எனக்குச் சொந்தமில்லையென  
வெறுப்பு வழியும் பார்வையால்  
வீசியெறிந்த சொல்  
நெருப்பினால் பலமுறை சொல்லினர்  
இந்த வீடு  
எனக்குச் சொந்தமில்லையென  
நானும் உணர்கிறேன் இப்போது  
இது என்னுடையதில்லையென!  
நாளை எனக்கு ஒன்றுமில்லை  
இன்றும் நிச்சயமற்றது  
எனது வீட்டிற்குச் செல்ல வேண்டும்  
தான் செல்வேன்.

கவிதை- 'எனது வீடு'

(இன்னும் வரும்......)

# பெருவாற்றுக் குடைவு

வேகமாக ஓடும் நதிகள் மண் பரப்பில் ஜாலம் செய்கின்றனர். வெகு வேகமாக ஓடும் ஆறு அதன் போக்கில் மண்ணையும் பாறையையும் அரிப்பதனாலும், அறுப்பதனாலும் தரை மட்டத்துக்கு மிகமிக கீழே போய்விடுகிறது. அப்பொழுது பூமி செங்குத்தாக பிளந்ததுபோல ஒரு தோற்றம் உண்டாகும்.இதைத்தான் ஆற்றுக்குடைவு என்கிறோம்.



வட அமெரிக்காவில் மிகப்பெரிய அளவில் இது போன்ற இயற்கையின் மாற்றம் ஏற்பட்டிருக்கன்றது.நீளம் 1400 மைல்,சராசரி அகலம் 300 அடி.சராசரி ஆழம் 100 அடி. கொயராடோ நதி ஒரு நாளைக்கு 5 லட்சம் தொன் மணலையும் களி மண்ணையும் அடித்துக்கொண்டு போய்க்கொண்ட இருக்கின்றதாம்,இப் போது அதன்மேல் 'க்ளன் கேன்யன்' என்ற அணையைக்கட்டியபிறகு அதனதுவேகம் குறைந்துவிட்டது.இந்த நதி பூமியை அட்டகாசமாகக் கீறிக்கொண்டு தெற்குப் புறமாக வளைந்து மெக்ஸிக்கோ நாட்டிலுள்ள கலிபோர்ணியா வளைகுடாவில் கலந்துவிடுகிறது.

அரிசோனா மாநிலத்தில் இந்த கொலராடோ நதியால் ஒரு பெரிய வெடிப்பு ஆற்றுக்குடைவாக ஏற்பட்டிருக்கிறது. இதைத்தான் பெருவாற்றுக் குடைவு என்று அழைக்கிறார்கள்.இந்த இடம் நீர் அரிப்பின் மகத்தான சக்தியை இன்றும் உலகத்திற்கு பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கிறது.

இங்கே கொலராடோ நதி ஒரு பெரிய பாறைப்பிளவின் அகல பாதாளத்தில் பாய்ந்து ஓடிக்கொண்டிருக்கிறது.இந்தப் பிளவின் நீளம் 277 மைல்.குறுக்கு வெட்டு அகலம் 18 மைல். கடல் மட்டத்துக்கு மேல் 2400 அடி உயரமாகவும் தெற்கு விளிம்பில் 4500 அடி தாழ்வாகவும் இருக்கிறது என்றால் நதியின் வேகத்தை நாம் கற்பனைசெய்துகொள்ளலாம்.ஒரு பாறையை இரண்டாக வெட்டி சற்றுப்பிளந்தால் அதன் உட்புறம் எப்படி காட்சி அளிக்குமோ அதே போல மிகப் பிரமாண்டமான அளவில் இந்தக்குடைவு தோற்றமளிக்கிறது.இந்தக் குடைவின் மொத்தப்பரப்பு 1900 சதுரமைல்.

இந்தக்குடைவை ஏற்படுத்த 30-லிருந்து 60 லட்சம் ஆண்டுகள் பிடித்திருக்கலாமென்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். வெடிப்பும் இந்த அளவோடு நின்றுவிட்டதாக அவர்கள் கருதவில்லை. ஏனென்றால் கொலராடோ நதியின் அரிப்புச் சக்தி, மழை,பனி,வெப்பம்,பாறையினூடே வீசும் காற்று,உறைபனி போன்றவைகளால் இந்தப் பாறையின் உருவம் படிப்படியாக மாறிக்கொண்டே வருகிறது.

இந்தக் குடைவில் பாலைவனச் சூட்டிலிருந்து மலை சிகரங்களில் நிலவும் தட்பம் வரை ஆறு விதமான நிலைகள் இருக்கின்றன.

இந்தக் குடைவைச் சார்ந்த இடங்களில் சுமார் 70 விதமான விலங்குகளும், 250 வகை பறவைகளும், 25 ஊர்வன வகைகளும், நீர் நிலத்தில் வாழும் 5 வகைப் பிராணிகளும் காணப்படுகின்றன. பனி, வெய்யில் நீங்கலாக மற்றக் காலங்களில் குடைவின் சரிவுகளில் செடிகள் ஏராளமாக பூத்துக் குலுங்கும்.

குடைவின் உள்ளே இறங்கிப் பார்த்தால் பாறைப் பிளவுகளில் எண்ணற்ற வண்ணங்களும் உருவங்களும் நன்றாக கண்ணுக்குப் புலப்படும்.

# பல்சுவைக் கதம்பம்

ஆக்கம்: ஜ லெலியட்

## உலகின் நீளமான பட்டுப் புடைவை

உலகிலேயே மிக நீளமான பட்டுப்புடைவையைத் தயாரித்து கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் சாதனை பதித்துள்ளது தமிழ் நாட்டின் போத்தீஸ் நிறுவனம். இவர்கள் தயாரித்துள்ள பட்டுப்புடைவையின் மொத்த நீளம் எவ்வளவு தெரியுமா? 1,276 அடி. உலகிலே இத்தனை நீளமான பட்டுப் புடைவை இதுவரை தயாரானதே இல்லை. இந்தப் பட்டுப்புடைவையில் இந்தியாவின் ஐந்து மாபெரும் சகாப்தங்களை வண்ணச் சித்திரங்களாக தீட்டியிருக்கிறார்கள்.

மொகஞ்சதாரோ - ஹரப்பா சகாப்தம், ராமர் சகாப்தம், கிருஷ்ணர் சகாப்தம், புத்தர் காலம், சேர சோழ, பாண்டியர் காலம், மொகலாயர் சரித்திரம், மற்றும் நாட்டின் சுதந்திரப் போர் போன்ற அனைத்து நிகழ்ச்சிகளையுமே வெகு அழகாக இதில் பதிவு செய்திருக்கிறார்கள். இவை தவிர, இந்திய நாடாளுமன்றக் கட்டடம், தாஜ்மகால், சார்மினார் கோபுரம், குதுப்மினார் கோபுரம், தஞ்சை பெரிய கோயில், அமிர்தசரஸ் பொற்கோயில், எழும்பூர் தேவாலயம் என நாட்டின் முக்கிய நினைவுச் சின்னங்களை எல்லாம் இந்தப் பட்டுப் புடைவையில் சித்திரங்களாகப் பார்வையிட முடிகிறது. தங்கச் சரிகையில் இந்திய ...திரகால சின்னங்களை வெகு அழகாக ...ய்திருக்கும் நேர்த்திக்காகவே இந்தப் பட்டுப்புடைவையை இன்னொரு முறை பார்க்க விருப்பம் எழுகிறது.

இது குறித்து போத்தீஸ் நிறுவனத்தின் பங்குதாரர் ரமேஸ் கூறுகையில், "இந்த 1,276 மீட்டர் நீள 'கின்னஸ் சாதனைப் ...டைவை' தன்னந்தனியாக நெய்து



சேர்க்கப்பட்டதல்ல. தொடர்ச்சியாக ஒரே பீஸாக நெய்யப்பட்டது. தேசத்தின் கைத்தறி தொழிலின் பெருமையை உணர்த்தும் வண்ணம் உருவாக்கப்பட்ட புடைவை இது" என்றார்.

"ஏற்கனவே 'ஐஎஸ்ஓ 9001' என்ற சர்வதேசத் தரச் சான்றிதழை இது பெற்றுள்ளது. அதேபோல், நெசவுச் சிறப்புக்கான தேசிய விருதையும் பெற்றுள்ளது. தற்போது கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற்றதன் மூலம் ஒரு சர்வதேச அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது எங்கள் நிறுவனம்" என்றார்.

போத்தீஸ் நிறுவனத்தின் இந்த சாதனையை கின்னஸ் உலக சாதனைப் புத்தகம் ஏற்றுக் கொண்டு அதற்கான உறுதிக் கடிதத்தையும் அனுப்பியுள்ளது.

## சந்தோஷம் தரும் பெங்-சுயி முடி அலங்காரம்

ஒரு வீடு அல்லது கட்டடம் எந்த முறையில் கட்டப்பட்டு இருக்க வேண்டும் என்பதைச் சொல்லும் பாரம்பரிய சாஸ்திரம் தான் 'வாஸ்து'.

இந்தியாவில் வாஸ்து இருப்பது போல





சீன நாட்டிலும் 'வாஸ்து' உள்ளது. அங்குள்ள முறைக்கு 'பெங்-சுயி' என்று பெயர்.

'பெங்-சுயி' முறையில் வீடு கட்டுவது மட்டுமல்ல தலைமுடியை வெட்டிக் கொண்டாலும் ஒருவரது வாழ்க்கையில் மகிழ்ச்சி பெருகும், நல்ல விஷயங்கள் நடக்கும்", என்ற புதிய நம்பிக்கை பரவியுள்ளது.

'பெங்-சுயி' முறைப்படி முடி அலங்காரம் செய்யும் கலை சீனாவில் நீண்ட காலமாக இருந்து வருகின்றது. இந்த முறைப்படி ஒருவர் முடி வெட்டிக் கொண்டால் தலைமுடி உதிர்வது குறையும். முடி சீராக வளரும் என்பது மட்டுமல்ல, 'பெங்-சுயி' முடி அலங்காரம் செய்து கொள்பவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்க்கை நடத்துவர் என்றும் சீனர்கள் நம்புகின்றனர்.

பிரபல ஹொலிவுட் நடிகை ஜெனிபர் லோபஸ், உலகப் புகழ் பெற்ற மாடல் அழகி ஜெர்ரி ஹால் ஆகியோர் 'பெங்-சுயி' முறைப்படி தலைமுடி அலங்காரம் செய்து கொண்டனர். அதன் பிறகு தங்களின் வாழ்க்கையில் புதிய மறுமலர்ச்சி ஏற்பட்டதாக அவர்கள் கூறியதைத் தொடர்ந்து பெங்-சுயி தலைமுடி அலங்காரத்துக்கு 'மவுசு' அதிகரித்துள்ளது. இங்கிலாந்தில் சீன வாஸ்து 'பெங்-சுயி' பாணியில் முடி வெட்டிக்கொள்ள பலர் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.




2008 பெய்ஜிங் ஒலிம்பிக் சின்னத்தை விளம்பரப் படுத்துவதற்காக, முகத்தில் ஒலிம்பிக் சின்னத்தை வரைந்து வந்த மாடல் அழகி.

## நான் இன்றைய மங்கை

அலங்கார உலகம் அசுர வேகத்தில் பயணிக்கிறது. அதற்கேற்றால் போல இன்றைய இளம் பெண்களிடையே அலங்கார மோகம் விதவிதமான கற்பனைகளுக்கு உயிர் கொடுத்து பார்க்கச் செய்கிறது. அந்த வகையைச் சேர்ந்ததுதான் உடல் ஓவியம். வளர்ந்த நாட்டின் இன்றைய மாடல் மங்கைகளிடையே பெருகி வரும் புதிய் பேஷனாக, வண்ணங்களால் உடலில் ஓவியங்கள் தீட்டும் கலை விளங்குகிறது. நம் நாட்டு மாடல் அழகிகளிடம் இது போன்ற கலையைக் காண முடியும். படத்தில் நீங்கள் காண்பது சீனதேசத்து சிட்டு ஒருத்தி. தன் உடலில், குறிப்பாக கன்னத்தில் அழகிய பூக்களை ஓவியமாகத் தீட்டியபடி சமீபத்தில் அரங்கேறிய இவரை போட்டோகிராபர்கள் மொய்த்தனர். இவரது மேனியில் மிளிரும் இந்த ஓவியத்தை வரைந்தது- பாரம்பரியம் மிக்க சீன ஓவிய ஆசான் ஒருவர்.





## மூன்றரைக்காலி!

முக்காலி உண்டு. நாற்காலி உண்டு. இதுவோ மூன்றரைக்காலி.

இது, ஜெனிவா நாட்டில் உள்ளது. 1998இல், மறைந்த இங்கிலாந்து இளவரசி டயானா முன்னின்று நடத்திய நிகழ்ச்சியில் இது வடிவமைக்கப்பட்டது. கண்ணி வெடியின் கொடூரத்தை உலகுக்கு உணர்த்த எழுப்பப்பட்ட அபாய சின்னம் இது.



சினாவின் செஜியாங் மாகாணத்தில் திருமணத்திற்காக மணப்பெண் ஒருவர் 20,08 மீ நீளமுள்ள உடையணிந்து வந்தார்.



## தண்ணீரில் நடக்கலாம்!

தண்ணீரில் நீந்த முடியும். தண்ணீரில் நடக்க முடியுமா?. 'முடியும்' என்கிறாள், இந்த சீன மாணவி. பெயர் வான்ங் வென்டிங். பள்ளிக்கூட மாணவியான இவள் புதுவகைக் காலணி ஒன்றைக் கண்டு பிடித்துள்ளாள். அதைக் காலில் அணிந்து கொண்டால் தண்ணீரில் நடக்க முடியும்.

"நான்கு ஆண்டு முயற்சிக்குப் பிறகு கிடைத்த வெற்றி, அது. அந்தப் புது வகைக் காலணியைக் கண்டு பிடிக்க, எனக்கு உந்துதலாக இருந்தது - வாத்துகளின் கால்கள்தான்" என்கிறாள் இவள்.



# தேர்தலுக்காக பணத்தை அள்ளி இறைக்கும் மஹிந்த!

ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை எப்படியாவது தோற்கடித்து விட வேண்டும் என்ற எண்ணத்தில் பெரும் எடுப்பில் தேர்தல் பிரசார வேலைகளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ முன்னெடுத்ததால் இப்போது தேர்தல் பிரசார நடவடிக்கைகளைத் தொடர்வதற்குத் தேவையான பண வசதி இல்லாமல் திண்டாடுகிறார் என்று செய்திகள் கசிந்துள்ளன. இவருக்குக் கை கொடுக்க வெளிநாடு ஒன்று முன்வந்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இவரது தேர்தல் செலவுகளுக்கு லட்சக் கணக்கில் வர்த்தக நிறுவனங்களும், கட்சிக்கு ஆதரவான வர்த்தகப் பிரமுகர்களும், ஏனையவர்களும் வாரி இறைத்ததாகவும், இவர்கள் இதுவரை வழங்கிய பெருந் தொகைக்கு என்ன நடந்தது என்று கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கேட்கிறார்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மஹிந்தவின் தேர்தல் முகாமையாளரான அவரது சகோதரர் பசில் ராஜபக்ஷ போதிய நிதி வசதி இல்லாமல் பிரசார வேலைகளை முன்னெடுப்பது கடினம் என்று மஹிந்தவுக்குத் தெரிவித்து விட்டாராம்.

இந்தச் செய்தியைக் கேட்டு குழப்பமடைந்த மஹிந்த, "அலரி மாளிகைக்கு வந்து சேர்ந்த லட்சக் கணக்கான தொகைக்கு என்ன நடந்தது? செலவிடப்பட்ட பணத்திற்கு கணக்கு வைத்திருக்கிறீர்களா?"-என்று தனது சகோதரரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.


"இப்படி கணக்குப் பதிவு செய்து கொண்டு தேர்தல் பிரசாரம் செய்ய முடியாது. அப்படியானால், தேர்தல் போட்டியை ஒரு பக்கம் ஒதுக்கி வைத்து விட்டு ஒரு கணக்குப் பதிவாளராகத்தான் நான் பணியாற்ற வேண்டி இருக்கும் " -என்று பதில் சொன்னாராம் மஹிந்தவின் சகோதரர் பசில்.

தேர்தல் விளம்பரங்களுக்காக இப்போது 5 கோடி ருபா மட்டும் கையில் உள்ளது.பிரசார வேலைகளை தேர்தலுக்கு முன்னர் முறையாக முன்னெடுப்பதற்கு இன்னும் 10 அல்லது 20 கோடி ருபா தேவை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அது மட்டுமல்ல, அநேக வர்த்தகர்கள் ரணிலையே ஆதரிக்கின்றனர். ஆதலால் இனி தேவையான பணத்தைப் பெற்றுக் கொள்வது என்பது இலகுவாக இருக்கப் போவதில்லை என்றும் மஹிந்தவுக்கு பசில் தெரிவித்துள்ளாராம்.

### இரண்டு வழிகள்

தனது சகோதரர் சொல்லியவற்றை அவதானமாகக் கேட்டுக் கொண்ட மஹிந்த, அவருக்கு இவ்வாறு ஆலோசனை வழங்கினார் என்று தெரிவிக்கப்படுகிறது.



"எங்களுக்கு இப்போது இரண்டு வழிகள் இருக்கின்றன. தேர்தல் பிரசாரத்துக்காக ஐம்பது கோடி ருபாவைத் தருமாறு ஜனாதிபதியிடம் கேட்கலாம். இல்லாவிட்டால் எல்லா அமைச்சர்களையும் அழைத்து ஒவ்வொரு அமைச்சிலும் இருந்து 5 கோடி ருபாவை ஒதுக்குமாறு வேண்டுகோள் விடுக்கலாம்"- என்பதே அந்த ஆலோசனை.

உடனே பசில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளேயுடன் தொடர்பு கொண்டு பிரதமரின் தேர்தல் பிரசாரத்துக்கு 5 கோடி ருபாவை ஒதுக்குமாறு கேட்டபோது மறுத்து விட்ட அவர் சொன்னார் "என்ன பைத்தியமா, இப்பொழுது எங்களை ஆதரிக்க வர்த்தகர்கள் எவருமே இல்லை.எல்லோரும் ரணிலின் பக்கம் சாய்ந்து விட்டார்கள். இதுவரை எங்களை ஆதரித்தவர்கள் கூட இப்போது ரணிலை ஆதரிக்கத் தொடங்கி விட்டார்கள். கடந்த இரண்டு வார காலம் வரை எங்களோடு நின்றவர்கள் இப்போது ரணிலை ஆதரிக்கத் தொடங்கி விட்டார்கள். பிரதமர் ஜே.வி.பி யுடனும், ஹெல உறுமயவுடனும் சேர்ந்து இருப்பதால் எங்களுக்கு உதவ முடியாது என்றும் சொல்கிறார்கள்"- என்று சொல்லி குழப்பமடைந்திருந்த பசிலை மேலும் குழப்பமடையச் செய்துவிட்டார் ஜெயராஜ்.

ஜெயராஜ் கூறியவற்றை பசில் உடனே மஹிந்தவுக்குத் தெரிவித்ததும், தான் சந்திரிக்காவைச் சந்தித்து 50 கோடி ருபாவை தேர்தல் பிரசாரத்துக்காக ஒதுக்கித் தருமாறு கேட்கப் போவதாக மஹிந்த சொன்னாராம்.

## காலியான கஜானாவுக்கு தாய்வான் கை கொடுக்கிறது

### தாய்வான் உதவி

இப்போது பிரதமருக்கான தேர்தல் பிரசாரத்துக்கு நிதி வசதிசெய்து கொடுக்க தாய்வான் அரசு முன் வந்துள்ளதாகக் கூறப்படுகிறது. பிரதமர் மஹிந்த இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றால் தாய்வானுடன் ராஜதந்திரத் தொடர்புகள் ஏற்படுத்தப்படும் என்று அந்த நாட்டுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியின் அடிப்படையிலேயே அவருக்கு நிதி உதவி செய்ய அது முன்வந்துள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சர், தாய்வான் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இதற்கான ஏற்பாடுகளைச் செய்ததாகவும், சிங்கப்பூரில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் வீசாவைப் பெற்றுக் கொண்டு தாய்வான் அதிகாரிகள் கடந்த வாரம் இலங்கை வந்ததாகவும் நம்பப்படுகிறது.

இவர்கள் வரும்போது 3 லட்சம் அமெரிக்க டொலர்கள் கொண்டு வந்ததாகவும், முதலில் இவர்கள் ஐ.தே.கட்சி மேல் மட்டத்துடன் தொடர்பு கொண்டபோது இலங்கை ராஜதந்திர உறவு கொண்டிராத ஒரு நாட்டிலிருந்து கிடைக்கும் நன்கொடையைப் பெற்றுக்கொள்ள கட்சி தயாராக இல்லை என்று அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

பிரதமர் மஹிந்தவுக்கு தாய்வான் உதவி அளிக்க முன்வந்தமை எதிர்பாராத திருப்பம் என்று வர்ணிக்கப்படுகிறது.

### இந்தியா பாராமுகம்

இது விடயமாக மேலும் கூறப்படுவதாவது,

ஆரம்பத்தில் இந்தியாவே பிரதமருக்கு ஆதரவாக செயற்பட்டு வந்தது. 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் பின்னர் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகத் தெரிவுசெய்யப்படுவதற்கு இந்தியா பூரண ஆதரவு வழங்கி வந்தது.ஆனால், ஜே.வி.பி யுடன் உடன்பாடு செய்து கொண்ட பின்னர் அவர் சீனாவை நோக்கி மேற்கொண்ட நகர்வுகளை இந்தியாவால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அதனால், பிரதமரோடு நெருங்கி இருந்த இந்தியா தூர விலகிக்கொண்டது. ஆனால், மஹிந்தவின் அணியில் உள்ளவர்களின் நகர்வுகளை அது கண்காணித்து வருகின்றது.

இந்த உண்மைகளை 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' கணக்கு விவரங்களை மூடி மறைத்தது போல, பிரதமர் மறுக்கக்கூடும். ஆனால், இந்த விடயத்தை நிருபிப்பதற்கான ஆதாரங்கள் அனைத்தும் இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இந்தச் செய்திகள் யாவும் ஜனாதிபதி சந்திரிக்காவின் காதுகளுக்கு எட்டி இருக்கின்றன. இந்தப் பின்னணியில் தான் அவருக்கும் எதிர்க்கட்சித் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஐ.தே.கட்சியும், ஸ்ரீ.ல.சு. கட்சியும் தேசிய நிகழ்ச்சித் திட்டம் ஒன்றின் கீழ் இணைந்து செயற்படுவது பற்றிய பேச்சுகள் கடந்த 26ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றன.

அரசியல் காலநிலையில் ஏற்படும் எதிர்பாராத திடீர் திருப்பங்கள் எதிர் வரும் நவம்பர் 17 ஆம் திகதிக்கு முன்னர் பெரிய மாற்றங்களுக்கு அடிகோலுவதாக அமையலாம்.

---

# நடிகை முகத்தில் சிறுநீர் கழித்த இளைஞர்!

நடிகைகளுக்கு ஏற்படும் செக்ஸ் தொல்லைகளை குறித்து அவ்வப்போது சூடான செய்திகள் வருவது வழக்கமாகிவிட்டது. இந்தி நடிகை செலீனா ஜெட்லி, செக்ஸ் தொல்லையால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளார்.

ஐஸ்வர்யாராய், மல்லிகா செராவத், பிபாசா பாசு வரிசையில் கவர்ச்சியில் கொடிகட்டிப் பறப்பவர் செலீனா ஜெட்லி. இவர் நடிக்கும் 'ஜவானி திவானி' என்ற இந்திப் படத்தின் படப்பிடிப்பு மொரீசியஸ் தீவில் நடந்தது. அப்போது தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று செலீனாவிடம் பேட்டி காண நேரம் கேட்டது. அதற்கு நேரம் ஒதுக்கி, கடற்கரையில் செலீனா காத்திருந்தார்.

அப்போது அங்கு வந்த இளைஞன் ஒருவன் செலீனாவை கட்டிப்பிடித்து முத்தமிட முயற்சி செய்ய, செலீனா கூச்சல் போட, இளைஞன் தப்பி ஓடிவிட்டான். தொலைக்காட்சி குழுவினர் பேட்டி எடுத்துக்கொண்டிருந்தபோது மீண்டும் அதே இளைஞன் வந்தான். கூட்டத்தை விலக்கிக் கொண்டு நேராக செலீனாவை நெருங்கினான். கண் இமைக்கும் நேரத்தில் பேண்ட் ஜிப்பை கழற்றி, செலீனாவின் முகத்தில் சிறுநீர் பாய்ச்சினான்!

சுற்றி வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தவர்கள் அந்த இளைஞனுக்கு தர்ம



அடி கொடுத்து அனுப்பினார்கள்!

அடுத்த நாளும் அதே இளைஞன்-செலீனாவிடம் வந்து 'செக்ஸ்' தொல்லை செய்ய, செலீனா போலீசில் புகார் செய்தார். அந்த இளைஞன் இப்போது கம்பி எண்ணுகின்றான்!

செலீனா, இப்போது படப்பிடிப்புக்கு மெய்க் காப்பாளர்களுடன் போகிறார்.

---


# முழுமையான முன் அழகு


'அதிகமானால் அமிர்தமும் நஞ்சு' - என்ற சொல் பெண்களின் மார்பழகுக்கும் பொருந்தும். ஏராளமான பெண்கள் அளவுக்கு அதிகமான பெரிய மார்பகங்களால், வெளியே செல்லமுடியாத வேதனைகளை அனுபவிக்கத்தான் செய்கிறார்கள்.

சரியான அளவிலான 'பிரா' வினைத் தேர்ந்தெடுத்து அணிந்தால், ஓரளவு இந்த பிரச்சினையை கட்டுப்படுத்தலாம். பெரிய மார்பகங்களால் பெரிய அளவில் தொல்லைகளை அனுபவிக்கும் பெண்கள் பிளாஸ்டிக் 'சர்ஜரி'யை நம்புகிறார்கள். இதன் மூலம் 700 கிராம் முதல் ஒன்றரைக் கிலோ வரையுள்ள எடையை குறைக்கிறார்கள். இப்படி மார்பளவு குறைக்கப்படும்போது உடலில் கூன் விழுதல், முதுகுவலி ஏற்படுவதை தவிர்க்கவும் முடியும்.

அதிக எடை கொண்ட குண்டான பெண்களுக்கே, பெரிய அளவு மார்பு பிரச்சினைகள் தோன்றுகின்றன. சத்திர சிகிச்சைக்குப் பிறகும், மார்பளவு அதிகரிக்காமல் இருக்கவும் சிலவித சிகிச்சைகளை டாக்டர்கள் அளிக்கிறார்கள். அதே நேரத்தில் மிகச் சிறிய மார்பகங்களைக் கொண்ட பெண்களுக்கு மார்புகளை பெரிதாக்கும் சிகிச்சைகளும் உள்ளன. 'சலைன் இம்பிளாண்ட்', 'சிலிக்கன் ஜெல்' நிரப்பிய பைகளை மார்புகளின் உள்ளே வைத்தல் போன்ற சிகிச்சைகள் மூலம் மார்புகள் பெரிதாக்கப்படுகின்றன. ஆனால் இன்னொரு பொருளை இணைக்கும் போது, பெண்களுக்கும் ஒருவித அவஸ்தைதான். பெரும்பாலானவர்களுடைய உடலும் இந்த இணைப்புப் பொருளை ஏற்றுக்கொள்வதில்லை. அதனால் சில மாதங்களிலோ பல மாதங்களிலோ, மீண்டும் ஆபரேசன் செய்து இணைக்கப்பட்டிருக்கும் பொருளை அப்புறப்படுத்தவும் செய்கிறார்கள். ஹார்மோன்களை பயன்படுத்தி மார்பை பெரிதாக்குபவர்களுக்கு புற்றுநோய் போன்றவை ஏற்படக்கூடும் என்றும் சொல்கிறார்கள்.

மார்பழகை நன்றாக பராமரிக்க விரும்பும் பெண்கள், தங்கள் மார்பளவுக்குப் பொருத்தமான 'பிரா'க்களை தேர்ந்தெடுத்து அணியவேண்டும். சீதோஷ்ண நிலைக்கும் உடலுக்கும் ஏற்ற நூல்களில் உருவாக்கப்பட்ட 'பிரா'க்கள் அழகோடு ஆரோக்கியத்தையும் தரும்.






ந.சப்னத், புத்தளம்

**கேள்வி:** பித்தா! உனக்கு வேறு வேலையே இல்லையா? பேசாமல் ஒரு கட்சியில் போய் நிற்க வேண்டியது தானே? இல்லாவிடில் நகைச்சுவைகளை எழுதி புத்தகங்களை வெளியிட வேண்டியதுதானே?

**பதில்:** சப்னத்...சொல்வதானால் உருப்படியான ஐடியாக்கள் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் 'சப்த தத்துவ' (பேசாமல்) இருக்க வேண்டும். இப்படி கவுத்துவிடும் ஐடியாக்களைச் சொல்லி ஏன் நானா... என்னை அப்செட்டில் மாட்டிவிடப் பார்க்கிறீர்.



ஜெ.கௌதமன்.தம்பசிட்டி.

**கேள்வி:** பித்தா! ஆலயங்களுக்கு வருகின்ற ஆண்களும், பெண்களும் ஜீன்ஸ் அணிந்து வருகிறார்கள். இவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

**பதில்:** அவர்கள் ஏதோ ஒன்று அணிந்து வருகிறார்களே, அதை நினைத்து சந்தோஷப்படும், பலர் அணிந்தும் அணியாதது போன்ற உடுப்புக்களுடன் வருகிறார்களே...அதைவிட இது மேல்தானே...

வே.ஜெகன்.புளியங்குளம்.

**கேள்வி:** காதலித்தால் கவிதைவரும் என்கிறார்களே...காதலித்து தோல்வியடைந்தால் என்ன வரும்?

**பதில்:** தாடி.

அ.அமாலிகா.இரணைப்பாலை

**கேள்வி:** பித்து மாமா! உங்களைப் போலவா மாமி இருப்பா?

**பதில்:** இல்லை...கொஞ்சம் ஏற்ற - இறக்கங்களுடன் இருப்பா.

பொன்.வி.திவ்வியா.பரவிப்பாஞ்சான்.

**கேள்வி:** பிரியனே பித்தா! எனது சைக்கிள் கடைக்குள் பெயர் முகவரி இல்லாத Love Letter ஒன்று எனக்கு எழுதப்பட்டிருந்தது. எனது முடிவு O.K என்றால் வகுப்பறைச் சுவரில் (✓) என்று குறியிடச் சொல்லியும்-அதன்பின்னர் தன்னை அடையாளம் காட்டுவதாகவும் கடிதத்தில் எழுதி இருக்கிறது. அந்தக் கடிதத்தை எழுதியவன் கறுப்பா, சிவப்பா, நல்லவனா, கெட்டவனா என்று தெரியாமல் எப்படி எனது பதிலை எழுதுவது?

**பதில்:** அதுதானே...தன்னை யாரென்று வெளிப்படுத்தத் தெரியாத-அதற்கு துணிவில்லாத-அதிலும் தனது காதலை நேரடியாக வெளிப்படுத்தத் தயங்கும் ஒருவர். தன்மீது தனக்கே நம்பிக்கை



இல்லாத அருபியின் காதல் உமக்கு ஏற்புடையதல்ல...கசக்கி எறிந்துவிடும். முடிந்தால் வகுப்பறைச் சுவரில் (×) என்று குறியிட்டுவிடும்.

தே.மீரா.மீசாலை.

**கேள்வி:** பித்தரே! இன்று மோட்டார் சைக்கிளில் கையில் செல்போனுடன் சந்திகளில் நின்று பெண்களைப் பரிகசிக்கும் இளைஞர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்?

**பதில்:** மோட்டார் சைக்கிளும் - செல்போனும் உங்கள் உங்கள் சொந்த சம்பாத்தியத்தில் வாங்கியதாக இருந்தால்... O.K... Enjoy ... அப்பா, அம்மா பணத்திலோ அல்லது அக்கா, அண்ணா வெளிநாட்டி



லிருந்து அனுப்பிய பணத்திலோ வாங்கியவையாக இருந்தால்... Please உருப்படுற காரியங்களைப் பாருங்கடா கண்ணுங்களா.

கி.தீபன்.அளவெட்டி.

**கேள்வி:** ஹாய் பித்தா! இந்த வருட தேர்தலில் ஒட்டுமொத்த தமிழர்களும் வாக்களிக்காதுவிட்டால் தேர்தல் முடிவுகள் எப்படி அமையும்?

**பதில்:** இனவாதம் பேசுபவர்களினதும், தமிழர் எதிர்ப்பாளர்களினதும் கை ஓங்கும். முந்தைய தேர்தல்களைவிட இந்த ஜனாதிபதித் தேர்தலில்தான் தமிழர் தரப்பு "கிங் மேக்கர்" களாக இருக்கின்றனர். எனவே 17 ஆம் திகதி வாக்குச் சாவடிகளுக்கு நேரத்தோடு போங்கள். தமிழர் தரப்பு பிரச்சினைகளை உணர்ந்து-அவை தீர்க்கப்படும் என்று உறுதி அளிப்பவர்களுக்கு (அவை நிறைவேற்றப்படாது என்பது வேறு கதை) உங்கள் பொன்னான வாக்குகளை அளியுங்கள். அடுத்த ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் தகுதி தமிழர்களுக்குத்தான் உண்டு என்ற உண்மையை மறுபடியும் உலகுக்கு உணர்த்துங்கள்.

அ.வசந்தன்.அளம்பில்.

**கேள்வி:** அன்பின் பித்தா! நீர் புடைவை துவைத்தும்-சமையலறையில் சமையல் பார்த்தும் உமது உடல் மெலிவதைப் பார்த்தாவது உமது மனைவி இரக்கப்படுவதில்லையா?

**பதில்:** இரக்கமா...அப்படி ஒன்று அவளது பரம்பரையிலேயே கிடையாதே... மாறாக... "கதிரையிலே இருந்து கொண்டு காலாட்டிக்கொண்டு வாசகர்கள் கேட்கும் லொள்ளுக் கேள்விகளுக்கு ஜொள்ளுப் பதில் எழுதும் உமது உடம்புக்கு தேகாப்பியாசம் தேவை... அதற்காகத்தான் இவைகளை எல்லாம் செய்யச் சொல்லி அழிச்சாட்டியம் பண்ணுகிறாளே... என்ன செய்ய?

பாரதி.இ-வட்டக்கச்சி

**கேள்வி:** அன்பின் பித்து அண்ணா! களுத்துறைச்சிறைச் சாலையிலிருந்து நாளும் வதைபடும் தம் உறவுகளுக்கு அடுத்த தேர்தலிலாவது விடிவு கிட்டுமா? இதுபற்றி நீர் என்ன நினைக்கிறீர்?

**பதில்:** அடுத்த தேர்தலில் போட்டியிடுபவர்கள் மட்டும் என்ன வானத்திலிருந்து குதித்தவர்களா? அவர்களெல்லாம் இதுவரை போட்டியிட்டவர்களும், ஆட்சி செய்தவர்களும்தானே... எனவே என்ன புதிதாக கிழித்துக் கொட்டிவிடப் போகிறார்கள்... அவர் மோதகம் என்றால் இவர் கொழுக்கட்டைதான்.

சி.ஸ்ரீநாத்.கோணாவில்

**கேள்வி:** மை டியர் பித்துக்குட்டி! நாகரிகம் என்ற பெயரில் பெண்கள் அணியும் ஆடைகள் முழங்காலுக்கு மேல் வந்துவிட்டதே. கடைசியில் இது எங்கேபோய் நிற்கும்?

**பதில்:** ஆபத்தான விளைவுகளை அண்மித்தவுடன் நிற்கும்.

செ.தயாளன்-தெஹிவளை.

**கேள்வி:** பித்தா! எனது அபிமான நடிகர் அஜித்தின் படம் ஒன்றையும் காணவில்லையே என்ன ஆச்சு?

**பதில்:** தீபாவளிக்கு வெளியாகி விஜய்யின் சிவகாசியுடன் மோதும் என எதிர்பார்க்கப்பட்ட 'கோட்பாதர்' தயாரிப்பாளரிடம் பணம் இல்லாததால் முடங்கிக் கிடக்கிறது. தற்போது சந்திரமுகி டைரக்டர் பி.வாசுவின் இயக்கத்தில் 'பரமசிவன்' நடித்து வருகிறார். அது டிசெம்பரில் வெளிவரும். அடுத்து 'திருப்பதி' எதிர்வரும் தமிழ் புத்தாண்டில் வெளிவருமாம்.



**பித்தன் மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:-**
பித்தனிடம் நீங்கள் எத்தனை கேள்விகளையும் கேட்கலாம். தரமான கேள்விகளுக்கு பித்தன் பதில் அளிப்பான். நீங்கள் அனுப்பும் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:-



பித்தன் பதில்கள்
'சுடர் ஒளி வாரஇதழ்'
85,ஜெயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14

S.செல்வி-பூநகரி.

**கேள்வி:** my dear பித்தா! ஒரு ஆண் ஒரு பெண்ணின்மீது விருப்பம் கொண்டால் உடனே தனது காதலை கூறிவிடுகிறான். ஆனால் ஒருபெண்-ஒரு ஆணின் மீது விருப்பம் கொண்டால் உடனே அந்த ஆணிடம் தனது காதலை கூறமுடியாமல் தவிக்கிறாளே.. காரணம் என்ன?

**பதில்:** கண்ணு... கடவுள் பெண்களைப் படைக்கும்போதே அச்சம் - மடம் - நாணம் - பருப்பு... சீ... பயிர்ப்பு என்று சில குணாதிசயங்களை பண்ணி அனுப்பி இருக்கிறார். அவைகளின் வேலையால்தான் இந்தத்தயக்கம்... அதுவும் இல்லையென்றால்... யப்பா....

வ.ராஜ்மோகன்-கிளிநொச்சி.

**கேள்வி:** அன்பின் பித்தா! எனது நண்பன் எந்நேரமும் விஜய்யின் தத்தவங்களைச் சொல்லிக்கொண்டு திரிகிறான். அதனை நிறுத்துவதற்கு ஆலோசனை கூறுமேன்?

**பதில்:** ஆமா...விஜய் பெரிய சாக்கிரட்டிஸ், அவர் சொல்லுற தத்துவத்தை இவர் சொல்லிக்கொண்டு திரிகிறார். அந்த விளக்கெண்ணையிட்டைச் சொல்லும் அந்தத் தத்துவமெல்லாம் விஜய் சொந்தமாக பேசுவதில்லை. யாரோ எழுதிக் கொடுப்பதைத்தான் பேசித் தள்ளுகிறார் என்று. முடிந்தால் சொந்தப் புத்தியில் தத்துவம் பேசச் சொல்லும். யாரோ எழுதிக்கொடுப்பதை யாரோ பேச, அதனை Copy அடிக்க வேண்டாமென்று சொல்லுமைய்யா.

கி.தீபன்-அளாலட்டி.

**கேள்வி:** பித்தா! எமது கேள்விளுக்கு பேனாவால் பதில் தரும் உமக்கு-உமது கேள்விகளுக்கு மட்டும் ஏன் உமது மனைவி கட்டையால் பதில் தருகிறாள்?

**பதில்:** எவர் எவர்களெல்லாம் எந்த எந்த நேரத்தில்...எது எது இருக்கிறதோ அது அது அதனால்தான் அவர் அவர் கேட்கும் அந்த அந்த கேள்விகளுக்கு அப்படி அப்படி பதில் தரமுடியும்.

S.மோகனதாஸ்-முறிகண்டி.

**கேள்வி:** ஏன் பித்தா! எல்லோரினது உயிரையும் இயமன் எடுப்பதாகத் தானே சொல்லுகிறார்கள். அப்படி என்றால் இயமனின் மகளை நான் கல்யாணம் செய்துகொண்டால் தப்பிவிடுவேனா?

**பதில்:** அடடா...அப்படி என்றால் கொலையைச் செய்தவன் எல்லாம்-நீதிவானின் மகளைக் கல்யாணம் செய்தால் தப்பிவிடலாம் என்கிறீர்....என்னய்யா நியாயம் இது...? இயமனின் தொழிலில் உற்றார், உறவினர், நண்பர்கள் என்ற பதத்துக்கே இடமில்லை.

# மனைவியின் அருமை

"ஒருவனுக்குத் தாய் போய்விட்டால் அறுசுவை உணவு போய்விடும்; தந்தை போய்விட்டால் படிப்புத் தடைப்படும்; குழந்தை போய்விட்டால் வாரிசுக்குரிய செல்வம் போய்விடும்; உறவினர் போய் விட்டால் சிறப்பான வாழ்க்கை போய் விடும்; உடன் பிறந்தார் போய்விட்டால் துணைப்பலம் போய்விடும்; ஆனால் தாலி அணிந்த மனைவி போய்விட்டாலோ, இவை அனைத்தும் போய்விடும்" என்கிறார் அவ்வையார்.



இதோ அவ்வையார் பாட்டு -

தாயோடு அறுசுவை போம்!
தந்தையோடு கல்வி போம்!
சேயோடுதான் பெற்றசெல்வம்
போம்!
ஆய வாழ்வு உற்றாருடன் போம்!
உடன் பிறப்பால் தோள்வலி
போம்!
பொன் தாலியோடு எவையும்
போம்!

## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ. 15,680.00 | ரூ.23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ. 147.00 |
| Page Specified C.M.C | ரூ. 122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |

# அந்த நாள் ஞாபகம் வரலையே நண்பனே நண்பனே ...

"பூட்டிய வீட்டுச் சாவியை எங்கே வைத்தது என்ற ஞாபகம் வரலை"

"விடிய விடிய படித்தேன். பரீட்சையின் போது படித்த எதுவும் நினைவுக்கு வரவில்லை"

"எதையோ சொல்ல வந்தேன் மறந்து போய்விட்டது"

இப்படி எத்தனையோ சம்பவங்களை நாம் சந்தித்துள்ளோம். ஞாபகம், நினைவு, மறதி என்பவை எல்லாம் ஒரே விஷயங்கள் தான். பொதுவாக ஞாபக மறதி என்பது



மனிதராக பிறந்த அனைவருக்கும் ஏற்படும் ஒரு விஷயம்.

ஒரு வழியில் பார்த்தால் இந்த ஞாபக மறதி- இறைவன் தந்த ஒரு அருட்கொடை என்று கூடச் சொல்லலாம். கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். உங்கள் அன்பான ஒருத்தரை இழந்ததை, அன்பு வைத்த பொருளை தொலைத்ததை, நடந்த ஒரு துக்ககரமான சம்பவத்தை நாம் நடந்த தினத்தில் பெற்ற நினைவோடு- உணர்வுகளோடு- தொடர்ந்து இன்னும் ஞாபகத்தில் மறக்காமல் வைத்திருந்தால் எப்படி வாழ்க்கையை நடத்துவோம் என்பதை எண்ணிப் பாருங்கள். இதனால்தான் மறதி ஒரு வரப்பிரசாதம் என்றேன்.

அதேவேளையில் ஞாபக மறதி, நாளாந்த வாழ்க்கையில் பல சங்கடங்களை ஏற்படுத்தும். ஞாபகத்தை குறுகிய கால ஞாபகம், (SHORT TERM MEMORY) நீண்ட கால ஞாபகம் என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

ஒரு ஸ்தாபனத்துக்கு தொலைபேசி எடுக்க, தொலைபேசி அட்டவணையில் ஒரு நம்பரை தேடி- ஞாபகத்தில் வைத்து பேசுகின்றோம். ஒரு சில மணித்தியாலத்தின் பின் அதே நம்பர் தேவை என்றால் திரும்பவும் தொலைபேசி அட்டவணையை புரட்டிப் பார்க்க வேண்டி இருக்கின்றது. அந்த சிறிய கால எல்லைக்குள் அதனை மறந்து விடுகின்றோம். இதனையே குறுகிய கால ஞாபகம் என்று சொல்லலாம். அநேகமாக எமக்கு தொடர்ந்து தேவைப்படாத விஷயங்கள் வீணாக மூளையில் சேமிக்கப்படாமல் இப்படி அப்பப்பவே மறக்கடிக்கப் படுகின்றன. அதே வேளையில் தேவையான மகிழ்ச்சிகரமான நினைவுகள், சம்பவங்கள் எமது மூளையில் அழியாமல்- பதியப்பட்டு பாதுகாக்கப்பட்டு, வேண்டிய போது நினைவுக்கு வருகின்றன. இதனையே நீண்ட கால ஞாபகம் என்கிறோம்.

ஒரு விஷயம் எப்படி நினைவில் வைக்கப்படுகிறது?

## ஞாபக மறதி காரணம் என்ன?

மூளையின் சிக்கலான தொழிற்பாடுகளில் நினைவில் வைத்தல் என்பதும் ஒன்று. இந்த 'ஞாபகத்தில் இருத்தல்' அல்லது 'நினைவில் வைத்தல்' என்ற தொழிற்பாடுகள் மூன்று நிலைகளில் நடைபெறுகின்றன.

முதலாவது நிலை கிரகித்தல். அதாவது LEARNING என்பார்கள். இது நாம் சாதாரணமாக சொல்கின்ற கற்றல் என்கின்ற காரியத்தில் ஒரு பகுதி.

கிரகித்தல் நிலையின் போது ஞாபகத்தில் வைக்கப் பட வேண்டிய தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. தொகுக்கப்படுகின்றன. அதனைத் தொடர்ந்து இவ்வாறு தொகுக்கப்பட்ட தகவல்கள் சேமித்தல் என்கின்ற இரண்டாவது நிலையை அடைகின்றது. இறுதி நிலை மீட்டல். தேவையான தகவல்கள் தேவையான நேரத்தில் நினைவுக்கு வருதலே இந்த மீட்டல் என்ற நிலை.

இந்த கிரகித்தல், சேமித்தல், மீட்டல் என்ற மூன்று நிலைகள் ஒருங்கிணைக்கப்பட்ட செயற்பாடே ஞாபகம் என்று கூறலாம். நவீன யுகத்து இயந்திர மூளையானது கணனி என்கின்ற, COMPUTER இன் தத்துவமே இந்த மனித மூளையின் செயற்பாட்டின் அடிப்படைதான் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஞாபகம் என்பதை நாளாந்த நிகழ்ச்சி ஒன்றினூடாகப் பார்ப்போம்.

வீதியில் ஒருவரை சந்திக்கின்றோம். அவருடன் அளவளாவுகின்றோம். அவரது பெயர், தொழில், விலாசம் போன்ற கேட்டறிந்த தகவல்களும் அவரது உடல் வாகு, நடை, உடை பாவனைகள் போன்ற கண்களால் பார்த்து அறியப்பட்ட தகவல்களும் அவரது குரல் ஒசை பேச்சு முறை போன்று காதால் புரிந்துணர்ந்த தகவல்களும், ஒருங்கு சேர கிரகிக்கப்பட்டு மூளையில் பதியப்படுகின்றன. பல மாதங்களின் பின்னர்- இந்த நபரை தற்செயலாக சந்திக்க நேரும்போது, அவரது உருவம், நமது மூளையில் பதியப்பட்டிருக்கும் உருவங்கள் ஏதாவதோடு ஒத்திருக்கின்றதா என்று அலசப்பட்டு, அப்படி ஒரு தகவல் இருந்தால் அத் தகவலோடு சம்பந்தப்பட்ட பெயர், தொழில், குரல் ஒலி, நடை உடை என்பன சேர்ந்து மீட்கப்பட்டு அவரை ஞாபகப்படுத்திக் கொள்கின்றோம்.

முன்னர் கூறிய மூன்று நிலைகளிலுமோ அல்லது ஒன்றோ, இரண்டோ நிலைகளிலுமோ- இந்த ஞாபகத்துக்குரிய செயற்பாடுகளில் தடையோ- தடங்கலோ ஏற்பட்டால் ஞாபக மறதி ஏற்படுகிறது.

இந்த தடங்கல் தடைகள் சில வேளைகளில் மூளையில் உள்ள பகுதிகளின் இயக்க இன்மையால், மூளைக்கு ஏற்பட்ட காயங்களால், அதிர்வுகளால், நோய்களால் ஏற்படலாம். ALZHEIMER நோய், அதிர்ச்சிகளால் ஏற்படும் AMNESIA நிலை என்பன இவற்றிற்கு சில உதாரணங்கள். இதைத் தவிர வயது ஏற ஏற மூளையின் கலங்கள் இறந்து போவதாலும், முதுவயதில் ஞாபக மறதி ஏற்படுகின்றது.

ஆனால் இளம் வயதில் ஞாபக மறதி ஏற்பட பொதுவாக மற்றொரு காரணம் உண்டு.

தகவல்களை கிரகிப்பதற்கு- கற்றல் (LEARNING) என்று உடலியல் விஞ்ஞானத்தில் கூறப்படுகின்றது. இந்த கற்றல் நிலையில்- தகவல்கள் கிரகிக்கப்படும் போது- அவதானம்- அதாவது கவனம் (ATTENTION) குறைவாக இருந்தால் முழுமையாக தகவல்கள் கிரகிக்கப்படாமல் போய்விடும். சரியாக கிரகிக்கப்படாவிடில்- தகவல்கள் சரியாக பதிவாக மாட்டா. சரியாக பதிவாகாத தகவல்களை மீட்டெடுக்க முடியாது. இதனால் ஆசிரியர் சொல்லித் தரும் போது- கவனயீனமாக அவதானமாக இருக்காவிடில்- மாணவர்களின் மூளையில் தகவல்கள் சரியாக பதியப்பட மாட்டா என்பது நிருபணமாகியது. எனவே ஆசிரியர் வகுப்பில் போதித்த விஷயங்கள் பாடவேளையில் அவதானமாக இருக்காத மாணவர்களால் மறக்கப்படுகின்றன.

சிலவேளைகளில் கற்றலின் போது அடிக்கடி தடங்கல்கள், தடைகள்- அதாவது ஆங்கிலத்தில் INTERFERENCE- காரணமாக கிரகிக்கப்படும் தகவல்கள் தொடராக இல்லாமல் பகுதி பகுதிகளாக மூளையில் பதியப்படுகின்றன. படிக்கும் வேளையில் அடிக்கடி நண்பர்களுடன் பேசுவது, எழுந்து சென்று சில மணி நேரம் தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகளில் ஈடுபடுதல் என்பன இம் மாதிரியான INTERFERENCES ஆகும். இப்படியான நேரத்தில் சுவையான நிகழ்ச்சிகளிடையே விளம்பரங்கள் புகுத்தப்பட்டது போல் பாடங்கள் மூளையில் துண்டு துண்டாக பதியப்படுவதால் எவ்வளவு நேரம் படித்தாலும் பாடங்கள் ஞாபகத்தில் இருப்பதில்லை.

அப்படியானால் மாணவர்கள் எப்படிப் படிக்க வேண்டும் என்பதற்கு விஞ்ஞானிகள் கூறும் சில வழிமுறைகளை இங்கு தருகின்றேன்.

1) தொடர்ந்து தூக்கத்தை கெடுத்து 'மரதன்' ஓட்டம் போல் படிப்பதால் பலனில்லை. எந்த ஒரு பாடத்தையும் 4 மணி நேரத்துக்கு மேல் தினமும் படிப்பதால்- கிரகிக்கும் நிலை குறைகின்றது. படிக்கும் போது கிரகிப்பதற்கும் பதிவு செய்வதற்கும் உதவும் மூளையில் சுரக்கும் இரசாயனங்களின் அளவு- நான்கு மணி நேரத்தின் பின்னர்- மிகவும் விரைவாக குறைந்து போகின்றது. இதனால் மூளை களைப்படைந்து கிரகித்தலை குறைக்கின்றது. எனவே படிக்கும் போது ஒரு மணி நேரத்துக்கு ஒரு தடவை 5 நிமிட நேரமாவது ஓய்வெடுங்கள். படித்த பாடங்கள் நிறையவே ஞாபகத்திலிருக்கும்.

2) படிக்கும் பாடத்தை விரிவுரை ஆற்றுவது போல் உரத்த சத்தம் போட்டு ஒப்புவியுங்கள். இதனால் படித்த விஷயங்கள் முன்னர் பதிவு செய்யப்பட்ட விஷயங்கள் மேல் கேட்கும் முறையாலும் பேசும் முறையாலும் திரும்பவும் அழுத்தமாக பதிவு செய்யப்பட்டு மறக்கப்படாமல் இருக்கும்.

3) அனுகூலமான சிந்தனைகளை வளருங்கள்- இதனை POSITIVE THINKING என்பார்கள். பரீட்சையில் நிச்சயம் சித்தியடைவேன் என்ற உறுதியான சிந்தனையோடு படித்தால் ஞாபகத்தில் படித்தவைகள் மறக்காமல் இருப்பதாக அறியப்பட்டுள்ளது. தத்தளிக்கும் தளம்பும் மனோநிலை, தோல்வியை எதிர்பார்க்கும் மனோநிலை தகவல்களின் பதிவுகளுக்கு இடையூறைத் தருகின்றன.

4) மூளைக்கு வேலை கொடுங்கள். இயங்கும் இயந்திரங்கள் கெடாது என்பது விதி. எப்படி உடற் பயிற்சி



உடலை வளமாக்கி திடமாக்குகின்றதோ அதுபோல மூளைக்கு பயிற்சிகள் தருகின்ற புதிர்களை விடுவித்தல், கணிதப் புதிர்கள், லாஜிக்- தத்துவ புதிர்கள் என்பவை- சதுரங்கம் போன்ற விளையாட்டுக்கள் மூளைக்கு புத்துணர்ச்சி கொடுக்கின்றன.

5) கல்வியோடு வெளிக்கள விளையாட்டுக்கள் கராத்தே- நாட்டியம் போன்றவற்றில் ஈடுபாடுடைய மாணவர்கள்- பரீட்சைகளில் முதல் தரத்தில் வராவிடினும் அதிக ஞாபக சக்தி கொண்டவர்களாக இருந்தது ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது. எனவே வெறும் புத்தகப் பூச்சியாக இருக்காமல் கல்வி தவிர்ந்த செயற்பாடுகளிலும் ஈடுபடுங்கள்.

மனதை ஒரு நிலைப்படுத்த பழகுவது ஞாபக சக்தியை வளர்க்கின்றதாகவும் அறியப்பட்டுள்ளது. தியானம் மனதை ஒரு நிலைப்படுத்த உதவும் ஒரு பயிற்சி. தினமும் 20 நிமிட நேரம் TRANSCEDENTAL MEDITATION என்கின்ற தியானப்பயிற்சி செய்த மாணவர்கள் 90 வீதம் ஞாபக சக்தி கொண்டவர்களாக இருந்தார்கள் என ஆய்வுகளிலிருந்து அறியப்பட்டுள்ளது.

## விலங்குகளுக்கு மத்தியில் அழகு மயில்கள்



லண்டன் மிருகக்காட்சிச்சாலையில் அரைகுறை உடுப்புகளோடு வலம் வருகிறார்கள் எட்டுக் கன்னியர்கள். இவர்கள் அங்குள்ள மிருகங்களுக்கு சேவை செய்யும் தன்னார்வத் தொண்டர்களாம்.

முன்னர் மிருகங்களை மட்டும் பார்க்க மக்கள் கூட்டம். இப்பொழுது இவர்களைப் பார்ப்பதற்கென்றே பார்வையாளர்கள் பெரும் எண்ணிக்கையில் வருகிறார்களாம்.

திரைப்படப் பாடல்கள் மட்டுமே அடங்கிய முற்றிலும் வித்தியாசமான வீணை இசை, நடன நிகழ்ச்சி

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட ஆஸ்த்தான வித்வான்

"பிரேமி" தொலைக்காட்சித் தொடர் புகழ்

**ராஜேஷ் வைத்யா** தனது இசைக்குழுவினரோடு வழங்கும்,

# வீணையின் நாதம்

நடன தாரகை **அஸ்வினியின்** நடனத்துடன்

**ஸ்வர வீணா சங்கமம்**







நிகழ்ச்சித் தொகுப்பு
சூரியன் FM அறிவிப்பாளர்
**R.லோஷன்**

**06-11-2005**

வெள்ளவத்தை
**இராமகிருஷ்ணமிஷன்**
மண்டபம்
மாலை
**6.30** மணிக்கு

ஊடக அனுசரணை:

சுடர் ஒளி
THE SUDAR OLI

சூரியன் FM
SOORIYAN FM

பிரதான அனுசரணை

வெகுவிரைவில்...
வெள்ளவத்தையில் பிரமாண்டமான காட்சியறை

வெகுவிரைவில்...
பண்டிகைக்கால ஜவுளித் தெரிவுகளுக்கு

**JEYECHANDRANS**
*The Art of Fashions*

Shavli Fashions
195
Specialist in Wedding Sarees, Shalwar Kameez & Ready made Garments
Galle Road, Bambalapitiya, Colombo 04. TEL : 2508934

**Sangeetha Jewels**
335-C Galle Road, Wellawatte, Colombo-06.
Tel : 2500682, 2361321

முழுக் குடும்பத்தினருடன் குளிரூட்டப்பட்ட மேல்மாடியில் குதூகலமாக சுவைமிகு சைவ உணவு வகைகளை சுவைத்து மகிழ்ந்திட

**SAI GANESHA Restaurant**
200, Galle Road, Wellawatte, Colombo-06.

**MANOJ AIR TOURS (PVT) LTD.**
சர்வதேச விமான டிக்கட்டுக்கள் மற்றும் யாழ் - கொழும்பு விமான டிக்கட்டுக்களுக்கும்
67/A Wolfendhal St, Colombo-13. Tel : 2390125 / Fax :2399650
465/C Galle Road, Colombo-06. Tel : 2361660 / 0777-517019
32 Clock Tower Rd, Jaffna. Tel : 021-2223916 / 021-2227916
யாழ்-கொழும்புக்கான விமான பயணிகளை விடுவரை நாங்கள் கொண்டுசெல்வோம்.



முற்றிலும் குளிரூட்டப்பட்ட 400 பேர் அமரக்கூடிய Daniel Banqelt Hall
திருமண மற்றும் அனைத்து வைபவங்களுக்கான மண்டபம், குளிரூட்டப்பட்ட அறைகள், விமான நிலையத்துக்கான போக்குவரத்து, வாடகைக்கார் அனைத்திற்கும்.

**HOTEL WESTEERN (PVT) LTD.**
No.35, Frank Furt Place, Colombo-04.
Tel : 2507161-3, 4518485 Fax : 4518481
Web : www.hotelwesteern.com

OFFICIAL PRINTERS Aalayam of Printing
**UNIE ARTS (PVT) LTD.**
48a, Bloemendhal Road, Colombo-13. Tel : 2330195, 2478133

Branch : Aalayam of Wedding Cards
**UNIE ARTS ENTERPRISES**
4, Veverset Place, Colombo - 06. Tel : 2582827

## டிக்கட்டுகளுக்கு

வெள்ளவத்தை
ஜெயச்சந்திரன்ஸ்
சங்கீதா ஜுவல்ஸ
Manoj Air Tours (Pvt) Ltd.
சாய் கணேஷா ரெஸ்டோரண்ட்
லிட்டில் ஏசியா எம்போரியம்
CD World
அபர்ணா பியூட்டி பார்லர் (46th Lane)

பம்பலப்பிட்டி
ச்வ்லி பெஷன்ஸ்
ஹோட்டல் வெஸ்டர்ன் (Frankfurt Place)
சாய் கணேஷா ரெஸ்டோரண்ட்
ஹோட்டல் அமிர்தா
குட்லக் கொமியுனிகேஷன்

கொள்ளுப்பிட்டி
அமராவதி ரெஸ்டோரன்ட் (Mile post Ave.)

புறக்கோட்டை
செட்டியார் தெரு Elite Hotel
கபோஸ் லேன் பிரபா டிரேடிங் கம்பனி

கொட்டாஞ்சேனை
ஓரியன்ட் பார்மசி, UNIE ARTS (PVT) LTD.

# புரிந்துணர்வு

சூரியன் தன் ஒளிக் கரங்களை நீட்டிக் கொண்டு மேலே வந்துவிட்டான். ஆங்காங்கே காகங்கள் கா...கா... எனக் கத்துகின்றன. இடையிடையே குளிர் காற்று சில் என வீசுகின்றது. வீட்டுக்குள்ளேயே வெளிச்சம் வந்து விட்டது. இரவில் உறங்கிக் கிடந்த கிராமம் புதுப் பொலிவு பெற்றது போல் சுறு சுறுப்பாகிவிட்டது. வயலுக்குச் செல்லும் உழவரும், வெங்காயம் நடச் செல்லும் பெண்களும் விரைந்து கொண்டிருக்கின்றனர். மனதில் நிம்மதி இல்லைப் போலும். இரவிலே நெடுநேரம் தூக்கம் கெட்ட தன் எதிரொலிதானோ! என்னவோ! எங்கிருந்தோ ஒரு நாய் ஊ...ஊ... என்றது. கண்விழித்த சங்கர் விறுவிறு என படுக்கையைச் சுருட்டினான்.

அன்றைய பத்திரிகையை வாசித்த சங்கர் கடைக்காரரிடம் "இன்டைக்கும் யாரையோ சுட்டுப் போட்டாங்களாம். கிழக்கு மாகாணம் அப்படியாப் போச்சு"

"புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியும் எங்கட பிரச்சினை புதிராகத்தான் கிடக்கு." என்று நொந்து கொண்டார் கடைக்காரர்.

சங்கருக்குத் திருமணமாகி மூன்று மாதங்கள் தான் இருக்கும். ஆனால், அவனது துரதிஷ்டம் அவனுக்குக் கிடைத்த மனைவி. "இஞ்சையப்பா நான் இன்றைக்கு அம்மா வீட்டை போகப்போறன். இந்தக் கிராமத்து வாழ்க்கை பிடிக்கேலை. நீங்களும் வாங்கலன். நகரத்திலே போய் குடியேறுவோம்."

சங்கருக்கு ஒருமுறை தூக்கிவாரிப் போட்டது. கடைக்கண்ணால் பார்த்து விட்டு திரும்புகிறான். மீண்டும் அவளே தொடர்கின்றாள்.

"நகரத்திலே வீதியென்ன, கரன்ட் என்ன, பஸ் என்ன, தியேட்டரென்ன நினைச்ச பொருளை வாங்கலாம். இங்க றோட்டுக்குப் போகனும் என்றால் எவ்வளவு தூரம் மணலில நடக்கனும். அதுவும் தாண்டி பிரதான வீதிக்குப் போற வழி என்ன கல்லும் மண்ணும். தாரையே காண முடியாது."

சங்கருக்குத் தான் பிறந்து வளர்ந்த கிராமத்தை அதுவும் தன் மனைவி குத்திப் பேசியது பொறுக்க முடியாத ஒன்றாகிப் போனது. அன்று யுத்தமான காலத்தில் கூட தங்கை மதுராவும், அவனும் எவ்வளவு சந்தோஷமாக இருந்தார்கள் ஒருவருக்கு ஒருவர் உதவியாக. இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியும் நிழல் யுத்தம் தொடர்ந்த வண்ணம் தானே இருக்கின்றது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விளைவால் பாதை திறந்தது. இதனால் தானே சங்கருக்கும், செபஸ்ரீனாவுக்கும் திருமணம் நடந்தது. தங்கைக்கு திருமணம் செய்து வைத்துவிட்டுத்தான் தன் திருமணம் என்றிருந்தவனை மதுரா, "அண்ணா எனக்குத் திருமணமானால் உனக்கு யார்? எனக்கொரு அண்ணி... வேண்டாமா?" என்று அவள் தானே திருமணம் செய்து வைத்தாள்.

அவன் நினைவுகள் தங்கையின் திருமணம் பற்றியதாகவே இருந்தது. இன்றைக்கு தேநீர் கொண்டு வரும் போது இதனை சொல்ல வேண்டும் என ஆயத்தமாக இருந்தான் சங்கர். மதுராவின் சம்மதமின்றி அவன் எந்த செயலிலும் இறங்கியதில்லை. "ம..மது... நான் நேற்று புரோக்கரைச் சந்திச்சனான். நல்ல இடம் தான் நீ..." என்று வசனம் முடியும் முன்னே, மதுரா அண்ணனைப் பார்த்த ஏக்கப்பார்வை அவனை நிலைகுலையச் செய்தது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் சமாதானத்தின் தொடக்கமாகத் தானே அமைந்தது. ஆனால், இன்று சமாதானம் சரியும் நிலையில் தானே உள்ளது. தமிழருக்கோ! சிங்களவருக்கோ! முஸ்லிம்களுக்கோ! சுதந்திரம் இல்லை. எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் குண்டுகள் வெடிக்கலாம். சன்னங்கள் பறக்கலாம். மதக்கலவரமோ அல்லது இனக்கலவரமோ தொடங்கலாம். யார் சொன்னது இறுதியில் யுத்தம் ஒன்று ஏற்பட்டு நீ வேறு நான் வேறு என்று பிரிந்தும் செல்லலாம். பிரிந்தவை சில வேளைகளில் இணையாமலும் போகலாம். உலகம் பொருளாதாரத்துறையில் ஒவ்வொன்றிலும் தங்கித்தானே வாழ்கின்றது. இருந்தும் தனித்து வாழ வேண்டி ஏற்பட்டால் வாழத்தானே வேண்டும்.

சங்கரின் மனம் விரக்தியின் விளிம்பில் தள்ளப்பட்டுவிட்டது. 'எங்கட கிராமத்தில இருக்கின்ற இந்தப் பிள்ளைகளுக்குப் படிப்பிச்சு 2 பிள்ளைகளை புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற வைத்தால் நகரத்துப் பாடசாலையில் 100 பிள்ளைகள் சித்தி பெற்றதற்குச் சமன் தானே! எமது கிராமத்தை முன்னேற்ற முடியாமல் போய் விடும் போல கிடக்கிறது.' அவனது மனம் நிலையில்லாமல் அலைந்து கொண்டு



ச. முகுந்தன்
யாழ். பல்கலைக்கழகம்

இருந்தது.

"மாமி பாடசாலையால சுற்றுலா போகினம். செபஸ்ரீனா ஒரு கிழமைக்கு இங்கே நிக்கட்டும்." என்று ஓர் பொய் சொல்லி விட்டு சென்றான். இதனைப் பார்த்துக் கொண்டு நின்ற செபஸ்ரீனாவுக்கு ஏதோ ஓர் உணர்வு தூண்டப்பெற்றது. இருந்தும் கிராமத்திலேயே வாழவேண்டும் என்று அவன் விடாப்பிடியாக இருப்பது செபஸ்ரீனாவுக்கு எரிச்சலை உண்டாக்கியது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் இராணுவத்தினரோ அல்லது ஆயுதம் தாங்கிய வேறுநபர்களோ அவரவர் எல்லைக்குள்ளேயே இருக்க வேண்டும். குறிப்பிட்ட பாதைவழியே வரவேண்டும். ஆயுதத்துடன் வருதல் கூடாது. கடலிலேயும் சூட்டுச் சம்பவங்கள் நிகழ்கின்றன. ஊர்காவல் படையினர் கைதும், எல்லை தாண்டிவந்தமை என குற்றச் செயல்களும், சூட்டுச் சம்பவங்களும் அதிகரித்த வண்ணம்தானே இருக்கின்றன. இவை புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முரணான சம்பவங்கள் தானே.

சங்கரது கோரிக்கைகளுக்கு ஆம் சொல்லித் தானே செபஸ்ரீனாவுடன் திருமணம் நடந்தது. எமது கிராமத்தில் வசிக்கவேண்டும். சீதனம் என்று வேண்டாம். அப்படி ஏதாவது கொடுக்க வேண்டும் என்று நினைத்தால் நீங்கள் கொடுங்கள் என்றுதானே அவன் கூறினான். சம்மதம் சொன்னவள் ஏன் இந்தக் கொள்கை மாற்றம்.

செபஸ்ரீனாவின் மனசிலும் மேலைத்தேச பண்பாடு பரவி இருந்தது. திருமணம் ஆகி மூன்று மாதங்கள் ஆனபின்னரும் கூட அவள் இறுக்கமான ரீசேட் வகைகளையே நாடினாள். அத்துடன் கடும் சிவப்பு நிறத்திலான சிறிய ஒட்டுப் பொட்டையே போடுவாள். அது சாதாரணமாகப் பார்க்கும் போது கறுப்புப் பொட்டாகவே தெரியும். கழுத்து இறுக்கிய ரீ சேட்டால் சங்கர் ஆசையாகக் கட்டிய அழகிய தாலிக் கொடியும் பார்ப்பதற்குத்தெரிவதில்லை. சுருக்கமாய் சொல்லப் போனால் தமிழ்க் கலாசாரத்துக்கும் செபஸ்ரீனாவுக்கும் நீண்ட இடைவெளி காணப்பட்டது?

சங்கர் மதுராவின் போக்கினையும், இவளது போக்கினையும் ஒப்பிட்டுப்பார்க்கிறான். வெளியிடம் செல்வதாக இருந்தால் மதுரா சாறியே கட்டுவாள். அத்துடன் அவள் தலைமுடியைப் பின்னி அதிலே முற்றத்தில் நிற்கின்ற நித்திய கல்யாணி மலரை சூடாமல் செல்வதில்லை. நெற்றியிலே ஓர் கறுப்புப் பொட்டு. இவளைப் பார்த்தால் தமிழ்த்தாய் பெற்றெடுத்த பெண் என்றே கூறலாம்.

சங்கருக்கு ஆத்திரம் ஒருபுறம், அவமானம் ஒருபுறம். மதுரா அண்ணனுக்கு சிறந்த மனைவி கிடைக்கவில்லையே? தான் திருமணம் செய்தால் அண்ணனுக்கு ஆறுதலாக யார் இருக்கின்றார்கள் என்று திருமணத்தை அவள் வெறுப்பது ஒரு புறம். உணர்ச்சி வசப்படும்போது மனைவிக்கு அடிக்க வேண்டும் என்ற எண்ணமும் தோன்றியது. இருந்தும் பெண்ணுக்கு அடிப்பது மடத்தனம் என்று தன்னையே கட்டுப்படுத்திக் கொண்டான். இதற்குக் காரணம் செபஸ்ரீனாவின் வாழ்வும், அவளது சூழலுமே அவ்வாறு மாற்றியது என்பதையும் உணர்ந்து கொண்டான்.

செபஸ்ரீனாவைக் கூட்டி வர மாமி வீட்டுக்குச் செல்கின்றான். செல்லும் வழியிலே சங்கரின் மனதில் ஆயிரம் கற்பனைகள் வந்து போயின. செபஸ்ரீனா தன்னை வாங்க வாங்க.... என்று வரவேற்பாள். பக்கத்திலே மாமியும் வந்திருப்பாள். இருந்தும் மாமி வீட்டு நாய் ஜிம்மி தான் கொஞ்சம் முரண்டு பிடிக்கும். எல்லாம் சொல்லிக் கொண்டே....

ரீ... ர்ற... வீட்டு வாசலில் ஜிம்மி குரைத்தவாறு துள்ளிக் கொண்டு வருகிறது. சங்கர் உடனே திறந்திருந்த கேற்றைப் பூட்டி விடுகிறான். மாமி வந்து நாயைக் கட்டி விட்டு கூட்டிச் சென்று சோபாவில் இருத்தி விட்டு ரீ எடுத்து வந்து கொடுக்கின்றார்.

"ஆ... எங்க செபஸ்ரீனா"

"உந்தான் நின்றவள் எங்கயோ வெளிய போயிட்டாள் போல கிடக்குது" என்றாள்.

மாமி வீடுதானே. வீட்டினுள் சென்று ஆடைகளை மாற்றி விட்டு திரும்பி வரும் போது படம் ஓடிக் கொண்டிருக்கும் சத்தம் கேட்கிறது. உள்ளே சென்று பார்க்கிறான். அங்கே தொடர் நிகழ்ச்சி ஒன்று ஓடிக் கொண்டிருக்கிறது. செபஸ்ரீனா ரீ.வியையே கால் மேல் கால் போட்டிருந்தவாறு உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சங்கர் சுவிச்சை நிற்பாட்டி விடுகிறான். "அதிக்கிடேல கறன்ரை நிப்பாட்டிப் போட்டாங்க சீ..." என்று எழுந்தவள் சங்கரினாலேயே கறன்ற் நிற்பாட்டப் பட்டதை உணர்ந்து "இஞ்ச இஞ்ச கொஞ்சம் பொறுங்கள் இன்னும் பத்து நிமிடம். இன்றைக்கு நல்ல விறு விறுப்பான கட்டம்" என்று திரும்பவும் பார்க்கத் தொடங்கினாள். சங்கர் எதுவும் பேசாமல் அருகிலே அமர்ந்து கொண்டான்.

ரீ.வியை பார்ப்பது போல் இருந்த சங்கருக்கு சிந்தனை வேறாக இருந்தது. கிராமத்துப் பெண்கள் தன் கணவன் வரும் வழியைப் பார்த்துக் கொண்டு நிற்பதும் வயிற்றில் கருவுற்றிருந்தாலும் கணவன் உணவு உண்ட பின்பு உணவு உண்பதும் கணவனது தீர்மானமே கடவுளின் வாக்கு என மதிப்பதும் கணவன் விருப்பு வெறுப்புகளை புரிந்து கொண்டு செயற்படுவதும்.... சிலவேளை இவற்றில் ??மைகள் இருக்கென்று தான் ஒதுக்கியுள்ளார்களோ நகரத்தில். மூன்று மாதம் வாழ்ந்த என்னிலும் முப்பது வருடம் வளர்த்த தாய்க்கு தன் பிள்ளையைப் பற்றித் தெரிந்துதான் பொய் சொல்லியிருப்பாள் என அவனே சமாதானப் படுத்திக் கொண்டான்.

மதிய உணவு எல்லோருமாகச் சேர்ந்து உண்டு கொண்டிருக்கின்றனர். மாமியார் தொடர்கின்றாள். "அண்மையில் நடந்த சூட்டுச் சம்பவத்திலே சமாதானம் போய் யுத்தம் வந்திடும் என்று எல்லோரும் பதறப்பட்டுக் கொண்டு இருந்தவையள். ஆனால் நோர்வே திரும்பவும் வந்து இரண்டு பேரோடும் கதைக்கப் போகுதாம்".

"ஓ... புலிகளும் சொல்லியிருக்கினம். தாங்களாய் யுத்தம் தொடங்க மாட்டம் என்று இராணுவத்தினரும் சொல்லியிருக்கினம். தாங்களும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீற மாட்டினம் என்று" என்றாள் செபஸ்ரீனா.

"புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இராணுவத்தினர் புதிய முகாம்களை அமைக்கக் கூடாது என்றும் இராணுவத்தினர் முகாம்களுக்குள்ளே இருக்க வேண்டும், பொது மக்களை துன்புறுத்தக் கூடாது என்[டு] தானே இருக்கிறது. ஆனால் அண்டைக்[கு] நடந்த விபத்தில சனம் ஆர்ப்பாட்டம் செய்யப்போக அதுகளுக்கு அடிச்சிருக்கினம். பொலிஸ்காரர் பார்த்துக் கொண்டு நின்டிச்சினமாம். காயப்பட்டாக்களையும் இராணுவத்தினர் கொட்டனுகளோட நிற்கிறதையும் பேப்பர்காரர் பேப்பரில போட்ட[ங்]கள்" என்றாள் செபஸ்ரீனாவின் அம்மா.

குடும்பத்திற்குள்ள ஆயிரம் பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால், அது வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும். பக்கத்து வீட்டாருக்குத் தெரியக் கூடாது. ஆனால் நாட்டுப் பிரச்சினை ஆ.... குடும்பத்திலும் புரிந்துணர்வு இல்லை. பிறகு நாட்டில எங்க. "என்ன தம்பி நீ பேசாமல் இருக்கின்றாய். கொஞ்சம் குளம்பில விடட்ட" என்ற மாமி கேட்டது சங்கரின் சிந்தனையைக் குறைத்தது.

கிராமத்திற்குச் செல்ல இருவரும் ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர். செபஸ்ரீனா 'ரீ' சேட் அணிந்தவாறே முன்வந்து நிற்கின்றாள். சங்கர் திருமண நாள் அன்று செபஸ்ரீனா சாறி கட்டியதற்குப் பிறகு ஓர் நாளும் அவள் சாறி கட்டியதைப் பார்த்தது கிடையாது. புகைப்படத்தைத் தான் ஆசைக்குப் புரட்டிப் புரட்டிப் பார்த்திருக்கிறான்.

"அம்மா நாலஞ்சு நாளையால இஞ்ச வருவன்."

"இல்ல மாமி இனிவர ஒரு மாதம் செல்லும்."

"சீ...சீ.. அது முடியாது."

"மாமி போயிற்று வாறம்"

"அம்மா போயிற்று வாறம்" மோட்டார் வண்டி பயணமானது.

சிறிது தூரம் மௌனமாகத் தொடர்ந்தது பயணம். சங்கரே தொடர்கிறான். "தங்கச்சிக்கு திருமணம் செய்து வைக்க எல்லா ஏற்பாடும் முடிஞ்சுது. ஆனால் உனக்கும், எனக்கும் உள்ள பிரச்சினையால் அவள் திருமணத்தை வெறுக்கின்றாள். நீதான் உதவி செய்யனும்."

"என்ன உதவி" என்றாள் செபஸ்ரீனா. திருமணம் நடக்கும் வரைக்குமாவது நீ என்னுடன் கிராமத்தில் வசிக்கவேண்டும். அதோட அன்பான மனைவியாகவும் இருக்கவேண்டும் என்றான் பணிவாக.

"இதால திருமணம் நடக்குமென்றால் நான் ஒத்துக்கிறன். ஆனால், இடையில் ஒருக்காலாவது நான் வீட்டை போய் வரவேண்டும். இந்த கிராமத்தில் தொடர்ந்து நிக்கிறது கஷ்டம்" என்றாள் செபஸ்ரீனா. சங்கருக்குத் திருமணமே முடித்து வைத்தாற் போன்ற நிம்மதி ஏற்பட்டது.

பொதுவாக ஆண்கள் தோல்வியைத் தாங்குவார்கள் ஆனால், அவமானத்தை தாங்க மாட்டார்கள்.

(21 ஆம் பக்கம் பார்க்க)

# எழுபதிலும் ஆசை வரும்

அவுஸ்திரேலிய பிரஜை பொன்னுச்சாமிநாடாருக்கு 73 வயது. எழுந்து நிற்கவும், தொடர்ந்துபேசவும் முடியாமல் திணறுகிறார்.

"என்னோட ஆறாவது மனைவி குமாரி தங்கத்துடன் இப்ப நான் தாம்பத்தியம் நடத்துகிறேன். எங்களுக்கு 6 வயதில் இந்திரா பிரியதர்ஷினியும், 4 வயதில் ஜான்சி ராணியும் இருக்கிறார்கள். இவர்களுடன் நான் தமிழ்நாட்டில்தான் இருப்பேன்.

என்னோட இரண்டாவது மனைவி சுகுமாரியை நான் விவாகரத்து பண்ணிவிட்டேன். என்னை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பிடாதீங்க"

-கோடீஸ்வரர் பொன்னுச்சாமியின் கோரிக்கையை சென்னை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை.

"பொன்னுச்சாமி மீது அவுஸ்திரேலியாவில் கிரிமினல் வழக்கு இருக்கிறது. நான் உறுதியளித்ததால்தான் பொன்னுசாமி இந்தியா வருவதற்கு சுற்றுலா விசா கிடைத்தது. அவர் அவுஸ்திரேலியா திரும்பவில்லை என்றால் எனக்குத்தான் பிரச்சினை"

-இரண்டாவது மனைவி சுகுமாரியின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட உயர்நீதிமன்றம்,


பொன்னுச்சாமியை வெளிநாட்டுக்கு அனுப்பசட்டபூர்வ நடவடிக்கை எடுக்குமாறு தமிழக பொலிஸுக்கும், தலைமை குடிவரவு குடியகல்வு அதிகாரிக்கும் உத்தரவிட்டுள்ளது.

ஆறாவது மனைவியை விட்டுப்பிரிய மறுக்கும் பொன்னுச்சாமியை சந்திக்க பத்திரிகையாளர்கள் சென்றனர்.

சிமெண்ட் பூசாத செங்கல் சுவர். அஸ்பெஸ்டாஸ் கூரை. இரும்புக் கட்டிலில் படுத்தபடி டி.வி பார்த்துக் கொண்டிருந்தார் மன்மதக் கிழவர். பக்கத்தில் பர்மியப் பாணியில் உடையணிந்த 28 வயதே ஆன அவரது 6-வது மனைவி குமாரிதங்கமும், இரண்டு பெண் குழந்தைகளும்.

பத்திரிகையாளர்களுக்கு தனது கதையை இப்படிக் கூறினார் பொன்னுச்சாமி நாடார்.

"என் சொந்த ஊர் மணவாளக்குறிச்சி. அப்பா இளையபெருமாள். நான் நாலாவது பையன். 1956ல் திருவனந்தபுரம் பல்கலைக்கழகத்தில் பி.ஏ முடிச்சேன். 13 வருஷம் ஆசிரிய வேலை பார்த்தேன். 1962ல் குலசேகரம் கௌசல்யாவை கல்யாணம் செய்தேன். அவதான் என் முதல் மனைவி. நான் சீதனத்துக்கு எதிரானவன். அதனால ஒரு சதம் கூட சீதனம் வாங்கவில்லை. பி.ஏ படித்திருந்த கௌசல்யாவுடன் ரொம்ப ஜாலியாக குடும்பம் நடத்தினேன். அவள் எம்.ஏ படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள். போபால் மீடியா கல்லூரியில் சேர்த்து விட்டு உகண்டாவுக்குப்போயிட்டன்.



6-வது மனைவி குழந்தைகளுடன் பொன்னுச்சாமி

அப்பதான் ஸ்டவ் வெடித்து கௌசல்யா இறந்து விட்டதாகத் தகவல் வந்தது.

ஒரு வருஷம் கழித்து தாயகம் வந்தேன். டாக்டருக்கு படித்த மணமகள் தேவை என்று பேப்பரில விளம்பரம் கொடுத்தேன்.

**உண்மைச சம்பவம்**

அதைப் பார்த்துவிட்டுதான் சுகுமாரி பிரதீபா விண்ணப்பம் போட்டாள். சுகுமாரி சிவகாசியில் பிறந்தவள். திருநெல்வேலியில் வளர்ந்தவள். எம்.எஸ்.ஸி விலங்கியல் படித்திருந்தாள். பார்க்க அழகாக இருப்பாள். நானும் கம்பீரமாக இருந்தேன். திருச்செந்தூர் கோயிலில் வைத்து தாலி கட்டி, உகண்டாவுக்குக் கூட்டிப் போனேன். நான் வேலை பார்த்த பாடசாலையில் அவளுக்கு ஆசிரியை வேலை கிடைச்சது.

முதல் மனைவி இறந்ததால் இரண்டாவது மனைவியை ஆழமாக லவ் பண்ணினேன்.

1973-ல் நானும் சுகுமாரியும் உகண்டாவை விட்டு அவுஸ்திரேலியா போனோம். சுகுமாரிக்கு அங்கேயும் ஆசிரியர் வேலை. நான் ஹோட்டல் ஆரம்பித்தேன். 88-ஆம் வருடம் ஒரு கோடி ருபாய்க்கு வீடு வாங்கினேன். அது சரியில்லை என்று சுகுமாரி சொன்னாள். சுகுமாரிக்காக நீச்சல் குளத்துடன் இன்னொரு பெரிய வீடு வாங்கினேன்.

பணம் பணம் என்று அலைந்ததால் படுக்கை அறையை மறந்திட்டேன். 6 மாதத்துக்கு ஒரு தடவை கூட அவளைத் தொடுறதில்லை. அப்படி இருக்கையில் தமிழ் நாட்டில் இருந்து அங்கே வந்த என் தங்கச்சி மகன் செல்வன் சாமிதாஸ் ராமனுக்கும் சுகுமாரிக்கும் எப்படியோ தொடர்பு ஏற்பட்டு, அந்தக் கண்றாவிய என் கண்ணால பார்த்துட்டேன்.

அவுஸ்திரேலிய குடும்ப நீதிமன்றத்தில் வழக்குப் போட்டேன். 20-09-1989 இல் விவாகரத்து கிடைத்தது. இரண்டு பங்களாவையும் சுகுமாரிக்கே கொடுத்துவிட்டேன். அவள் தன் காதலனோடு ஜாலியாக இருக்கும்போது 57 வயது கோடீஸ்வரன் நான் சும்மா இருக்க முடியுமா?

பிஜி தீவைச் சேர்ந்த சுமித்திராவை மூன்றாவதாக கல்யாணம் செய்தேன். கல்யாணம் நடந்த அன்றே தன் இளம் காதலனுடன் ஊர் சுத்தக் கிளம்பிவிட்டாள் சுமித்ரா. இரவு ஆகியும் வீட்டுக்கு வரவில்லை. மறுநாளே சுமித்ராவை விவாகரத்து பண்ணிவிட்டேன்.

15 நாள் கழித்து பிஜி தீவில் இருந்த வட இந்தியப்பெண் பர்மிலா பென் என்ற 18 வயது குமரியை கல்யாணம் செய்தேன். மோகம் 30 நாள்தானே! என்னைப் பிடிக்கவில்லை என்று சொல்லி விவாகரத்து வாங்கிக் கொண்டு போய்விட்டாள் 4-வது மனைவி.

1992-ல் பொள்ளாச்சியைச் சேர்ந்த லட்சுமியை கல்யாணம் செய்தேன். 60 வயதான எனது சொத்துக்கு ஆசைப்பட்டுத்தான் என்னைக் கட்டினாள் போல. அந்த லட்சுமி தனது சொந்தக்காரங்களைக் கூட்டிவந்து என்னை அறையில் அடைத்து வைத்து சித்திரவதை செய்தாள். விஷ ஊசி போட்டு என்னைக் கொலை செய்யப் பார்த்தாள். அதனால பொலிஸில் சொல்லி அவளையும் விவாகரத்து பண்ணினேன். ரொம்ப பேசிட்டேன். மூச்சு வாங்குதே... ஓய்வு எடுக்கப் போகிறேன்." படுக்கையில் சாய்ந்த பொன்னுச்சாமியின் நெஞ்சை, முகத்தை தடவிக் கொடுத்தார் ஆறாவது மனைவி. அரைமணி ஓய்வுக்கு பிறகு படுக்கையில் சாய்ந்தபடியே பெருமூச்சோடு தொடர்ந்தார்.

"93-ல் தமிழ்நாட்டுக்கு வந்தபோதுதான் இந்த குமாரி தங்கத்தை ஆறாவதாக கல்யாணம் பண்ணிட்டேன். அப்ப இவளுக்கு 16 வயசுதான். 99-ஆம் ஆண்டு என் முத்த மகள் இந்திரா பிறந்தநாள். 66 வயசில் எப்படி பிள்ளை பிறக்கும் என்று நினைக்கிறிங்களா? அஸ்வகந்தரி லேகியத்தைத் தினமும் சாப்பிட்டுத்தான், இவளோட உறவு வைச்சுக்கிட்டேன். குழந்தைகள் பிறந்தாங்க. இப்ப என்னை அவுஸ்திரேலியாவுக்குப் போ, நீ இந்திய பிரஜை இல்லை என்று சொல்லி விட்டார்கள். நான் அவுஸ்திரேலியா பிரதமர் பதவிக்கே தேர்தலில் போட்டியிட்டவன். நான் இந்தியாவில் வி.பி.சிங்கை எதிர்த்துப் போட்டியிட்டேன். மத்திய மந்திரியாக இருந்த பொன் ராதாகிருஷ்ணனை எதிர்த்தே போட்டியிட்டவன். என்னை இந்தியாவை விட்டு விரட்டலாமா?"

"மறுபடியும் அவுஸ்திரேலியா சென்றால் ஏழாவதாக ஒரு பெண்ணை திருமணம் செய்வீர்களோ?" சிரிக்காமல் பத்திரிகையாளர்கள் கேட்டனர்.

ஏதோ சொல்ல முயன்றார். வார்த்தை வரவில்லை. 6-வது மனைவியை ஏக்கத்தோடு பார்த்தார் அந்த 73 வயதுக் கிழவர்.

> அந்த லட்சுமி சொந்தக்காரங்களைக் கூட்டிவந்து என்னை அறையில அடைத்து வைத்து சித்திரவதை

# புரிந்துணர்வு

(20ம் பக்கத் தொடர்ச்சி)

அதுவும் ஒரு பெண்ணினால் ஏற்படும் அவமானம். சொல்லவும் வேண்டுமா? செபஸ்ரீனாவுடனான பேச்சு நிம்மதியைத் தந்தது. அரசியலில் ரகசிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திட்டால் போல அவன் வாழ்க்கையும் ஆகிவிட்டது.

இதுதான் குடும்பம் என்று ஊரே சொல்லும் படியாக அன்பாக கிராமத்தில் மூன்று நாட்கள் போயிற்று. மதுராவும் திருமணத்திற்கு சம்மதித்துவிட்டாள் .நான்காம் நாள் புறோக்கரைச் சந்திப்பதற்கு சங்கர் ஆயத்தமானான்.மதுரா செபஸ்ரீனாவிற்கு என்ன கூறினாளோ தெரியாது. "என்னைக் கூட்டிக்கொண்டுபோய் நகரத்தில் விட்டு விடுங்கோ. கஷ்டமாய் இருக்கு. கலியாணத்தைக் கொஞ்சம் பிந்திப்போட்டுக்கலாம் " என்றாள் செபஸ்ரீனா.

சங்கரின் கண்கள் கலங்குகின்றன. வலக்கைக்கு ஏதோ உணர்வு ஏற்பட்டு செபஸ்ரீனாவின் கன்னத்தை நோக்கி வேகமாக நகர முற்படுகிறது.

மதுரா வருவதைக்கண்டு தன்னை அடக்கிக் கொள்கின்றான். "மதுரா நாங்கள் செபஸ்ரீனாவின்ர வீட்டை போயிட்டு வாறம்."என்று கூறிவிட்டு இருவரும் மோட்டார் ஊர்தியில் சென்றனர்.

மௌனமாகவே சாலை வழியே சென்று கொண்டிருக்கின்றனர். திடீரென சிறிய மழை பெய்து விட்டு நின்றுவிட்டது. நகரத்து கழிவுநீர் வாய்க்கால் சேறு, மழை பெய்ததால் மணக்கின்றது. இவர்கள் முன் இப்படி ஒரு கொடுமை நடக்கப் போகின்றது என யார் கண்டார்கள்?

குறுக்கு வீதி வழியே வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று பிரதான வீதிக்குள் திடீரென புகுகின்றது. பிரதான வீதியால் வந்த பஸ் ஒன்று திடீர் பிரேக் போட்டு நிறுத்த முற்பட்டும் முடியாமல் இரண்டும் மோதிக் கொள்கின்றன. முன்னால் வந்த பஸ் வண்டியைத் திருப்ப முற்படுகின்றான் சாரதி.முடியவில்லை. மோட்டார் வண்டியை நசித்து விட்டு எதிரே நின்ற மின்கம்பத்தில் மோதுகின்றது. மின் கம்பம் அறுந்து விழுகின்றது. கம்பிகள் எரிவதை செபஸ்ரீனா அன்றுதான் பார்த்தாள். ஐந்து பேர் இறந்து விட்டனர். பலருக்குக் காயம். மழைக்கு ஒதுங்கி நின்றபடியால் இவர்கள் இருவருமே நேரடியாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சிறிது நேரத்தில் நகரத்து இளைஞர்கள் வந்தார்கள். அவர்களுக்கு விபத்து என்றால் என்ன என்று தெரியாது போலும். ஒரு உயிருக்கு ஓர் சன்னம் பெறுமதி ஆவது போல, ஒரு லீற்றர் பெற்றோல் அம்மூன்று வாகனங்களையும் கொளுத்த போதுமாகியது. நல்லவேளை மக்கள் முன்பே மீட்கப்பட்டுவிட்டனர்.

"நகர வாழ்க்கையும் வேண்டாம். கரன்ட்டும் வேண்டாம். நல்ல றோட்டும் வேண்டாம். ஆடம்பர வாழ்வை வேண்டி அன்பான கணவனையும், பாசமிகு மதுராவையும் பற்றி புரிந்து கொள்ளாமல் நடந்தேனே! இரக்கமில்லாத நகரத்து மக்களைக் கண்டேனே! என்னை மன்...மன்னித்து விடுங்கள்." என்று சங்கரைக் கட்டி அணைத்தாள். மீண்டும் "கிராமத்து வயல்களும், நீங்களுமே எனக்குப் போதும். வண்டியை எடுங்கோ போவம்." என்றாள் செபஸ்ரீனா.

'புரிந்துணர்வுடன் நடந்தால் எதிலும் என்றைக்கும் தோல்வியில்லை' என்று அவளின் கூந்தலை ஆதரவாக வருடிக் கொடுத்தான் அவன்.

(யாவும் கற்பனை)

**நம்பிக்கை!**

மாவீரன் அலெக்சாண்டர் உலகத்தை வெல்ல புறப்பட்ட போது, தன் சொத்துக்கள் முழுவதையும் நண்பர்களுக்குப் பகிர்ந்தளித்தார்.

அப்போது ஒரு நண்பர், "எல்லாவற்றையும் கொடுத்து விட்டால், உங்களிடம் மீதி என்ன இருக்கும்?" என்று கேட்டார்.

அலெக்ஸாண்டர் சொன்னார் "நம்பிக்கை."

## கவர்ச்சி நடிகை தூர்மன்



ஹொலிவூட்டின் பாலியல் கவர்ச்சி நடிகைகளில் 99ஆவது இடத்தைப் பிடித்துள்ள உமா துர்மன் சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற ஆசையில் 15 வயதிலேயே பள்ளிப் படிப்பை நிறுத்திக் கொண்டவர். இவரது மூதாதையர்கள் இந்தியர்கள். அப்பாவின் பெயர் ரொபட் துர்மன். இந்து-புத்த மதங்களைப் பற்றி நிறையப் படித்தவர். அவருடைய எல்லாக் குழந்தைகளுக்கும் இந்துப் பெயர்களையே வைத்திருக்கிறார்.

துர்மனின் முதல் படமான 'டேஞ்சரஸ் சைலன்சர்' 1980இல் வெளிவந்தது. இவர் இருமுறை திருமணம் செய்தவர். உடல் பாகத்திலே இவருக்குப் பெரிதாக இருப்பது இவரது கால்கள். 11 சைஸ் செருப்புகள் தான் இவருக்குப் பொருந்துமாம். தற்போது திரைப்படமொன்றில் நடிப்பதற்குச் சம்பளமாக 12 லட்சம் டொலர்களை வாங்குகிறார்.

அதிகம் புகால் சேர்க்கப்படாத அரிசி உணவையே விரும்பி உண்ணும் இவர், புத்த துறவியாக மாற வேண்டும் என்று விரும்புகிறார். இவரது குழந்தையின் பெயர் 'மாயா'. அதனுடன் விளையாடுவதே இவருக்குப்பொழுது போக்கு. நல்லவனாக இருக்க வேண்டும். பணத்துக்காக ஆன்மாவைத் தொலைத்து விடாதே என்று ஞான உபதேசம் செய்கிறார் இந்த உமா துர்மன்.

# தனுஷிடம் நறுக் 10 கேள்விகள்.



**நடிப்பதற்கு யாரிடம் கற்றுக் கொண்டீர்கள்?**
நிலைக் கண்ணாடியிடம்.

**முன்னணி நடிகர்களுடன் சேர்ந்து நடிப்பீர்களா?**
வாய்ப்புக் கிடைத்தால் நிச்சயம் நடிப்பேன்.

**உங்களுக்கும் சிம்புவுக்கும் என்ன பிரச்சினை**
நீங்களே ஆரம்பித்து வைத்து விடாதீர்கள். அவர் எனக்கு குளோஸ் பிரண்டு.

**உங்கள் திறமையால் இந்த அளவுக்கு உயர்ந்தீர்களா?**
நான் எப்போதும் அப்படி சொன்னதில்லையே.

**அரசியலுக்கு வருவீர்களா?**
தொண்டனாக இருக்கக்கூட எனக்குத் தகுதி இல்லை.

**உங்கள் நிஜ கேரக்டர் எப்படி?**
சர்வ அப்பாவி.

**சினிமாவில் பந்தாவாக ஏன் தோன்றுவதில்லை?**
அதற்கு தகுந்த மாதிரி உடம்பு இல்லை.

**நீங்கள் யாரைப் போல வாழ ஆசைப்படுகிறீர்கள்?**
ரசிகர்களில் ஒருவனாக.

**நடிப்பு மேதை சிவாஜியிடம் உங்களைக் கவர்ந்த அம்சம் எது?**
வீர வசனமும்,சிங்க நடையும்.

**கடவுள் உங்கள் முன் தோன்றினால் என்ன கேட்பீர்கள்?**
ரசிகர்கள் முன் நல்ல நடிகனாக இருக்கவேண்டும் என்று.

# 'தவமாய் திரைக்க



# அம்மாவாக ரேணுகா மேனன்

தமிழ் சினிமாவைப் பொறுத்த வரை நடிகைகள் திருமணம் செய்து கொண்டால், அவர்கள் கதாநாயகியாக நடிப்பதற்கு லாயக்கற்றவர்களாக முடிவு செய்து அம்மாவாகவோ,அக்காவாகவோ நடிக்கத்தான் அழைப்பார்கள்.

அதனால் தானோ என்னவோ நடிப்பிற்காகக் கூட அம்மா வேடம் ஏற்க பொதுவாக நடிகைகள் முன்வருவதில்லை.

ஒன்றிரண்டு நடிகைகள்தான் அம்மா வேடம் ஏற்று நடித்து வருகிறார்கள். அந்தவகையில்'சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி' படத்தில் இரண்டு குழந்தைகளுக்கு அம்மாவாக நடித்திருக்கிறார் நவ்யா நாயர்.

அந்த வரிசையில் புதிதாக இணைந்து கொண்டிருப்பவர் ரேணுகா மேனன். 'கலாபக் காதலன்' படத்தில் ஆர்யாவுக்கு ஜோடியாக நடிக்கும் இவர், ஒரு குழந்தைக்குத் தாயாக நடித்து வருகிறார்.



# நொந்து போன பிரபலங்கள்

தீபாவளி நேரத்தில் எண்ணெயில் போட்ட பலகாரமாக நொந்துபோயிருக்கிறார்கள் தமிழ் சினிமா பிரபலங்கள்.வருமான வரி துறையினரின் அதிரடி சோதனைதான் அவர்கள் நொந்து போனதற்குக் காரணம்.

விஜய், விவேக், விக்ரம், த்ரிஷா, சிநேகா, ஏ.ஆர். ரஹ்மான், ஹரிஸ் ஜெயராஜ், யுவன் சங்கர் ராஜா, இயக்குனர் ஷங்கர் என அதிரடி சோதனையில் சிக்கியவர்களின் பட்டியல் நீள்கிறது.கணக்கு வழக்கு கேட்டு குடைந்து எடுத்துவிட்டார்களாம் வருமான வரித்துறையினர்.

தீபாவளி நேரத்தில் புதுப்பட அட்வான்ஸ்,ஒப்பந்தங்கள் என நட்சத்திரங்கள் பிஸியாக இருக்க சரியான நேரம் பார்த்து கல் எறிந்திருக்கிறார்கள் அதிகாரிகள்.

எத்தனை கோடி மாங்காய்கள் கொட்டப் போகிறதோ?

# ஹீரோவாகப் போகும் சி



டி.ராஜேந்தர் நல்ல இயக்குனர், சிறந்த நடிகரும் கூட .சின்ன வயதிலிருந்தே தன் மகன்கள் சிம்பு, குறளரசன் இருவரையும் படங்களில் நடிக்க வைத்துக்கொண்டிருக்கிறார்.

மகன்களை ஹீரோவாக்க வேண்டும் என்ற அவரது கனவை, மூத்த மகன் சிம்பு நிறைவேற்றிவிட்டார். தனக்கென ஒரு ரசிகர் பட்டாளத்தையும் வைத்துக் கொண்டு கலக்கிக் கொண்டிருக்கிறார்.

தனது இரண்டாவது மகன் குறளரசனையும் கதாநாயகனாக்கிப் பார்க்க ஆசைப்படுகிறார் டி.ராஜேந்தர். ஆனால், இரண்டாவது மகன் விசயத்தில்தான் அப்பாவின் கனவு கொஞ்சம் ஆட்டம் கண்டிருக்கின்றது.

இரண்டாவது மகனின் தேகமோ குண்டக்க மண்டக்கவாக ஏறிக் கிடக்கிறது. எனவே, தேவையான வைத்தியம் பார்த்து மகனின் எடையைக் குறைக்கப்போகிறாராம் டீ.ஆர்.

இதுபற்றி டீ.ஆரிடம் கேட்டபோது

'கூடிய சீக்கிரம் என் மகன் ஆவான் ஒல்லி
அப்புறம் ஆவான் கில்லி
இப்பவே வைக்கிறேன் அதை சொல்லி'

என்கிறார் தனது வழமையான பாணியில்.

அப்பா டைரக்டர், அண்ணா லிட்டில் ஸ்டார், தம்பி ஆவாரா இன்னொரு ஸ்டார்?

## ...ாய் தவமிருந்து' ...க்கண்ணோட்டம்



'ஆட்டோகிராப்' திரைப் படத்தின் மூலம் அழுத்தமான, மென்மையான திரைக் கதையைத் தந்த இயக்குனர் சேரன், இயக்கி நடிக்கும் படம் 'தவமாய் தவமிருந்து'. அவருக்கு ஜோடியாக அறிமுகமாகிறார் பத்ம பிரியா.இவர் கேரளத்து வரவு.சேரனின் தாய், தந்தையாக ராஜ்கிரனும், சரண்யாவும் நடித்திருக்கிறார்கள். குடும்ப உறவில் குழந்தைகளை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பில் தாயின் பங்குக்கு இணையானது தந்தையின் அர்ப்பணிப்பு. மகனுக்கும்,தந்தைக்கும் இடையே உள்ள இந்த ஆழமான உணர்வின் வெளிப்பாடுதான் படத்தின் கதை.

வாழ்வின் நிலைகளை எட்டு விதமாக படமாக்கியிருக்கிறார்கள்.

பாடல் வரிகளை பா.விஜயன்,சினேகன்,தேன்மொழி ஆகியோர் எழுதியுள்ளனர்.சபேஷ்-முரளி முதன் முறையாக சேரனின் படத்திற்கு இசையமைத்திருக்கிறார்.

## ...ம் சிம்புவின் தம்பி



## சினி மினி

ரஜனியுடன் 'சிவாஜியில்' நடிக்க ஒப்பந்தமாகியிருக்கும் ஸ்ரேயாவுக்கு தமிழ் உச்சரிப்பு சரியாக வரவில்லையாம்.

❖ ❖ ❖ ❖

'சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி' படத்தில் குடும்பப்பொறுப்பில்லாத ஆசிரியராக வந்த தங்கர்பச்சான், தனது அடுத்த இயக்கமான 'பள்ளிக்கூடம்' படத்திலும் ஆசிரியராகவே நடிக்கப்போகிறார்.

❖ ❖ ❖ ❖

'அழகு நிலையம்'படத்தில் விந்தியா அதிரடி கதாநாயகியாக நடித்து வருகிறார்.

❖ ❖ ❖ ❖

சதா முன்பெல்லாம் எந்த விழாவுக்குச் சென்றாலும் புடவை கட்டிக்கொண்டு போவார். இப்போது பொது இடங்களானாலும் சரி, சினிமா விழாக்களானாலும் சரி மார்டன் டிரஸ்ஸில் கவர்ச்சியாக வந்து அசத்துகிறார்.

❖ ❖ ❖ ❖

'காதல்'படத்தில் இணைந்த ஷங்கர்- பரத் கூட்டணி விரைவில் மீண்டும் ஒரு படத்தில் இணையவுள்ளதாம்.

❖ ❖ ❖ ❖

'லவ் டுடே'பாலசேகரன் மாதவனை வைத்து ஒரு படத்தை இயக்குகிறார்.படத்திற்கு'ஆர்யா' என பெயரிட்டுள்ளார்.

❖ ❖ ❖ ❖

விக்ரமின்'மஜா', விஜய்யின்'சிவகாசி', சூர்யாவின்'கஜனி' என மூன்று திரைப்படங்களையும் தெலுங்கில் டப்பிங் செய்து தீபாவளிக்கு வெளியிடப் போகிறார்களாம்.



## அடுத்த சிம்ரன் ரெடி?

காலியாக இருக்கிறது சிம்ரனின் சிம்மாசனம், ரசிகர்களின் உள்ளங்களைப் போலவே. அந்த இடத்தை யாராவது நிரப்பமாட்டார்களா என்று ரசிகர்கள் ஏங்கிக்கொண்டிருக்க, 'நான் இருக்கிறேன்' என முன்வந்திருக்கிறார் அசின்.

'கஜினி', 'சிவகாசி', 'மஜா', 'கோட்பாதர்' என கலக்கிக் கொண்டிருக்கும் அசின் நடிப்பிலும், நடனத்திலும் சூப்பர். போதாக்குறைக்கு விஜய்யுடன் சிவகாசியில் காமெடியிலும் கலக்கியுள்ளாராம்.

நம்பர் 1 ஹீரோயின் அசின்தான் என்று அடித்துச் சொல்கிறதாம் தமிழ்திரை உலக வட்டாரம். அசினுக்கு முன்னணி பிரபல்யங்களும் பொக்கே கொடுத்து வாழ்த்திக்கொண்டிருக்கின்றனராம். சிரஞ்சீவி,ராதிகா சரத்குமார் என வாழ்த்துப்பட்டியல் நீள்கிறதாம். அசினின் முகத்தில் இப்போது எக்ஸ்ட்ரா மலர்ச்சி! (சிம்ரன் மீண்டும் நடிக்க வரும் விசயம் அசினுக்குத் தெரியுமா?)

# நட்பு + காதல் = திருமணம்

காதல் -

கற்பாறை இதயங்களையும் கீறிச் சுரந்து வரும் அற்புத தேன் ஊற்று.

கரடுமுரடான மனங்களிலும் பச்சைக் கம்பளம் விரித்து குளிர்விக்கும் தென்றல் காற்று!

இரண்டு விழிகளின் மோதலால் பிறக்கும் காதலுக்கு கண்டிப்பாய் மொழி தேவையில்லை. அந்தக் காதலை பரிமாறிக் கொள்ளவும் தேவையில்லை.

ஏனென்றால்,விழிகள் மோதிய போது ஏற்பட்ட உணர்வுகள், ஒருவர் காதலை ஒருவரிடம் பார்வைகளால் பரிமாறியிருக்கும்.

இப்படி பார்வைகளால் பரிமாறப்படும் காதலுக்கு ஆயுசு அதிகம். ஏன் தெரியுமா?

வார்த்தைகள் கூட தீர்ந்து போகலாம். பேசிப் பேசி தமிழிலுள்ள அத்தனை வார்த்தைகளும் முடிந்து போயிருக்கலாம்.

ஆனால், பார்வைகள் பேசும் சொற்களுக்கு எல்லை தான் ஏது? ஒரு சொல்லையல்ல ஓராயிரம் சொற்களை பார்வைகள் பரிமாறிவிடுமே. இருவர் மட்டுமே அறிந்த ரகசியங்களை பார்வைகளால் மட்டும் தானே பரிமாற முடியும்.

அதனால் தானோ என்னவோ,

''என் கண்கள் பேசும் மொழியறிந்தால்
உன் ஜீவன் துடிக்கத் தேவையில்லை.
இரு கண்கள் பேசும் பாஷைகளை
பல நூறு மொழிகள் சொல்வதில்லை''

என்றொரு பாடல் வரி கூட இயற்றப் பட்டுள்ளது.

காதலின் பல வகை பரிமாணத்திற்கும் வித்திட்டுப் போனவர்கள் பழங்கால காதலர்கள்.

லைலா – மஜ்னு
அம்பிகாவதி – அமராவதி
ரோமியோ – ஜூலியட்
அனார்கலி – சலீம்
அந்தோனி – கிளியோபட்ரா


இப்படி நீண்டு செல்லும் பட்டியலெல்லாம், காதல் வரலாற்றின் கண்ணீர் காவியங்கள். கறை படிந்த இருட்டுப் பக்கங்கள். ஆனாலும், சேர்ந்தும் சேராமல், இறந்தும் இறவாமல் அவர்கள் வாழ்வித்துப் போன காதல் இன்றும் அழியாமல் ஒவ்வொரு காதலர்களிலும் பிரதிபலிக்கிறது.

காதல் வயப்பட்டவன் கண்டிப்பாய் கவிஞனாகி விடுகிறான். காதல் அவனை கவிஞனாக்குகிறது. அவனுக்குள் வேகம் பிறக்கிறது. ஒரு சிலருக்குள் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற வேகம் பிறக்கிறது. உலகில் எல்லோரும் உண்மைக் காதல் வயப்பட்டால் கொள்ளை ஏது? கொலை ஏது? கற்பழிப்பு ஏது?

உண்மையாய் ஒருத்தியை நேசிப்பவனால் இன்னொரு பெண்ணை மனதாலும் நெருங்க முடியாது. அவனால் இன்னொரு பெண்ணுக்கு நிச்சயமாக தவறிழைக்க முடியாது.

உயிருக்குள் கரைந்து போன பெண்ணுக்காக ஒவ்வொருவனும் வார்த்தையால் கவிவடித்துக் கொண்டிருக்கிறான். இப்படி,

'அன்பே! நீ
முட்கள் சூழ்ந்திருக்கும்
ரோஜாவாக இரு.
உன்னை நான்
கஷ்டப்பட்டு
இரத்தம் சிந்தி
அடையவேண்டும்.
அப்போதுதான்,
உன் மகத்துவம்
எனக்குப்
புரியும்.



கஷ்டப்பட்டு
பெற்ற
உன்னை கை நழுவவிடாமல்
காப்பாற்றும் வேகம்
பிறக்கும்.'

'நீ பூக்களில் நடந்தால்
கூட நான்
நொந்து போகிறேன்
ஏன் தெரியுமா?
பூக்கள் கசங்கி விடும்
என்பதற்காக அல்ல.
உன் மென் பாதங்கள்
சிவந்து விடுமே
என்ற கவலையில்தான்'

இப்படி கவிவடித்துக் கொண்டிருப்பவன் எப்படி கெட்டவனாவான்?

காதலுக்கு மொழியில்லை, ஜாதியில்லை, மதமில்லை, அந்தஸ்தில்லை.

ஜாதகம் பார்க்கவும் தேவையில்லை.சீதனம் கொடுக்கவும் தேவையில்லை. நட்பிற்கு பின்பு காதல் உருவாகி இறுதியில் திருமண பந்தத்தில் முடிவுறுமானால் அந்தக் காதல் வெற்றி பெற்று விட்டது என்று தான் அர்த்தம்.

அநேக திருமணங்கள் சீதனத்தின் மூலம் நிச்சயிக்கப்பட்டு வியாபார பண்டமாற்று அன்பைத்தான் வழங்கிக் கொண்டிருக்கின்றன.

ஆனால், காதல் திருமணங்கள் எல்லாமே அன்பின் ஆழமான,உறுதியான அடித்தளத்தில் தான் கட்டியெழுப்பப்படுகின்றன.

கிட்டத்தட்ட ஒரு வருடம் பழகிய உறவு, இருபது வருடம் பழகிய உறவுகளை விட பெரிதாகத் தோன்றுமென்றால் காதலின் வலிமைபற்றி சொல்லித் தெரிய தேவையில்லை.

காதல் எந்தளவுக்கு சுகமானதோ அந்தளவுக்கு சுமையானதும் கூட. நூற்றுக்குப் பத்து காதல்கள் தான் ஜெயிக்கின்றன. பெற்றோர் சம்மதத்துடன் திருமணமும் நடக்கிறது. ஏனைய காதல்கள் எல்லாம் வலிதரும் பிரிவில் தான் முடிகின்றன.

'உயிரே!
ஆயிரம் குண்டூசிகளை
ஒன்றாய் சேர்த்துக்
குத்திய வலியல்லவா
உன் பிரிவு.
வந்து விடு அன்பே
முடியவில்லை என்னால்
உன்னால் பட்டுப்
போயிருக்கும் எனக்கு
காதல் பிச்சை
போட்டு
என்னுள் உயிர்
துளிர்க்க விடு'

என்ற கவி வரிகளும்,

**'பிரிந்து போன நட்பினைக் கேட்டால் பசுமையான கதைகளைச் சொல்லும்.**

**பிரியமான காதலும் கூட பிரிந்த பின் ரணமாய்க் கொல்லும்.'**

என்ற பாடல் வரிகளும் இதனை விளக்கப் போதுமானது.

திருமணத்தில் இணையும் காதல்கள் எல்லாம் சில நாட்களில் மறந்து போகக் கூடியவை. ஆனால், சேர முடியாமல், வேதனையோடு பிரியும் காதல்கள் தான் காலங் காலமாக காதலை சொல்லிக் கொண்டிருப்பவை. அந்தக் காதல்கள் தான் வரலாற்றுப் பொக்கிஷமாக இருக்கும்.

ஆகவே, பிரிந்து விட்டோமே என்று வருத்தப்படாதீர்கள். எல்லாக் காயங்களுக்குமே மருந்துண்டு. காதல் காயங்களுக்கு காலமே சிறந்த மருந்து. பிரிந்தும் பிரியாமல் உங்கள் காதல் வாழ்ந்து கொண்டிருக்கும் என்ற நம்பிக்கையோடு உங்கள் இலட்சியத்தை நோக்கி நடை போடுங்கள்.

காதல் வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமே தவிர, காதலே வாழ்க்கை என்று ஆகி சோர்ந்து போய்விடக் கூடாது.

வலி தரும் பிரிவின் சோதனைகளையும் சாதனைகளாக்கி வாழ்வில் வெற்றி பெறுங்கள் .அப்போது எங்கோ ஒரு மூலையிலிருந்து காதலும் உங்களைக் கண்டிப்பாய் வாழ்த்திக் கொண்டிருக்கும்.

உண்மையான காதலும் வாழட்டும் காதல் கொண்ட உள்ளங்கள் உள்ளவரை.

-இதயா-

# பெண்



*பேனாமுனையிலும் சரி*

*பெண்ணே நீ உயர்ந்துவிட்டாய்...*
*கடுமையான உன் பார்வையில்,*
*பார்க்கிறேன்*
*உனது வெற்றி என்னென்று.*

*நீ சாதிக்க பிறந்தவள் ...*
*சோதனைகள் எத்தனை*
*வந்தாலும் சோர்ந்து விழாமல்,*
*சாதிக்க நிமிர்ந்துவிடு.*

*துச்சமெனப் பெண்ணினத்தை*
*தூற்றி வரும் பித்தரெலாம்,*
*அச்சமோடு தலைகுனிய*
*அவனியிலே வந்தவளே!*

*உன் வருகை*
*பித்தருக்கெலாம்*
*இடி முழக்கமாக இருக்கட்டும்.*

எஸ்.வி.ஸ்டெலா
பொகவந்தலாவ

## பாகற்காயின் மகிமை...

தினசரி காலையில் வெறும் வயிற்றில் பாகற் பழங்களின் சாறை பிழிந்து சாப்பிட்டுவர இரத்தம் மற்றும் சிறுநீர் மிகுந்துள்ள அளவைக் கட்டுப்படுத்தும்.

பாகற்காய் இலைகளைப் பிழிந்து சாறு எடுத்து ஒரு ஸ்பூன் சாற்றில் சிட்டிகை மஞ்சள் பொடி சேர்த்து குழந்தைகளுக்குக் கொடுக்க சளி, இருமல் குறையும்.

இலைச் சாறை பாதங்களில் பூசிவர வெடிப்பு மறையும்.

பாகல் கொடி வேரை நன்கு அரைத்து, வெளி மூலத்தில் பூசிவர மூலம் குணமாகும்.

வெறும் வயிற்றில் ஒரு கரண்டி பாகல் இலைச்சாறு அருந்த வயிற்றுக் கிருமிகள் அழியும்;மலச்சிக்கல் குணமாகும்.

பாகற்காய் கூட்டை தினம் உண்டு வர ரத்தம் சுத்திகரிக்கப்படும். வாதம்,மூட்டுவலி மாறும்.

பாகற்காய் குழம்பு உடல் பலத்தைக் கூட்டும். கண் பார்வையைத் தெளிவுபடுத்தும்.

பாகற்காய் வறுத்து சாப்பிட்டு வந்தால் எலும்பு பலம் பெறும்; பல் உறுதியாகும்;நரம்புகளைப் பலப்படுத்தும். கல்லீரல்,மண்ணீரலைக் காக்கும்.

அதிகமாக மது அருந்துபவர்களுக்கு ஏற்படும் குடல் கோளாறு, நச்சுத்தன்மை,கல்லீரல் கோளாறுகளை பாகற்காய் குணப்படுத்தும்.

நாட்டுமருத்துவம் எடுப்பவர்கள் பாகற்காய் உண்பதைத் தவிர்த்தல் நலம். மருந்தின் குணத்தை பாகற்காய் முறித்துவிடும்.

## அழகு டிப்ஸ்...

உடலில் இருந்து வெளிவரும் வாடை நம்மில் பெரும்பாலானோருக்கு தலையாய பிரச்சினையாக திகழ்கின்றது. இதனால் பொது இடங்களுக்கு செல்வதற்கும், பிறருடன் பழகுவதற்கும் தயங்குகின்றனர். எனவே சில எளிய குறிப்புகள்.

✦

பயத்தம் பருப்பு, மகிழம் பூ, பூலான் கிழங்கு ஆகியவற்றை சேர்த்து அரையுங்கள். வெளியில் செல்லும் போதும் அலைந்து விட்டு வீடு திரும்பும் போதும் இந்தப் பவுடரால் தேய்த்து கழுவுங்கள். அதனால் உடம்பில் ஏற்படும் கெட்ட வாடை, வியர்க்குரு, சொறி அத்தனையும் ஒரேயடியாக நீங்கி, உடம்பு கம கமவென்று மணக்கும்.


✦

செண்பகப் பூ, மகிழம் பூ, ரோஜா மொட்டு, பொன் ஆவாரம் பூ, வெட்டிவேர், சந்தனம், பூலான் கிழங்கு, வெள்ளரி விதை, கடலைப்பருப்பு, முல்தானிமட்டி, பயத்தம் பருப்பு இவற்றை மிக்ஷியில் அரைத்து வாரம் இருமுறை தலையிலும், உடம்பு முழுவதும் இதைப்பூசி குளித்து வந்தால் வாசனையுடன் உடம்பு பொன்னிறமாக மின்னும்.

✦

தலையில் வியர்வை நாற்றம் போக்க சீயக்காய் பொடி 2 டீ ஸ்பூன், வெந்தயத்தூள் 2 டீ ஸ்பூன் இரண்டையும் வெந்நீரில் கலந்து ஒரு நாள் விட்டு, ஒரு நாள் தலைக்கு தேய்த்துக் குளியுங்கள்.ஓரிரு வாரத்தில் அழுக்கும், வியர்வை நாற்றமும் போய், தலை சுத்தமாகி விடும். வியர்வை நாற்றம் உள்ளவர்கள் வெங்காயம் அதிகம் சாப்பிடக் கூடாது. உடம்புக்கு வாசனைத் திரவியங்கள், கிரீம் வகைகள் பூசிக்கொள்ளலாம்.

# நிறையவே சிரியுங்கள்; சந்தோஷமாக வாழலாம்



சிரிப்பு கஷ்டத்தையும், சூழ்நிலையையும் இலேசாக்கும். கடின இதயங்களைக் கூட அசைத்து விடும். இளமைப் பொலிவுடன் அமைதியையும் அளிக்கும் மன அழுத்தம் குறைந்து, தெளிவான சிந்தனை பெற சிரிப்பு அவசியம்.

சிரிப்பு 'ஜோக்கிங்' மாதிரி உடற்பயிற்சி தான்.

சிரிக்கும் போது வயிறு, மார்பு, தோல் பகுதிகளுக்கு நல்ல பயிற்சி கிடைக்கிறது. இதயபூர்வமான சிரிப்பு, நம் மூளையில் உள்ள இயற்கை வலி நிவாரணிகளை ரிலீஸ் பண்ணுகிறது. நோய்த்தடுப்பு முறையை வலுப்படுத்தப்படுகிறது.

நாம் எதைப் பற்றியும் கவலைப்படக் கூடாது. சதா கவலைப்பட்டுக்கொண்டிருந்தால் நாளடைவில் மனஉளைச்சலுக்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்படலாம். இவற்றை ஒரு புறம் மூட்டை கட்டி வைத்து விட்டு சந்தோஷமாக சிரித்துக்கொண்டே இருங்கள்.

சிரித்தால் சோர்வு ஏற்படாது. நரம்புகள் இறுக்கமடைவதில்லை. ஞாபகசக்தி குன்றுவதில்லை. சிரிக்கும்போது எரிச்சலுறுவதோ, ஆத்திரம் அடைவதோ இயலாத காரியம்.

சிரிப்பு ஜீரண இயக்கத்துக்கு உதவுகிறது. இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது.

உங்களுக்கு தன்னிறைவு, மகிழ்ச்சி, திருப்தி எல்லாமே சிரிப்பில் கிடைக்கும். சீரான நகைச்சுவையின் வெளிப்பாடே சிரிப்புத்தான்.

உங்கள் சிரிப்பு உங்கள் ஆயுளை அதிகரிக்க செய்யும் என்பதையும் மறக்க வேண்டாம்.

ஆகவே, எப்போதும் சிரித்துக் கொண்டே இருங்கள்.

ஜெபிக்கா உதயகுமார்,
நல்லூர்.

## கேள்வி-பதில்

*அன்புக்குரிய சகோதரிகளே!*

உங்களுக்குரிய இந்தப் பக்கத்தில் கேள்வி-பதில் பகுதி ஒன்றை ஆரம்பிக்க இருக்கிறோம்.

உங்கள் கேள்வி குடும்பப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இருக்கலாம், சமூகப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இருக்கலாம் இல்லது தனிப்பட்ட பிரச்சினையாக இருக்கலாம் உங்களுடைய கேள்விகளுக்கு மீரா பதில் அளிப்பார். அத்துடன் இப் பகுதிக்கு வாசகர்களாகிய உங்களிடம் இருந்தும் ஆக்கங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.

**உங்கள் கேள்விகள், ஆக்கங்கள் ஆகியவற்றை அனுப்ப வேண்டிய முகவரி:-**

**பெண்**
**சுடர் ஒளி வார இதழ்**
**85, ஜயந்த மல்லிமாரச்சி மாவத்தை,**
**கொழும்பு - 14.**

# கவிதைப் பூங்கா

**வா தீபத்திருநாளே!**

தினந் தோறும் வேதனையில்
வாடுகின்ற எம் வாழ்வில்
இன்ப ஒளி வீசி வா
வா தீபத் திருநாளே!

உறவுகள் சிறையில்
நாமோ கண்ணீரின்
பாதையில்
தடைபோடும்
பயணங்களை நிறுத்த
ஓடி வா தீபத் திருநாளே!

நாளும் கேட்ட
குண்டுச் சிதைவுகளால்
சிதறிப் போன எம் வாழ்வு
மீண்டும் மலர்ந்து
முகங்களில் புன்னகை
பட்டொளி வீசி வரும்
இனிய தென்றலாய்
வா..வா தீபத் திருநாளே!

அச்சமும், பயமும் நீங்கி
தாயக உள்ளங்கள்
அழகிய பூவுக்குள்
இருக்கும்
கேசரத்தைப் போல
மென்மையாய் வரலாறு
படைக்க விரைந்து வா
இன்பத் திருநாளே!

சி.இன்பராஜ்,
மீசாலை வடக்கு.

**பத்திரிகையாளர்**

நீங்களும்
போராளிகள் தான்
பேனை முனைகள்
உங்களுக்கு
ஆயுதமாய் இருக்கும் வரை

**த.அசோக்குமார்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்.**

**நீ கட்டிய சமாதி**

பெண்ணே!
காதலெனும் மலரெடுத்து
கவிதையெனும்
நார் தொடுத்து
கல்யாணமெனும்
மாலை சூடும்
மங்கள வேளையில்
சாதியெனும் வில்லில்
சமயமெனும் நார் பூட்டி
பிரிவெனும்
அம்பு தொடுத்து
இதயமெனும்
மாளிகையில்
இடியென எய்து
இதயத்தை உடைத்து
இயமனிடம் உயிரை
அனுப்பி – என்
காதலுக்கு
நீ கட்டிவிட்டாய்
சமாதி!

சி.க.இசையழகன்,
கிளிநொச்சி.

**நாளை உன் பதில்**

*உணர்வை செடியாக்கி...*
*உயிரை நீராக்கி...*
*உன் நினைவை*
*அதில் பூவாக்கி...*
*வளர்த்தேன் காதல் மலர்...*
*கல்யாணத்திற்கு மலர்*
*மாலையாக*
*வருமா? என்*
*கல்லறைக்கு மலர்*
*வளையமாக*
*வருமா?*
*நாளை உன் பதிலிலே*
*எனது வாழ்வின்*
*இருளும்...விடிவும்...*

*பி.சசி,*
*நானாட்டான்.*

**ஆறுதல்வேண்டும்**

உன்னைக் காண
தவம் கிடக்கின்ற என்
கண்களுக்கும்,
உன்னோடு பேசுவதற்கு
தவிக்கின்ற என் நாவுக்கும்,
உன் குரல் கேட்க
துடிக்கின்ற என்
காதுகளுக்கும்,
உன்னை நினைத்து
உனக்காக ஏங்குகின்ற
என் மனதிற்கும் – நீ
எப்போது ஆறுதல்
தருவாய்?

**பீ.சியா,**
**ஊர்காவற்றுறை.**

**சீதனம்**

ஏய்! சீதனமே
எப்போது நீ வந்தாய்?
ஆதாமும், ஏவாளும்
வந்தபோது வந்தாயா?
மாமா கேட்கலாம்
மாமி கேட்கலாம்
கொண்டு வந்தாயா
சீதனம்? என்று
ஆனால்,
கணவன் கேட்கும் போது...
வாழ முடியுமா?
சொல் சீதனமே...
எப்போது நீ போவாய்?
நாம் நிம்மதியாய்
வாழ்வதற்கு...

மாது,
கோவிற்கடவை.

**அழகு**

நிறையவே நீ
கர்வப்படலாம்
பூக்கள் கூட
உன்னைப் பார்த்துப்
பொறாமைப்படுவதால்.

**கு.தவசீலன்,**
**விசுவமடு.**

**இறைவனிடம் கையேந்துவோம்**

துடைத்தவிட்டது
என் கைக்குட்டை
உன் கண்ணீரை!
உன் கண்ணீரைக் கூட
கரங்களால் துடைக்கமுடியாத
துரதிஷ்டக்காரி நான்!
நான் மட்டுமல்ல
நீயும் தான்
என் மெல்லிய கரங்களை
உன் வலிய கரங்களால்
ஸ்பரிசிக்கும் பாக்கியத்தைப்
பெற முடியாத துரதிஷ்டக்காரன்
துன்பத்தின் அனலிலே
துவண்டு கொண்டிருக்கும்
நாமிருவரும்
அதிஷ்டத்தையும்
துரதிஷ்டத்தையும்
உச்சரிப்பதில் அர்த்தமில்லை.
'இறைவா! எம் இருவரையும்
இந்தக் கொடிய
பிரிவிலிருந்து மீட்டு
ஒன்று சேர்த்து விடு
என கையேந்துவோம்
துன்பத்தைத் துடைக்கும்
இறைவனிடம்!

வே.தமருகா றொபட்,
கல்லடி

**காதல் தேர்தல்**

காதல் தேர்தலில்
வாக்குகள் தேவையென்றால்
எத்தனை வாக்குகள் தான்
செலுத்துவது – என்
காதலின் ஆழத்தைப்
புரிய வைக்க
அவ்வாறே வாக்குகள்
தேவையென்றால்
என் இறுதி மூச்சு வரை
உனக்கென
வாக்களிப்பேன்.

**ரம்.**

**துடித்திடுவாய் என்பதனால்..**

அன்பே!
என் நெஞ்சம்
பிரிவால் துவளும் போதும்
என் கண்கள்
முன்பு போல்
கலங்குவதில்லை.
ஏன் தெரியுமா?
நீ துடித்திடுவாய்
என்பதனால்...

**எஸ்.ஜெயா,**
**யாழ்.ஆவரங்கால்.**

**சகியே...**

ஓவியமாய் என் நெஞ்சின்
உணர்வுகளே ஒன்றிவிட்ட
காவியமாய் நிற்கின்றாய் – ஆவி
எனை விட்டுப் போனாலும்
என் நெஞ்சில் என்றும்
மனை கட்டி வாழ்ந்திடுவாய்.

த.மேரி தர்ஷினி,
யாழ்/பல்கலைக்கழகம்.

**உன் சிரிப்பு**

*நீ சிரித்தாய்*
*இன்னும் தான்*
*சேகரிக்க முடியவில்லை.*
*முத்துக்களையல்ல,*
*சிதறிப் போன*
*என் சிந்தனையை...*

கு.தவசீலன்,
விசுவமடு

**சுடரின் சுவாலை**

சுந்தரத் தமிழினிலே
சுதந்திரமாய்
சுடர் ஒளி என்னும் நாமம்
சுகந்தமாய் மணம் பரப்பி
உலகெங்கும் உன் சேவை
ஓங்கி வளர்ந்திட
ஒரு மனதாய் வாழ்த்துகிறேன்.

கயவர்களின் கங்கணமும்
காடையரின் போர்க்குணமும்
களங்கமில்லா உன்
சேவையினை அடக்கி ஆள
முயல்கின்றது.

துஷ்டர்களை துரத்தியடி
தூயவரை அணைத்துப் பிடி -
அடக்கியாளும்
இனவாதியை ஏறி மிதி
இன் முகத்தை இழுத்துப் பிடி
சுடரான உன் ஒளி
சுவாலையாக மாறும்
என்பதனை தைரியத்துடன்
எடுத்துக் காட்டு

**எஸ்.அருள்ராஜ்**
**பசறை**

**அரசியல் வாதி**

தேர்தல் காலமதில்
தொகுதி தொகுதியாய் சென்று
மேடை மேடையாய் ஏறி
முழங்கு முழங்கென்று
முழங்கி பற்பல
வாக்குறுதிகள்
அள்ளி வழங்கி
ஓட்டுகள் பெற்று
பதவிக்கு வந்து
ஆசனத்தில் அமர்ந்ததும்
செப்பியதை மறந்து
தன்னலம் பேணும்
போலி மனிதர்

**அ.யாழினி,**
**மட்டக்களப்பு**

**சுதந்திர ஏக்கம்**

சந்திரனும்
நட்சத்திரங்களும்
பிரகாசித்தாலும்
விடியும் வரை
இருளின் ஆதிக்கம்
இரவைக் கவ்வியபடி தான்.
அமைதிக் காற்றை
சுவாசித்து பல வருடங்கள்.
அநியாயமாய்
அழிந்து போன
உயிர்கள் பல்லாயிரம்
எமது சந்ததியாவது
சலனமற்ற சுதந்திர
வாழ்வைக் காணுமா?
தேசத்தில் சமாதானத்தை
நேசிக்கும் களங்கமற்ற
உள்ளங்கள் ஏக்கப்
பெருமூச்சுடன்
சமாதானத்துக்கெதிரான
இனவாதிகளின் ஈனக்குரல்
தடைகளின்றி ஓங்கி
ஒலிக்கின்றது.
யுத்தக் கருத்தரிப்பில்
கர்ப்பந்தரிக்கப்பட்ட
விதவைகள், அகதிகள்
உறவுகளை,
உடைமைகளை
இழந்தவர்கள் இன்னும்
இருள் சூழ்ந்த நிலையில்
இயற்கையும், அந்நிய நாடும்
கூட தடையாகவே.
பௌர்ணமி
நிலவொளியையாவது
காணவிடுங்கள்
இன்று இருந்து நாளை
அழிந்து போகும் நிலையற்ற
வாழ்வையுடைய மனிதன்
இன்னும் எத்தனை காலம்
தன்னை நேசிப்பது போல்
பிறரையும் நேசியாமல்
வாழப் போகிறான்?

ஜோ.கிறிஸ்டி,
களுத்துறைச் சிறைச்சாலை.

# சிரிக்க சிந்திக்க சிப்ஸ்

இந்தியப் பொலிஸார் இந்துக்கள் புனிதமாகப் போற்றும் ஏரி ஒன்றில் நிர்வாணமாக நீராடிய பெண் உல்லாசப் பயணி ஒருவர் மீது வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார்கள். இந்தப் பெண் நிர்வாணமாக நீராடிய பிறகு அவ்வாறே தான் தங்கியிருந்த ஹோட்டலுக்கும் நடந்து சென்றாராம்.

இந்தச் சம்பவம் இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் இடம் பெற்றுள்ளது.

இந்த உல்லாசப் பயணியின் தவறான நடமாட்டம் உள்ளூர்வாசிகளையும், மதகுருமார்களையும் சீற்றமடையச் செய்துள்ளது.

இந்தப் பெண் உல்லாசப் பயணி பின்லாந்தில் இருந்து இந்தியாவுக்கு வந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவருக்கு மூன்று மாதச் சிறை அல்லது அபராதம் தண்டனையாக வழங்கப்படலாம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

* * *

உலகிலேயே மிக உயரமானதும், அதிக தூரத்துக்கு மணம் பரப்பக் கூடியதுமான மலரொன்று ஜேர்மனியின் தலைநகரான பேர்லினில் மலர்ந்திருக்கிறது. இதன் உயரம் 18 சென்டி மீட்டராகும்.


ரிற்றான் அறும் (TITAN AR-UM) என்று பெயரிடப்பட்டுள்ள இந்த மலர் குறிஞ்சிப் பூவைப் போல மிகவும் அருமையாக மலர்கிறது. அத்துடன் இந்தத் தாவரம் அதிகமாகவும் இல்லை. இப்போது பதினொரு ஆண்டுகளின் பின்னர் இந்தப் பூ மலர்ந்திருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.



1875ஆம் ஆண்டு முதன் முதலாக இந்தோனேஷியத் தீவான சுமாத்திராவில் இந்த மலர் கண்டு பிடிக்கப்பட்டது. இப்போது உலகத்தின் சில பகுதிகளில் மட்டும் இதைக் காணக் கூடியதாக உள்ளது. பழுதடைந்த மீனைப் போல அல்லது அழுகிய நிலையில் உள்ள மிருகத்தைப் போல இது அதிக தூரத்துக்கு நாற்றமடிக்கும் என்று பேர்லினில் உள்ள தாவரப் பூங்காவைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

* * *

ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய கொங்கு நாட்டு சிங்கம் தீரன் சின்ன மலைக்கு சிறப்பு முத்திரைத் தலை வெளியிடப்பட்டுள்ளது. சென்னையில் நடந்த விழாவில் கலைஞர் கருணாநிதி இந்த முத்திரையை வெளியிட்டு வைத்தார்.



* * *

ஒரு போர்முனை!

வீரர்களை உற்சாகப்படுத்த ஒரு நடிகை போயிருந்தாள்.

வீரர்கள் வரிசையாக நின்று தங்களின் வீரப் பிரதாபங்களை நடிகையிடம் சொன்னார்கள்.

"ஒரு எதிரியைக் கொன்றேன்" என்று ஒரு வீரன் தெரிவித்தான்.

''எப்படிக் கொன்றாய்?'' என்று நடிகை கேட்டாள்.

''இந்தக் கையால் அடித்துக் கொன்றேன்'' என்று வீரன் கையைக் காட்டினான்.

நடிகை அவன் கையைப் பிடித்து மென்மையாக முத்தமிட்டாள்!

அடுத்த வீரனிடம் போனாள். அவனும் ஒரு எதிரியைக் கொன்றதாகக் கூறினான்.

"எப்படிக் கொன்றாய்?" என்று நடிகை கேட்டாள்.

''வாயால் கடித்துக் கொன்றேன்'' என்று வீரன், தன் வாயைக் காட்டினான்!

நடிகை விழித்தாள்!

* * *

10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியவர்கள் ஊடு பழங்குடி இனத்தவர். ஹைட்டி நாட்டின் தலைநகர் போர்ட் - ஹவ் - பிரின்சிலிருந்து 262 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கேப் ஹைதியன் என்னும் இடத்தில் வசிக்கிறார்கள்.

இவர்களுக்குத் தங்களது வம்சம் தான் உலகம் முழுவதும் பரவியிருக்கிறது என்பது இன்னும் தெரியவில்லை. ஆனாலும் தங்களின் பாரம்பரிய விழாக்களைக் கொண்டாடுவதில் இவர்களுக்கு மிகுந்த அக்கறை உண்டு. குல வழக்கப்படி வருடப் பிறப்பின் போது, தங்களது பகுதியில் உள்ள குளத்தில் ஆணும், பெண்ணுமாய் சேர்ந்து குளிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். அது சேறும் சகதியுமான குளமாக இருந்தாலும் சரி, அந்தக் குளத்தில் புனித நீராடுவதை வழக்கமாக வைத்துக் கொள்கிறார்கள்.

உலகத்திலேயே மிகவும் பழமையான மக்கள், முதன் முதலாக தோன்றிய மக்கள் என்று வரலாற்று நிபுணர்கள் கூறுவது ஹைதி நாட்டின் ஊடு பழங்குடி மக்களைத்தான்.

* * *

இது பாரிஸில் உள்ள ஈபிள் கோபுரம். ஆனால், இரும்பினால் செய்யப்பட்டது அல்ல. தென்னங்குச்சியில் செய்தது. செய்தவர், சென்னை அரும்பாக்கத்தைச் சேர்ந்த டோமினிக் என்ற இளைஞர்.



தாஜ்மஹால், பைசா நகரத்து சாய்ந்த கோபுரம் என்று பல உருவங்களை தென்னங் குச்சியில் அவர் செய்திருக்கிறார். இதற்காக குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் வாழ்த்துக்களைப் பெற்றுள்ளார்.

இப்போது முதல்வர் ஜெயலலிதாவின் உருவத்தை தென்னங் குச்சியில் செய்துள்ளார்.

* * *


செருப்பு தேயும் போது கால் ஜாக்கிரதையாகி விட வேண்டும்! வயது வளரும் போது பணச் சேமிப்பு பத்திரமாக இருக்க வேண்டும்.

**- கண்ணதாசன் -**

* * *

'என் முகத்தில் ஏன்
பருக்கள் வெடித்தன?
என் பருவத்தில் ஏன்
மலர்ச்சி அதிகமானது?
என் நடையில் ஏன்
தடுமாற்றம் வந்தது?
என் உடையில் ஏன்
மாறுதல் வந்தது?
என் கருத்தினில் ஏன்
கவிதை வந்தது?
அட! எனக்குக்
காதல் வந்தது.'

* * *



"அந்த டொக்டருடைய செஞ்சரி கனவு தகர்ந்தது' என்டு சொல்றாங்களே...?"

"அவர் இன்று நூறாவதாக ஒப்பரேஷன் பண்ண இருந்த நபர், நேற்றே இறந்துவிட்டார்."

"மொத்தத்தில் அவர் முந்திக் கொண்டார் என்று சொல்லுங்க..."

**இவ்வார பொன்மொழி**

வயதுகள் கூடலாம் குறையலாம், ஆனால் வாழுகின்ற நாட்களில் வரலாற்றில் எங்காவது ஒரு மூளையில் நம்முடைய பெயர் இருக்க வேண்டும்.

- கண்ணதாசன்



டி. இசையரசன்
தரம் - 6
பக்தி வேதாந்த சிறுவர் பள்ளி - மாபோல



கு. மேகலா
தரம் - 10
யா/ந.ம.வி



வி. நிஷாந்தினி
தரம் - 2ஏ
விவேகானந்தா கல்லூரி கொழும்பு



கே. கிஷாந்
ரோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம்
வத்தளை

# முட்டாள் மன்னன்

ஒரு நாட்டில் மன்னன் ஒருவன் இருந்தான். ஒரு நாள் அவன் வேட்டைக்குக் கிளம்பினான். அமைச்சரை அழைத்து "இன்று மழை பெய்யுமா?" என்று கேட்டான்.

அமைச்சர் வானத்தை நிமிர்ந்து பார்த்துவிட்டு, "இன்று மழை வரும் அறிகுறி இல்லை. அரசே , நீங்கள் வேட்டைக்குப் போகலாம்" என்று கூறினான்.

அரசன் வேட்டைக்குப் போனான். ஊரைத் தாண்டி குளக்கரை மீது போய்க் கொண்டிருந்தபோது, ஒரு சலவைத் தொழிலாளி துவைத்து காயப்போட்ட துணிகளை அவசர அவசரமாக எடுத்துக் கொண்டிருந்தான்.

"துணிகள் இன்னும் காயவில்லையே! அதற்குள் ஏன் எடுக்கிறாய் ?" என்று அரசன் கேட்டான்.

"மழை வரும் போலிருக்கிறது" என்று சலவைத் தொளிலாளி சொன்னான். அப்போது 'சட சட' என்று மழை வந்துவிட்டது!

'மழை வராது என்று, அமைச்சர் சொன்னாரே? ஆனால்,மழை வருவதை இவன் சொல்லிவிட்டானே!' "மழை வரும் என்று சொன்ன நீதான் இன்று முதல் என் அமைச்சர்" என்று அரசன் கூறினான்.

"இன்று மழை வருவதை என் கழுதைதான் சொன்னது! கழுதை காதுகளை நீட்டிக் கொண்டிருந்தால் மழை வரும்" என்று சலவைத் தொழிலாளி கூறினான்.

"ஓ! அப்படியா!" என்று வியந்த அரசன், கழுதையை அரண்மனைக்கு ஓட்டி வரச் சொன்னான்!

அரண்மனைக்கு வந்ததும் ,அமைச்சரை அழைத்தான். "இன்று முதல் இந்த கழுதைதான் என் அமைச்சர்! நீர் வீட்டிற்குப் போகலாம்!" என்றான்.

அமைச்சர் அதற்காகக் கவலைப்படவில்லை. 'முட்டாள் அரசனுக்கு கழுதைதான் அமைச்சராக இருக்கும்' என்று நினைத்துக் கொண்டே வீட்டுக்குக் கிளம்பினான்!



## உங்களுக்குத் தெரியுமா?

சிங்கராஜவனம் எந்த மாகாணத்தில் உள்ளது? - சப்ரகமுவா மாகாணம்

சிகிரியாவை அமைத்த மன்னன்? - காசியப்பன்

நீர்பாசனத் தெய்வம் எனப் போற்றப் படுபவர்? - மகா சேனன்

யாழ்ப்பாணத்தின் புராதன தலைநகரம் எது? - கந்தரோடை

இலங்கையின் புகழ் பூத்த முதல் மன்னன் யார்? - தேவ நம்பிய தீசன்

வி.நிலாவண்ணன்
செல்வநகர் - மன்னார்.

### அறிந்து கொள்ளுங்கள்

வேகமாக நீந்தும் மீன் எது? - சுறா

வேகமாக ஒடும் விலங்கு எது?- சிறுத்தை

நாக்கு இல்லாத பிராணி எது? - முதலை

சிறிய இதயம் கொண்ட மிருகம் எது? -சிங்கம்

நினைவாற்றல் கூடிய விலங்கு எது? - யானை

சத்தம் போடாத விலங்கு எது? - ஒட்டகச் சிவிங்கி

யே.டென்சி,
தரம் - 9, கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

## அறிவியல் விளக்கம்

மின்மினிப் பூச்சியிடம் ஒளி வீசும் தன்மை எவ்வாறு உண்டாகிறது?

மின்மினிப் பூச்சிகளின் ஒளியைப்பற்றி சரியான தகவல் கிடைக்கவில்லை. மின்மினியின் வெளிச்சத்திலுள்ள சிறப்பு, இங்கு வெப்பம் உருவாகுவதில்லை. இவ்வகை வெளிச்சத்தை 'லுமின ஸெனஸ்' என்கிறார்கள். இப்பூச்சியில் லூஸிஃபெரின் சேரும்போது வெளிச்சம் உண்டாகின்றது.

இரவில் பூக்கும் பூக்கள் வெள்ளை நிறமாக உள்ளது.

பூக்களில் மகரந்தச் சேர்க்கை நிகழ பூச்சிகள் அவற்றை நாடிவரவேண்டும். அதனால் தான் இரவில் பூக்கும் பூக்கள் பூச்சிகளுக்கு தெதியத் தக்க விதத்தில் வெள்ளை நிறம் உடையவையாக உள்ளன.

எஸ்தர். ஜெபிக்கா
தரம் 10 - சீ
யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

## உங்கள் கைவண்ணம்



கே. நதியா
சித்தன் குறிச்சி
பூநகரி



ம. விஜித்
தரம் - 9சீ
யா/உடுப்பிட்டி அ. மி. கல்லூரி
யாழ்ப்பாணம்



கோபிராஜ்
தரம் - 3
கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி
கல்கிசை.



பெ. சோபனா
தரம் - 6பீ
கொ/நல்லாயன் தமிழ் மகளிர் வி.



# தலைவலிக்கும் தகுந்த வைத்தியம் தேவை

**கேள்வி: பெண்-வயது 18. அடிக்கடி தலைவலி வருகின்றது. இதனால் தொடர்ந்து 'பரசிற்றமோல்' (PARACETAMOL) மாத்திரைகளை அடிக்கடி உபயோகித்து வருகிறேன். எனது நண்பர்கள் இது தவறு பாரிய பக்க விளைவுகள் ஏற்படும் என்று பயமுறுத்துகின்றார்கள். அஸ்பிரின் மாத்திரைகள் பக்க விளைவுகள் தரும் என்பதை அறிவேன். நான் உபயோகிக்கும் மாத்திரைகள் அபாயமானவையா?**

பதில்: எந்த மருந்தையும் நீண்ட காலம் உபயோகிப்பது விரும்பத்தக்கதல்ல. மருந்துகள் பற்றி தெரிந்த பக்கவிளைவுகள் கொஞ்சமே. தெரியாத பிற்காலத்தில் விளைவுகளைத் தரக்கூடிய, நிறமூர்த்தங்களில் மாற்றத்தை ஏற்படுத்தி சந்ததியை பாதிக்கக்கூடிய பக்கவிளைவுகளை அறிந்து கொள்ள காலம் செல்லும். விளைவுகள் இருந்தாலும் அறியப்படாமலே போய் விடும் என்பது ஜீரணிக்க முடியாத உண்மை.

உங்களைப் பொறுத்த மட்டில் தலைவலி என்பது நோய் அல்ல. அது நோயின் அறிகுறி. எந்த நோயின் அறிகுறி என்பதற்கு வேறு ஏதாவது குறிகளையோ, நோய்களையோ உங்கள் கடிதத்தில் தராதுவிடுத்து - பொதுவாகவே தலைவலி ஏற்படக்கூடிய காரணங்களை வரிசைப்படுத்துகின்றேன்.

ஒரு தகுந்த வைத்தியரிடம் உங்களைப் பரிசோதித்து நோயை நிதானித்துக் கொள்ளுங்கள். பொதுவாகவே உங்கள் வயதினருக்கு - ஏற்படும் மன இறுக்கம் பீனிசத் தொற்று, காதினுள் தொற்று என்பன தலைவலியைத் தரும்.

இது தவிர ஒற்றைத் தலைவலி என்கின்ற மிகிறேயின் (MIGRAINE) தலைவலியும் உங்கள் வயதினருக்குப் பொதுவாக ஏற்படுவதுண்டு. இவற்றை தவிர மூளையில் கட்டிகள், இரத்த அழுத்தம் என்பவற்றினால் ஏற்படும் தலைவலி உங்கள் வயது பராயத்தினருக்கு ஏற்படும் வாய்ப்பு குறைவு. உங்களைப் பரிசோதிக்கும் டாக்டர், தலையை எக்ஸ்றே படம், மூளை அலைகளைப் பதியும் E E G (ELECTRO ENCEPHCOGRAM) MRI ஸ்கான் போன்ற பரிசோதனைகளை எழுதக்கூடும். எனவே. தலைவலி வரும் போதெல்லாம் மாத்திரைகள் போடுவது தவறு. நீங்கள் குறிப்பிட்ட மாத்திரை நீண்டகால உபயோகத்தில் ஈரல், சிறுநீரகம், எலும்பு, மச்சை என்பவற்றைத் தாக்கி அழிக்கக்கூடியது. அது மாத்திரமல்ல உங்கள் தலைவலியும் காலம் செல்லச் செல்ல இந்த மாத்திரைக்கு தீராமல் இதைவிட வீரியம் கூடிய மருந்துக்கு உங்களை அழைத்துச் செல்லும். உடனேயே ஒரு நரம்பியல்(NEUROLOGIST) நிபுணரை நாடுவது நல்லது என நான் எண்ணுகின்றேன்.

**கேள்வி: பெண். வயது 14. கண்கள் அடிக்கடி அரிக்கின்றன. அரிப்பைக் குறைக்க கண்களைக் கசக்கினால் - வீக்கமும் கண்ணீரும் வருகின்றது. இது எதற்காக?**

பதில்: உங்கள் நிலைமைக்கு ஒவ்வாமை(ALLERGY) ஒரு காரணமாக இருக்கலாம். சிலருக்கு ஒரு குறிப்பிட்ட காலங்களில் மாத்திரம் இப்படி ஏற்படுவதுண்டு. உதாரணமாக- காற்று வீசும் போது, கோடை காலங்களில், தூசி, மகரந்த துணிக்கைகள் என்பவற்றால் ஒவ்வாமை ஏற்பட்டு கண்கள் அரிப்பு எடுக்கக்கூடும். அது தவிர உங்கள் உணவுகள் கூட ஒவ்வாமைக்குக் காரணமாக இருக்கலாம்.

எதற்கும் உங்கள் கண்களை கண் வைத்தியரைக் கொண்டு பரிசோதியுங்கள். பார்வைக் கோளாறுகள் கூட சில வேளைகளில் இப்படி அரிப்பை ஏற்படுத்துவதுண்டு. பீனிசம் எனப்படுகின்ற SINUSITIS நோயின் ஓர் அறிகுறிகூட.

நீண்ட நேரம் வாசிப்பது, நீண்ட நேரம் தொலைக்காட்சி பார்ப்பது, நீண்ட நேரம் கணினிகளில் தொழில் செய்வது, குறைந்த வெளிச்சத்தில் படிப்பது, தையல் வேலை செய்வது என்பன - கண்களின் பாதுகாப்பு தொழிலான இமைவெட்டும் வேலையை புரியவிடாமல் வைப்பதால் கண்களில் ஒருவித வரண்ட தன்மை ஏற்பட்டு (DRY EYES) அரிப்பு ஏற்படலாம். இவற்றில் ஏதாவது காரணம் இருக்கின்றதா என்பதை உங்கள் கண் வைத்திய நிபுணர் கண்டறிந்து சிகிச்சை தருவார்.

**கேள்வி: வயது 22 பெண். திருமணமாக உள்ளேன். பெற்றோர் பேசி வைத்த வருங்கால கணவர் - திருமணத்திற்கு முன் என்னுடன் உடல் உறவு வைத்துக்கொள்ள விரும்புகின்றார். மறுக்கமுடியாத சூழ்நிலையில் - இரு தடவைகள் சம்மதித்து உறவு கொண்டேன். உடல் உறவு கொள்ளப்பட்ட அடுத்தநாள் காலையும் மாலையும் உபயோகிக்க இரண்டு மாத்திரைகள் தந்தார். இம்மாத்திரைகள் கர்ப்பம் அடைவதைத் தவிர்க்கும் என்று கூறினார். எமது திருமணம் நடைபெற இன்னும் சில மாதங்கள் ஆகலாம். எனவே, இப்படி மாத்திரைகளை உபயோகிப்பது பிற்காலத்தில் ஏதாவது பிரச்சினைகளைத் தருமா? இப்படி திருமணத்திற்கு முன் உறவுகள் சரியானதா?**



பதில்: திருமணத்திற்கு முன் உடலுறவு என்பது - மேலை நாட்டிலிருந்து எமது நாட்டிற்கு பரவியுள்ள புதிய கலாசாரம் ஆகிவிட்டது. இது சரியா பிழையா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் சம்பந்தப்பட்டவர்களே. திருமணத்துக்கு முன் உடலுறவு என்பது இருவரின் புரிந்துணர்விலும், நம்பிக்கையிலும் நடப்பதென்றால் - பிரச்சினையே இல்லை என்கின்றனர் சிலர்.

ஆனால், ஆண்வர்க்கம் சில வேளைகளில், திருமணத்துக்கு முன்னரே உறவுகளை வைக்க சம்மதித்தவள் என்பதால் காம உணர்வு அதிகம் கொண்டவளாயிருப்பாளோ, முன்னரே இதில் அனுபவம் பெற்றிருப்பாளோ என்று ஆசை அறுபது நாளும் மோகம் முப்பது நாளும் தீர்ந்த பின்னர் சந்தேகிக்கலாம்.

அது போல் பெண்களும் கூட எனது எதிர்கால கணவர் கொஞ்சக் காலம் பொறுத்திருக்க முடியாதவர் - பிற பெண்களின் சகவாசம் கொண்டவராக, ருசிகண்ட பூனையாக இருந்திருப்பாரோ என்று சந்தேகம் கொள்ளலாம்.

இது சிறு விதையாக வளர்ந்து பிற்காலத்தில் - வெளிப்படையாக வெளிப்படாவிடினும், வேண்டாப் பெண்டாட்டி கை பட்டாலும் குற்றம், கால் பட்டாலும் குற்றம் என்ற ரீதியில் குடும்பப் பிரச்சினைகள் உருவாகலாம் என்பதை மனோவியலாலர்கள் அறிவித்துள்ளார்கள். எனவே, உங்களிருவரிடமும் புரிந்துணர்வும், விட்டுக் கொடுக்கும் மனப்பாண்மையும் இத்தகைய உறவுக்கு அவசியம்.

அடுத்து நீங்கள் உபயோகிக்கும் மாத்திரை - MORNING AFTER PILL என்ற குடும்ப உறவுக்குப்பின் அடுத்தநாள் காலை - கர்ப்பத்தடைக்கு உபயோகிக்கப்படும் LEVONOGESTREL ஹார்மோன் வகையைச் சேர்ந்தது. இந்த ஹார்மோன், கருவுற்ற முட்டை கருப்பையில் பதியக்கூடிய சூழ்நிலையை மாற்றி விடுகிறது. இந்த மாத்திரையை உடல் உறவு ஏற்பட்டு 72 மணித்தியாலத்திற்குள் உட்கொள்ள வேண்டும். வாந்தி, வயிற்றுப்பிரட்டல், தலைவலி, வயிற்றுவலி, களைப்பு போன்ற சில பக்க விளைவுகள் சிலருக்கு இருக்கலாம். இது தவிர வேறு பிரச்சினைகள் இல்லை. ஆனால், திருமணம் முடியும் வரை தொடர்ந்து இந்த மாத்திரைகளை நம்பி இருப்பதை விட கருத்தடை மாத்திரைகளை அல்லது கருத்தடை ஊசியை உபயோகிப்பது விரும்பத்தக்கது.

**கேள்வி: பெண் வயது 24 திருமணம் ஆகி ஒரு குழந்தை உள்ளது. தற்காலிகமாகக் கருத்தரிக்காமல் இருப்பதற்கு குடும்பக்கட்டுப்பாட்டு வில்லைகள் நல்லதா? அல்லது கருத்தடை ஊசி மருந்து நல்லதா? எனக்கு ஏற்ற கருத்தடை முறை என்ன?**

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு - 14

பதில்: பின்பற்ற வேண்டிய கருத்தடை முறை ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒவ்வொரு விதமாக வித்தியாசப்படும். பொதுவாக எந்த கருத்தடை முறையையும் கைக்கொள்வதற்கு முன்னர்- வைத்தியர் உங்களை நன்றாகப் பரிசோதிப்பார். உங்களுக்கு இரத்த அழுத்தம், கொழுப்புச் சத்து, நீரிழிவு நோய், இதய நோய்கள் என்பவைகள் ஏதாவது இருந்தால் - உங்கள் பரம்பரையில் இந்த நோயால் பீடிக்கப்பட்ட பெற்றோர் - சகோதரர்கள் இருந்தால் - கருத்தடை மாத்திரைகளோ - ஊசி மருந்துகளோ - தவிர்க்கப்பட வேண்டியவை

இந்த இரண்டு முறைகளிலும் உபயோகிக்கப்படும் மருந்து ஒன்றேதான். ஒன்று தினமும் விழுங்கப்பட்டு - வயிற்றிலிருந்து உறிஞ்சப்பட்டு - தனது கருத்தடை தொழிலைச் செய்கின்றது. அதே மருந்து ஊசிமூலம் தசையில் போடப்பட்டு தொடர்ந்து 3 மாதம் தனது கருத்தடை பயனைத் தருகின்றது. அப்படியே மேல் குறிப்பிடப்பட்ட தவிர்க்கப்பட வேண்டிய நோய் இல்லாவிடிலும் இம்மாத்திரைகளையோ ஊசிகளையோ தொடர்ந்து உபயோகிக்கும் போது- உங்கள் இரத்த அழுத்தம், கொலஸ்ரோல் அளவு என்பன அடிக்கடி கண்காணிக்கப்படவேண்டும். தொடர்ந்து கருத்தடை மாத்திரை, ஊசி என்பவற்றை உபயோகிப்பவர்களுக்கு - அவர்களின் ஹோர்மோன்கள் சுரப்பில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக - இவற்றின் உபயோகத்தை கைவிட்ட பின்னரும்- ஒரு சில காலத்திற்கு தற்காலிக மலட்டுத்தன்மை ஏற்படுவதுண்டு.

கருப்பை- கருப்பை வாசல் என்பவை நலமாக இருந்தால் லூப் சாதனங்கள் - கருத்தடை வளையங்களை (COPPER T. INTRA UTERINE DEVICES) உபயோகிக்கலாம். இவற்றை உபயோகிக்கும் போது கருத்தடை ஊசிகளை எடுப்பதால் ஏற்படும் மாதவிலக்குத் தடை போன்ற பிரச்சினைகள் இருக்காது. இவை கருப்பையில் 5 வருடங்களாவது எதுவித பிரச்சினையும் இல்லாமல் இருக்கலாம். எனவே, உங்கள் பகுதி வைத்தியரின் ஆலோசனையைப் பின்பற்றுங்கள்.

# தள்ளிப்போகும் மாதவிடாய்



பெண்களுக்கே உரிய பேறு தாய்மை அடைதல். அதன் தொடக்கம், பூப்பெய்தல். 10 வயது முதல் 15 வயதுக்குள் எந்த நேரத்திலும் சிறுமிகள் பூப்பெய்வது உண்டு. குளிர் நாடுகளில் வழ்பவர்கள் 20 வயதில் கூட பூப்படைகிறார்கள். பூப்பெய்தலின்போது 110 கிராம் முதல் 180 கிராம் எடை வரை குருதிப்போக்கு உண்டாகும். அதைத் தொடர்ந்து மாதா மாதம் வீட்டு விலக்கு ஏற்படும்.

28 நாட்களுக்கு ஒருமுறை மாதவிடாய் வரும். இந்த சுழற்சி சீராக இருந்தால்தான் கருத்தரிப்பு உண்டாகும்.

மாதவிடாய் சுழற்சி பெண்ணுக்குப் பெண் மாறுபடும். 21 நாளிலிருந்து 35 நாட்களுக்குள் மாதவிடாய் சுழற்சி வந்தால் தப்பில்லை. ஆனால், இந்த சுழற்சி தவறக் கூடாது.

### தாமதமான மாதவிடாய்

சிலருக்கு முறை தவறிய மாதவிடாய் வருவதுண்டு. ஒரு மாதவிடாய்க்கும் அடுத்ததுக்கும் இடையே 42 நாள் வரை தள்ளிப் போனால் ஏதோ பிரச்சினை இருப்பதாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

பூப்பெய்திய முதல் இரண்டு ஆண்டுகளில் நாள் தவறிய, தாமதமான மாதவிடாய் சுழற்சி இருக்கும். அதை பொருட்படுத்த வேண்டியதில்லை.

ஏனெனில், இந்தக் கால கட்டத்தில் உடலில் சுரக்கும் ஊக்கிகள் மாதவிடாய் சுழற்சிக்கு ஏற்ப தன்னை தயார் படுத்த முடியாத சூழ்நிலை இருக்கும்.

### மன அழுத்தம்

பெண் கருத்தரித்தால் மாதவிடாய் தாமதமாகும். அல்லது பாதுகாப்பற்ற உடலுறவாலும் மாதவிடாய் தாமதப்படலாம். மனக்கவலை, மன அழுத்தம் இருந்தாலும் மாதவிடாய் தாமதமாகலாம்.

இளைய தலைமுறை பெண்களுக்கு வேலை தொடர்பான பிரச்சினையால் மன அழுத்தம், எளிதில் உணர்ச்சி வசப்படுதல், கவலை போன்றவை உண்டாகின்றன. இதுவும் தாமதத்துக்கு காரணம் ஆகும்.

கடுமையான காய்ச்சல் போன்ற உடல் நலக்குறைவும் காரணமாக இருக்கலாம்.

### எடை கட்டுப்பாடு

பெண்களின் எடை கூடினாலோ அல்லது குறைந்தாலோ மாதவிடாய் சுழற்சி மாறுபடும். கடுமையான உடற்பயிற்சி, விளையாட்டு, விரதம் இருந்தாலும் மாதவிடாயில் பாதிப்பு உண்டாகும்.

இடம் விட்டு இடம் மாறிச் சென்றாலும் அதன் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ப மாதவிடாய் தாமதமாகலாம்.

கருத்தடை மாத்திரை சாப்பிடும் பெண் அதை நிறுத்தியிருந்தாலும் முறை தவறி மாதவிடாய் வரும்.

தைராய்டு சுரப்பி, கபச் சுரப்பி, கருமுட்டைக பிரச்சினையாலும் மாதவிடாய் கோளாறு ஏற்படும்.

### மருத்துவம்

மனக்கவலை, உடல் சோர்வு போன்றவற்றால் உண்டாகும் தாமதமான மாதவிடாய்க்கு தீர்வு உண்டு. அது குணமானதும் மாதவிடாய் கோளாறு தானாகவே சரியாகும்.

பிற பிரச்சினையால் உண்டான மாதவிடாய் தாமதத்துக்கு மருத்துவரை கலந்து ஆலோசிப்பது சரியான தீர்வாகும்.

சிலருக்கு மாதவிடாய் இல்லாத காலத்திலும் இரத்தப் போக்கு உண்டாகும், பிறப்புறுப்பு, கருப்பையில் ஏற்படும் கோளாறால் இந்த இரத்தப் போக்கு வருகிறது. கருப்பை புற்று, சவ்வு கட்டிகள், புண்கள் ஆகியவற்றாலும் இரத்தம் வரலாம். மருத்துவரிடம் போய் வைத்தியம் செய்து கொள்வது நல்லது.

கருத்தரிக்க ஒழுங்கான மாதவிலக்கு அவசியம். எனவே, பெண்கள் இதில் கவனமாக இருக்க வேண்டும்.

# இந்தியா அதிர்கிறது

இந்தியாவின் தலைநகர் புதுடில்லி அதிர்ந்தது. நூறு பேர் வரை உயிரிழந்தனர். 200 பேருக்கு மேல் படுகாயமுற்றனர்.

கடந்த 29ஆம் திகதி சனிக்கிழமை புதுடில்லியின் பஹார் பஞ்ச், சரோஜினி நகர், கோவிந் பூரி ஆகிய மக்கள் நடமாடும் சந்தைப் பகுதிகளை வைத்து நடந்த தொடர் குண்டு வெடிப்பிலேயே இந்த நெஞ்சை உருக்கும் சம்பவங்கள் நிகழ்ந்தன.

வெடித்த மூன்று குண்டுகளும் மிகவும் சக்திவாய்ந்தவை என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சம்பவதினத்தன்று மாலை 5.30 மணியளவில் பஹார் பஞ்ச் சந்தைப்பகுதியில் முதலாவது குண்டு வெடித்தது. குண்டு வெடித்த இடத்தைச் சுற்றியிருந்த பல கடைகள் சின்னாபின்னமாகின. பலர் உடல் சிதறிப் பலியாகினர். இங்கு ஸ்கூட்டரில் மறைத்து வைக்கப்பட்ட குண்டு ஒன்றே வெடித்ததாக பொலீசார் தெரிவித்தனர்.

அரைமணி நேரம் கழித்து சரோஜினி நகர் சந்தைப் பகுதியில் மோட்டார்சைக்கிளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சக்திவாய்ந்த இரண்டாவது குண்டு வெடித்ததில் 30க்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.



மாலை ஆறு மணிக்கு கோவிந் பூரி என்ற இடத்தில் பஸ் ஒன்றின் உள்ளே வைக்கப்பட்டிருந்த மூன்றாவது குண்டு வெடித்தது. இதில் பத்துப்பேருக்கு மேற்பட்டோர் இறந்திருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்து டில்லி முழுவதும் பொதுமக்கள் அச்சத்தில் உள்ளனர். இந்தக் குண்டு வெடிப்புகளை அடுத்து அனைத்து சந்தைப் பகுதிகளையும் மூடுமாறு பொலிஸார் உத்தரவிட்டனர்.

இந்தத் தாக்குதலின் சூத்திரதாரிகளைத் தேடி பொலீசார் தீவிர புலன் விசாரணைகளில் ஈடுபட்டு உள்ளனர். குண்டுகள் மிக மிகச் சக்தி வாய்ந்தவை என்றும் இவ்வாறான குண்டுகளை வெடிக்கச் செய்வதில் அல்குவைதா தீவிரவாதிகளே கைதேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது

மின்னனுத் தொழில் நுட்பத்தைப் பயன் படுத்தி இந்தக் குண்டுகள் வெடிக்கவைக்கப்பட்டுள்ளன எனறு தெரிவித்த பொலிசார் குண்டு வெடிப்புக்குக் காரணமானவர்களை புலன் விசாரணை செய்பவர்கள் நெருங்கிவிட்டனர் என்றும் அறிவித்துள்ளனர்.

குண்டுகள் வெடிப்பதற்கு முன்பும், பின்பும் டெல்லியில் இருந்து காஷ்மீருக்கும், பாகிஸ்தானுக்கும் தொலைபேசித் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன என்றும், தொலைபேசி உரையாடல்களில், "வெற்றி" எனக் கூறி சிலர் மகிழ்ச்சி அடைந்தனர் என்றும் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதலுக்கு 'இஸ்லாமிக் இன்குலாப் மகஸ்' என்ற புதிய அமைப்பு உரிமை கோரி உள்ளது. இந்த அமைப்பு பாகிஸ்தான் ஆதரவுத் தீவிர அமைப்பான 'லக்ஸர் - இ - தொய்பா' அமைப்பின் உப பிரிவாக இருக்கலாம் எனத் தெவிவிக்கப்பட்டுள்ளது.

குண்டு வெடித்த சமயம் திரிபுராவில் இருந்த பிரதமர் மன்மோஹன் சிங் அவசரமாக டில்லி திரும்பினார். குண்டு வெடிப்புப் பற்றி அவர் கருத்து வெளியிடுகையில் "இது அப்பாவி மக்கள் மீது நடத்தப்பட்ட கோழைத்தனமான தாக்குதல். இத்தகைய தாக்குதல்களினால் இந்திய மக்களை தோற்கடிக்க முடியாது" என்று கூறினார். இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் இந்தக் குண்டு வெடிப்பினால் தாம் அதிர்ச்சி அடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், இந்தச் சம்பவம் மிகவும் கொடுமையானது தீவிரவாதத்தை எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ளமுடியாது என்று கூறி இருக்கிறார். அதே சமயம் பிரிட்டிஷ் பிரதமர் டோனி பிளேயர் தீவிரவாதம் இன்னும் தலைவிரித்து ஆடுகிறது என்பதை இந்தச் சம்பவம் உணர்த்துகிறது என்று சொல்லியிருக்கிறார்.

குண்டு வெடிப்பில் உயிர்நீத்தவர்களின் குடும்பங்களுக்கு தலா மூன்று லட்சம் ரூபா உதவித் தொகை வழங்கப்படும் என்றும் காயமடைந்தவர்களுக்கு நிவாரணமாக ரூபா 50 ஆயிரம் வழங்கப்படும் எனவும் புதுடில்லி மாநில அரசு அறிவித்துள்ளது.

இன்னும் சில நாட்களில் இந்தக் குண்டு வெடிப்புச் சம்பந்தமாக பல அதிர்ச்சி தரும் தகவல்கள் வெளியாகும் என புலன் விசாரணைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் கூறியுள்ளனர். அது வரை பொறுத்திருப்போம்.




## பரத நாட்டிய அரங்கேற்றம்

கலாசூரி திருமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் நாட்டியக் கலாமந்திர் மாணவி செல்வி. கௌஷினி குமாரஜீவாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நடைபெறும். சபாநாகர் டபிள்யூ. ஜே. எம். லொக்கு பண்டார நிகழ்வுக்கு தலைமை வகிப்பார்.



## தலைமுடியைப் பாதுகாக்கும் உதிர்வதைத் தடுக்கும்

## பயோட்டினெக்ஸ்-E

**பயோட்டினெக்ஸ்-E** தலைமுடி உதிர்தல், உடைதல், நுனி வெடித்தல் ஆகியவற்றை முற்றாகத் தடுப்பதோடு சருமத்தில் சுருக்கம் விழுவதைக் குறைத்து அதனை மென்மையாகப் பாதுகாக்கும். விட்டமின் E, விட்டமின் H ஆகிய இரண்டுமே மிகச்சரியான அளவில் அடங்கியுள்ளதால் உங்கள் கேசத்திற்கும் சருமத்திற்கும் நிறைவான போஷாக்குத் தரும்.

**பயோட்டினெக்ஸ்-E** ஆரோக்கியமான கேசத்தையும் மென்மையான சருமத்தையும் பெறும் உங்கள் ஆசைக்கனவை நனவாக்க, தினமும் இரண்டு கெப்சூல் **பயோட்டினெக்ஸ்-E** எடுங்கள்.




**எச்சரிக்கை!**
போலி உற்பத்திகள் உள்ளதால் விட்டமின் E + H அடங்கிய **பயோட்டினெக்ஸ்-E** என்று கேட்டு வாங்குங்கள்

அருமையான கூந்தல்... அழகான மேனி...

இறக்குமதிசெய்து விநியோகிப்போர்:
ஆர்கெம்-கொழும்பு. தொலைபேசி :2470290



## HOTEL WESTEERN (PVT) LTD



Danial Banquet Hall (டேனியேல் பென்குவட் மண்டபம்) முற்றும் குளிரூட்டப்பட்ட 400 பேர் அமரக்கூடிய திருமண மண்டபம், தரமான உணவு வகைகளுடன் கூடிய சிறந்த உபசரிப்பு சேவை, இலங்கை சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விருந்தினர்களுக்கான இலவச காப்புறுதி.

சிறந்த பராமரிப்பு சேவையுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகள், தொலைபேசி, I.D.D., தொலைக்காட்சி, மினிபார், ரெஸ்டூரண்ட், பார், விருந்துபசார மற்றும் மாநாட்டு மண்டபம், விமான நிலையத்துக்கான போக்குவரத்து, வாடகை கார் மற்றும் கடன் அட்டை வசதி போன்ற உன்னத சேவைகள்.

**No. 35, Frankfourt Place, Bambalapitiya, Colombo - 04**
T.P. : +94 11 2507161, +94 11 2507162, +94 11 2507163, +94 11 4518485
Fax : +94 11 4518481 E-mail : info@hotelwesteern.com
Website : www. hotelwesteern.com



## EXPOAIR எக்ஸ்போ எயார்

your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...



யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com





இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரங்சுபா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்டமாக் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2005, நவம்பர் 6 ஆம் திகதி வெளியிடப்பட்டது.